உ

கடவுள்துணை.

பெரியபுராணம்

அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒருவராகிய

திருநாளைப்போவாரென்னும்

# நந்தனார்சரித்திரக்

## கீர்த்தனை.

சிதம்பரக்கும்மி.

---

இஃது,

திருவெண்காடு.

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

—[*]—

திருவொற்றியூர்.

பரசுராமமுதலியார்

குமாரர்.

கன்னியப்பமுதலியார்

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

—*—

1895.


நடராஜர்.
நந்தி.
நந்தனர்.

உ

கடவுள்துணை.

# கதையின்வரலாறு.

திருவெண்ணீறுதரித்தபரமசிவனார் திருக்கொலு வீற்றிருக்கும் வெள்ளிமலையானது இமயமலையின் பக்கத்திலிருக்கின்றது அது பெரியோர்கள்பரிசுத்தமனம்போலவும் படிகம்போலவும் பலவுலகிற் புண்ணியங்களெல்லாம் திரண்டுருண்டொருவடிவாகப் பிரகாசிக் கின்றது போலு மிருக்கின்றது அதில் ருக்குயசுர்சாமம் அதர்வணம்என்னும் நான்குவேதங்களினோசையும் வித்தியாதரர் வீணையோசையும்யானைகளுடையமுழக்கமும் வானதுந்துமிமுழக்கமும் இணிவிடாதிருக்கின்றன அன்றியும்தேவர்கள் சிரமலைகளும் கற்பகமாலைகளும்பற்பலமுனிவர்களஞ்சலிசெய்து சாத்துமலர்மாலைகளுங் அம்மலைப்பக்கங்களெங்கும் நெருங்கியிருக்கின்றன அதுஅமரர்சித்தர்அசரர்தைத்தியாகருடாகருடர் கின்னரர்கிருகர் கிம்புருடர்கந்தருவர் இயக்கர்விஞ்சையர்பூதர்பைசாகர் அந்தரர்முனிவர் உறகர்ஆகாயவாசிகள் போகபூமியார் என்னும் இப்பதினெண்கணுக்குந்துக்கப்படத்தக்கது அக்கயிலாய மலையின் மேல் கோடாகோடிசூரியப்பிரகாசம்போலும் விளங்குகின்ற நவமணிகள்பதிக்கப்பட்ட திருக்கோயிலுக்குமுதல் கோபுரவாயிற்காவற்றலைவர்நந்திதேவர் அப்பரமசிவன் திருப்பணிவிடைகளுக்கும் திருக்கொலுவிற்கு அதிகாரத்தலைவர் அவாவுடையவாளும் திருப்பிரம் பெற்றுக் கைலையைக்காக்கப்பட்டவர் தேவர்முதலானயாவர்கள் மேலானவர்பரமசிவனிடத்து அதிசபக்தியும் அன்புடையவர்இவரால் இரவும்பகலும் இடைவிடாமல் காக்கப்பட்டவெள்ளிமலையென்னும்கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களிலும் நிச்சயசமயம்சைவசமென்று எக்கடவுளிலும்பரமசிவனேமெய்க் கடவுளென்றும்அறிந்தவர்உபமன்னியமகாமுனிவர் இவர்கிருஷ்ணனுடையதலையின்மேல் தம்முடையகிருபையால் திருப்பாற்கடலைக்குடித்தவர் சிவனிடத்திலளவிடாத வன்புள்ளவர்

இந்தஉபமன்னியமகாமுனிவர் தம்மிடத்தில்அடியார்களும் பெரியோர்களும் முனிவர்களும் புடைசூழ்ந்திருக்கின்றசமயத்தில் அவ்விடத்தில் ஆயிரஞ்சூரியகிரகங்கள் ஒன்றாகத்திரண்டாற்போலும் ஒரு பிரகாசந்திரண்டுதோன்ற அங்கிருந்தவர்களெல்லோரும் உபமன்னியமகாமுனிவரைநோக்கி இதென்னஆச்சரியம் இப்படிப்பட்டபிரகாசந்தோன்ற வேண்டியகாரணமென்னவென்றுகேட்க.

## உபமன்னியர்சிவனைத்தியானித்துச்சொல்லுகிறார்.

தென்றிசையில் ஆதனூரில்அவதரித்ததிருநாளைப்போவார் என்னுந்திருநாமம்பெற்றவர் சிவனதுதிருவருளால்வருகிறாரென்று இருகரமுஞ்சிரமேற்குவித்து அத்திசையைநோக்கிவந்தனஞ்செய்து ஆனந்தக்கண்ணீர் அங்கமெங்குஞ்சிந்த உபமன்னியர்போகும்போதுமற்றவர்கள் தங்களுக்குண்டாகிய சந்தேகந்தீரும்படி கேட்கத்தொடங்கினார்.

எங்களாண்டவராகியமுனிவரே சிவனுடைய திருவடிகளையல்லாமல்மற்றொருதெய்வத்தினடிகளையும் வணங்கமாட்டீரோ இப்போது வணங்கவேண்டியகாரணமென்னவென்று முனிவர்கேட்கஉபமன்னியர் சொல்லுகிறார்கேளுங்கள் பெரியோர்களே முனிவர்களே மற்றுமுள்ளவர்களே பரமசிவன்தரிக்கப்பட்ட திருமாலையும் திருவெண்ணீற்றையும் அணிகின்றவர் அள்ளிடமில்லாது நிறையுங்கொள்ளிடநதிசூழ் நல்சோழவளநாட்டிலிருக்கும் மேற்காட்டில்ஆதனூரில் தீண்டப்படாதவக்குலத்தில் சேற்றிற்செந்தாமரை யுற்பத்தியானாற்போலும் நந்தனாரொருவர்பிறந்தார் அவர்விவேகசூட்சியும்வெட்டிமைத்தனமாகிய காணியாட்சியும் சிவபணிவிடைகள்மாட்சியும் சிவனடியாரைக்காணும் கண்காட்சியும் உடையவர் இவர்குலாசாரத்தன்மையும் நன்மையுஞ்செய்துபலற்பெய்து தாம்சிவபூசைசெய்து சிவாலயங்களுக்கு அறையும்பேரிகைமத்தளங்களுக்குத் தோலும்வாரும்யாழுக்குநரம்பும் சுவாமிக்குகோரசனையும் முறையாகவும் இமையாகவும்கொடுத்துவருவார் சிவாலயத்தில்அந்திசந்தியிற்போய் தூரத்திலிருந்து மனங்கசிந்துருகிச் சிவனைப்பாடியாடிவரும்நாளையில திருப்பன்கூரில் பரமசிவத்தைதரிசிக்க ஆதனூரிலிருந்து திருக்கோயிலில்திருவாயிலினின்று சிவலிங்கதெரிசனைக்காண ஆவலாவும்காவலாகவும் வணங்கிப்பாடுகையில் பரமசிவனார் சந்நிதிக்குமுன்னிருக்கும்நந்திகேசுரரை விலகும்படிசெய்து காட்டிகொடுத்தருளினார்.

நந்தனார்சுவாமிதெரிசனைசெய்து வழியில்ஒருபள்ளத்தைக்கண்டு அதைப்பெருங்குளமாய்வெட்டித் தம்முடையஆதனூரென்னுஞ்சேரிக்குப்போனார் இவ்வாறுபலஸ்தலங்களைவலஞ்செய்து ஆத்தி லணிந்த சிவனையேத்தி சிதம்பரத்திற்குச்செல்மனம்வந்து தம்முடையசாதி கோயிலுக்குப் போகயோக்கியமில்லையென்று விசனமடைந்து நாளைக்குப்போவோமென்றுசொல்லியிருந்தார் சிலபணிவிடையாலும்போகக்கூடாமையால் அனேகநாள்சென்றும் நாளைப்போவோமென்றபடியால் அவருக்குத்திருநாளைப்போவாரென்று பெயர்வந்தது அதன்பிறகு திருநாளைப்போவார் சிதம்பரம்வந்தபின்சுவாமி அவருக்கு காட்சிதந்ததும்இதனடியில்வரும் நொண்டிச்சிந்தினால் தெரிந்துக்கொள்ளலாம்.

உ

கடவுள்துணை.

# திருநாளைப்போவாரென்னும்

# நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

கற்பகவிநாயகர்-துதி

காப்புபெண்பா.

கந்தன்றனையளித்தகாதலனார்பேருபெற்ற
நந்தன்சரித்திரத்தைநானியம்பச்—சுந்தரஞ்சேர்
தில்லைமணிகோபுரத்திற்றேடிவளர்கற்பகத்தாள்
அல்லும்பகற்றுணையேயாம்.

முக்குறுணிவிநாயகர்துதி.

விருத்தம்.

நந்தனிகரத்தான்றில்லைநாயகனருளால்வந்த
கந்தனமுககுறுணியான்றன்னளினபொற்றாள்வணங்கி
நந்தன்பொருட்பாலுண்டநற்புகழ்சொலிப்பின்போர்
நண்புடனுதினாளும்நலமுடன்வாழ்குவேனே.

சபாபதிதோத்திரம்.

கலிவிருத்தம்.

தக்ககீர்த்திகொள்நந்தன்சரித்திரம்
மிக்ககாதையையெடுத்தேவிளம்பிட
செக்கர்கோணியின்தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனுத்தாளங்கள்சிரங்கொள்வாம்.

சிவகாமிதோத்திரம்.

விருத்தம்.

பாம்பனைத்தந்தையாகப்படைத்துப்பின்யெவருங்காணப்
பாம்பினைப்பணியாய்க்கொண்டபரையருன்பாதமேத்தி

பாப்பினிற்புலியும்பாம்பும்புகழ்பார்த்திடகந்தனுக்கரு
பாம்படிமுத்திதந்தவருங்கதைபகருவேனே.

சுப்பிரமண்யர்-தெய்வானை-சாஸ்வதி

இலக்குமிவிஷ்ணுஇவர்கள்துதி

விருத்தம்.

சங்கிதாநந்தசிவனைச்சார்ந்தநித்தியாநந்தநந்தன்
உச்சிதக்கதைதனையக்கீர்த்தனையாசவுலகெலாந்துதித்திடச்சொல்ல
அச்சிலைவேற்கையறுமுகன்தெய்வயானைசெங்கலைமகள்கமலை
பச்சைமான்மற்றும்பரவியதேவர்பாதபங்கயம்பணிகுவேனே

௬௩-நாயன்மார்-தில்லைமூவாயிரவர்கள்துதி

விருத்தம்.

வாதவூரடியாரோடுமற்றறுபத்துமூவர்
பாதமேவணங்கித்தில்லைபதிதனிநாளுமேவும்
போதமூவாயிரத்தோர்பொன்னடிக்கமலமுன்னி
ஓதுநந்தன்சரித்திரமுரைத்திடத்துணிந்ததாமே.

அவையடக்கம்

விருத்தம்.

சிற்பிகள்காண்போற்சிந்தையுமுவக்கச்செப்புநல்வின்புரத்திட்டும்
விற்பனங்கண்டவறிவிலாவெனமுதூர்விதமெனமுத்தமிழென்னுஞ்
சொற்புகழ்நல்வித்துரையெலாந்தெரிச்சதாபநற்புலவர்முன்கருத்திப்
பொற்புரவிசைக்குங்கீர்த்தனமிதனைப்புவிமிசைமதிப்பர்களம்மா.

விநாயகர்துதி.

தரு-இ-ம்-யோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

கணநாதாசரணம் காத்தருள்
கணநாதாசரணம்

அநுபல்லவி.

பணமார்சேடன்றாங்கியபாரம்தினிலே நெருக்
குணமாநந்தன்சரித்திரக்கிருபைகண் பாருங்—கண

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலத்தூயவேதாந்த நாதா
திலங்குமுனிவர்மனத்துளுறுத்தருட் போதா

நல்லமோதகமுதல்நாடிமுகற் விநோதா
  நாயேன்சொல்லுந்தமிழைநாடிரட்சிக்குந் தாதா—கண

அம்பரமானமன்றுள்ளாடும்பர வொளிக்க
  அரைநொடியினில்வலமாகியனைங் களிக்க
உபயபற்பிராணசகுதஉயிற்மாங்கனி யளிக்க
  உளந்தளராமலுண்டமுதல்பாதுய ரொழிக்க—கண

தேசோங்காத்தனச்சிகாமேலக்கோ புரத்
  தேவிற்றிருக்குமெங்கள்தேவாகுண்ட லாதர
பூசித்தவர்க்குவரம்புகுந்தருளு மாதர
  பூமிநைாடகஞ்செய்யுந்தவோ மாகர—கண

புராணிகற்சொல்—விருத்தம்.

வளம்பெருதருமயோங்கியவாத
  நூரினில்வாழ்ந்திடும்புலையற்
உளமகிழ்தெங்கள்குடிப்பெயற்விளங்க
  வுதித்தநற்றீபமேமணியே
களங்கிலாக்கதிரோயெனப்புகழ்ந்தோதக்
  கதித்தசீர்நந்தனாற்சரித்திரம்
விளம்பிடமுதலிற்றேடயமபடித்து
  மேன்மையுமிகப்படித்தனனே.

தோடயம்.

இ-ப்—நாட்டை-ஆதிதாளம்.

திருவளர்தருமாததூரார் செறிநிலைகுடிலவதாரா
தருமநெறிநந்தனற்ப போசரித்திரமதனைச்சொல்லவே-ஆ-ஆ

அருள்வளற்கஜமுகசாமி அம்பிகைத்தாளுஞ்சாமி
அங்குசக்காதலநாமி அப்புயத்தாணிதர்துணையேசெய—ஆ-ஆ

வண்டமணிமாமலர்த் தாரண்மண்டலவாழ்த்தியதிரன்
கண்டுமெளியங்கு தாரன்மன்னுங்கதைசொல்லவே-ஆ-ஆ

புண்டரீகபுரத் தீசன்புராரியுளமகிழ்நேசன்
தண்டலற்மாயண வாசன்தாமரைத்தாள்கட்டுணையேசெய-ஆ-ஆ

### விருத்தம்.

சங்கரன்றனக்கும்சண்முகன்றனக்கும்சதுர்முகப்பிரமனுற்தனக்கும்
பங்கயமாற்கும்காமனையட்கும்பாற்கட்பாவலற்தமக்கும்
தங்கிடவட்டவசுக்களானவற்கும்சதுர்மறையோதுமந்தணற்கும்
பொங்கியமூவாயிரற்நந்தனுருக்கும்பொதுப்படமங்களம்புதல்வாம்.

### மங்களம்.

### பல்லவி.

ஆதிமத்தியாந்தனக்குமங்களம் எங்கள்
ஆனந்தநந்தனுர்க்கும்மங்களம்

### அநுபல்லவி.

பாதிமதிநதியும்பார்ப்புப்புலி யரியும்
சோதிக்குழையணியுந்துதங்கவாட் புமயும்

### சரணங்கள்

சிலைமைருடிவழகிற்சிறந்தவொருபெண் ணாக்கி
சிலைவளைத்தபரசுராமன்கோபத்தைப் போக்கி
மலையைச்சுமந்துபெருமடுவிலொருகாற் றாக்கி
மாநடநங்கள்செய்தமாயமானினை யெய்த—ஆதி

குருபாநாதருக்குங்குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக்கும்அருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவெனஉளங்களித்தவ ருக்கும்
உம்பற்கோனுக்கந்தயாபரசினைத் தந்த—ஆதி

சக்கரைமுக்கனியவல்தனைநுகர் பாதர்க்குப்
சகலதேவர்தமக்குஞ்சகலவசுக்க ளுக்கும்
பக்குவமாகவிதைபாடுஞ்சங்கீத ருக்கும்
பாற்மகட்கும்பங்கயப்பாவையற்கும் விசை—ஆதி

### பெரியபுராணச்செய்யுள்—விருத்தம்,

திருமறையோர்புராணமவையதின்மூன்றுசிவ
வேதியரைவழிப்பட்டபுராணமீரிரண்டு
சுழன்மாமாத்திரதொன்றறுவாமுடிமன்னர்
குறுநிலமன்னவரைவாலணிகற்குலத்தைவற்

திருமைநெறிவேளாளபதின்மூவரிடைய
இருவர்சாலியர்குசவா சாலிவில்லியாளர்
பரதவரசான்றோர்வண்ணார்சிலையலவாணீசர்
பாணரிவரோரொருவராம்பகருங்காலே.

உபமன்னியபகவான்ரிஷிகளுக்குச்சொல்லிய

வசனம்.

இவ்வுலகில் பெரிதாகிய வேதசாஸ்திரங்களுக்குள்ளே மிகவுஞ் சாரமாகியபரமசிவபத்தியையுண்டுபண்ணுகிறபத்திவிலாசத்தைஉபமன்னியபகவானானவர் அனேகரிஷிகள்கேட்கச்சொல்லுகிறார்பெரியபுராணமென்று சொல்லப்பட்டநூல் சேக்கிழார்சுவாமிகளாலேசெய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்திலும் இன்னுமனேகபுராணங்களிலும்சொல்லப்பட்டபத்திமார்க்கங்களாகிய கடலிலேநீரைக் கையாலள்ளிக்குடித்ததுபோலாக சிலகீர்த்தனங்களினாலும் விருத்தங்களினாலுஞ்சிவபத்தர்கள் சரித்திரங்களைக் கொண்டாடுவதுபோல உளறினேனென்று சிதம்பரம்கோபாலகிருஷ்ணையன் பெரியோரை அடிவணங்கி ஆனந்தம் பெருகிச்சொல்லிய திருநாளைப்போவார்சரித்திரத்தை யாவரும் வினவிகேட்கும்படி. சிரம்வணங்கிவினவினனை சிவரகசியம் ஸ்காந்தம் பாரதம் பாகவதம் பகவற்கீதைமுதலாகியபத்திஞானவைராக்கிய சாஸ்திரங்களிலே மிகவுஞ்சாரமாகிய பரமசிவத்தைபத்திபண்ணாமல் இதரவேதபராங்கதனாயிருக்கிற பிராமணனைப் பார்க்கிலும்பரமசிவம்பாதாரவிந்தபத்திபண்ணுகிறவன் பறையனாயிருந்தாலும் பதினான்குலோகத்தையும் பரிசுத்தம்பண்ணுவானென்று உபமன்னியபகவான்சொல்ல அதற்குரிஷிகள்சொல்லுகிறார்கள் பத்திஞானவயிராக்கியங்களைத் தெரியப்படுத்தாநின்றவேதபுராணங்களைப்பார்க்கஅறியலாம் அன்றியில் அவிவேகிகளாயிருக்கிற சண்டாளருக்கு எப்படிபத்திவருமென்று ரிஷிகள்கேட்கஉபமன்னிய பகவான் சொல்லுகிறார்.

உபமன்னியபகவான் சொல்லுகிறார்

தோண்டிச்சிந்து-இ-ம்-புன்னாகவராளி.

பழனமருங்கணையும்புலைப்பாடியாங்கூரைவீடுதனில் சுரைமேயாபடர்ந்திருக்கும் அதைச்சுற்றிலும்நாய்கள் குலைத்திருக்கும் பறந்தோடிவட்டமிடும் இளம்பச்சைபிசிதமே விச்சைகொண்டு கோழிகூவுங்கூக்குரலும் பழுங்கொல்லையருகினில் வெள்ளெலும்பும நரம்புங்குவித்திருக்கும் சிறுநத்தைகபடலும் வலுத்திருந் தோலூருங்கேணிதனில்வெகுதொல்லைப்படும்வகை சொல்லரியப்பாம்போலடித்திருக்கும் வயற்பக்கங்களில்மெத்த நொக்கெலும்புங் கிழித்தோல்நாற்புறமும் அவர்க்கினமில்லைசிறுமீனுலரும் தெருவில்விளையாடிக்கொண்டு அவர்தெங்கினம்பாடுவார் சுந்தரமாயிலுப்பைமணிபரையில் சுட்டி இண்டந்த

லைசளில் பூண்டிருக்கும் சங்குதோடுகாதணியும் அருந்தாவடமேயவர்
அரிடமாய்மணியோ தரித்திருப்பார் தெருவாசற்புறந்தனிலே சிகஇ
க்கொண்டு கொண்டாட்டமாயிருப்பார் கையைக்கொட்டிக்கொண்டு க
ளக்கிஷ்டமுள்ள மதுவுண்டு கெக்கலிப்பார் பறைவாத்தியமும் வெகு
நேத்தியுடன் இருக்குப்புலைபாடி அதில்ஈசன்திருவடிநேசமுடன்தரிக்
குப்ஓருபுலையர்வர சாதிமுறைமைதவறுமல்நந்தனாரவர்பெயராம் வெகு
நல்லவராமிந்ததொல்லுலகில் அவரே சிவனடியார் அவர்க்கருமெதி
ரில்லை தாரணியில் கோடிகோடி சென்மங்களோ முன்னங்குற்றமாச்
செய்தநற்றவமே அவதாரமானதுவோஈசன்அன்புபுரியும்பேரின்பசுக
ம் கொள்ளைகொள்ளவோ பிறந்தார் திருக்கோயில்வலர்சுழன்றுவனு
டன் கொய்யும் பணிவிடைகள்ஈசன்சிந்தைமகிழ்ந்துகுனிந்திடவே ம
த்தளபேரிகைக்குமிசை வாரகொடுத்துப் புறந்தோல்கொடுத்தும் ம
றவாமலேதினமும்நல்ல வாசம்பெருங் கோரோசனை தேவாலயங்கள்
தோறும் தந்துசித்தமுருகிய பத்திவெள்ளம்பொங்குகோடிக்கனக
றை என்றுபேதமறியவொண்ணாதுகண்டீர் சாதியில்நீச்சரவர்பேணிச்
சாருந்தொழின்முறையாரும் புகல் திருப்புன்கூர்சென்றரனைக்கண்டு
சேவிததிசைபாடிப் பாதவித்தபின் தில்லைசிதப்பாத்தைக்கண்டு சேவி
க்கவேண்டுமென் றுவனுடன்நாளைப்போவேனென்றாராம் தன்னைநாடு
ம்பறையர்களோடிவந்து அண்ணே நீபோகாதே நமக்காண்டைபொ
ல்லாதவன் வேண்டிக்கொள்ளான் பார்ப்பாரசாதியாண்டே இன்னபா
டுபடு முழக்காடுமங்கேநமக்குந்திருநாளோஅந்தஞாயமுண்டோஎன்ன
மாயமிது வென்றேதடைசெய்தார்சிவன்வேடிக்கைதானென்று நாடிக்
கொண்டே அறியாதுபோலிருந்தசெம்பொன்னம்பலத்தாடியையர்க்கும்
பிடவேஆகனூர்தனிலிருந்துவிடும் அப்புபோலப்பறந்தையமின்றித்தி
ல்லையருகில்வந்தார்மனந்தேரிக்கொண்டார் குறையாரிககொண்டார்கெ
ண்டாயணியோசைகாதில்கேட்குதென்றாதைப்பார்க்கவென்றே கொ
ண்டாட்டமாகவந்தார் கையைக்குவித்துக்கொண்டே தனக்கம்பிட்ட
தோவென்றே மனமகிழ்ந்தார்தெரு வீதியிலேவந்து காவலுடன்கண்
டார்தலையாறி இருக்கண்சலிலானந்தப்பொங்கிடவே நின்றார் மதிற்புற
த்தேவெகுநேத்திரியனுறரிதைப்பார்த்ததில்லை பணிந்தார்பாவநியாய்
நல்லபாக்கியசாலிகளாகுமென்றார் இதுதானுதில்லைப்பதியென்று எக்
கலித்தாராடிக் கெக்கலித்தோர்ஐபாவுஞ் சந்நிதியோ காணுதைகொண்
டுவந்தேனேசமுடன் தெருவில்பொடித்துத்தூளே அள்ளித்தேகமு
ழுதினுந்தாசமுடன் தரித்தார்திருநோய் நாலுசாஸ்திரவேதங்கள்பா
ர்த்துணரும் பெரியோரிருக்குமிடம் இந்தப்பேயனிருப்பதுஞாயமல்
ல நானேபறச்சாதி தில்லைநாதன் தரிசனமாதாவாய்ப்பண்ணுப்படுபா
வி அந்தப்பாரிலிருப்பது சொல்லவே என்றேகுளத்தோரம்புக்கு ஏங்
கிநின்றார் ஓரப்பெருங்கவலைகொண்டு உள்ளந்தழைந்திட வெள்ள
மெனக்கண்ணீர் கரைபுரளஇருகைதொழுதாரவர் மெய்தொழுதார் கி
ழேபுரண்டழுதார்ஒன்றுங்கேள்விமுறையோகாதாவென்றே தலைகுனி
ந்தார் எந்தன்வேதனையைக்கண்டு ஆதரிக்குந் தெய்வங்கிடையாதே

பாவிசித்தந்தெளிய விரத்திதந்து வாவென்றழைப்பாரோவிண்ணில் வானவர்கள்போற்று மூனமிலாக்கனகசபைநடனம் தண்ணீர்காட்டை சளித்திடநாயடியேன்வருந்தித்துதிப்பேனோஎந்தன்வாணாளுநருதுனிணையே அடடாபிதென்னவென்றுஉயிற்றி அங்கர்வீதியைச்சுற்றிவந்தார் இரவும்பகலோயாதைசசனகண்டு விசுவாசமுடன்பாலகிருஷ்ணன்பணியும் திருப்பாலமுள்ள தில்லைநாயகனே கனவிலுருவாகிவந்துகாட்டுகொடுத்துகடாட்சித்தபின் எரியினிடமூழ்கி வெகு இன்பம்பெருகி அன்பருடன் வேசமுனிவடிவாய்த் தில்லைவேதியர் கைதொழுதார் அங்கர்புளகிதமாய் செம்பொன்னம்பலத்தாடிய சம்பிரமத்தைக்கண்டாமறிந்திலாரல்.

கீர்த்தனம்–இ–ம்–எதுகுலகாம்போதி–சாப்புதாளம்.

பல்லவி.

ஈசனைப்பிறந்தாலும் போதும்
ஆசையுடனம்பலவனடையிருந் தாலும்–ஈச

சரணங்கள்.

கோதிலாத்தவங்கள் புரிந்தாலும்தங்கள்
குலவண்மைதவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்மாயை
விலகாதஒருநாளுந்தில்லையாது துன்பம் ஈச

களவுகொலைசெய்தா லந்தாலும்பழிக்
காரருடனெந்நேரம்கூடியிருந் தாலும்
வளமறலைவாழ்வுகெட் டாலும்–நல்ல
பணிதனவணிடமாகமறலிபணு காணு ஈச

எந்தகருமங்கள்செய் தாலும்என்று
மிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரகீர்த்தமிருந் தாலும்எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும்பாதம் நினைபேதநீச

வசனம்.

இப்படியே பத்திசெய்தால்போதும் மற்றசாதிவருணச்சிரம்மங்களினாலே ஒன்றும்பிரயோசனமில்லையென்றும் ஒருஇதிகாசத்தைச் சொல்லுகிறார் பூருவத்திலே தில்லைவெட்டியானென்றும் ஜாம்பவனென்றும்ஆதனூர்நந்தசாம்பனென்கிற திருநாளைப்போவானென்றும்பேர் பெற்ற இம்மூன்றுபேர்களுந்திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்கள் இம்மூன்றுபேர்களில் நந்தசாம்பனென்பவன்மாத்திரம் தில்லைமூவாயிரம்பேர்களும்பார்க்க சாபப்பிரவேசமாகுமென்றுசொல்லரியதெல்லாமானந்தமடைந்து உபமன்னியமகாரிஷியைப் பிரதட்சணஞ்செய்து ஒய்சுவாமிஎல்லோரும்பார்த்திருக்கையில் முத்தியடைந்ததிருநாளைப்போவாரென்னும் பெயர்படைத்துப்பேருபெற்ற சிவபத்தருடைய சரித்திரத்தைச்சொல்லுங்களென்று ரிஷிகள் பிரார்த்தித்துக்கேட்கும்போது உபமன்னியமகாரிஷியானவர்மிகவுஞ்சந்தோஷமடைந்து ஈஸ்வரனுடைய குணங்களை வர்ணிப்பதைப்பார்க்கிலும் ஈஸ்பரபக்தர்களுடையகுணங்களைச்சொல்லுகிறது மெத்தவும்புருஷார்த்தமென்றுசொல்லத்தொடங்கினார் சிதம்பரத்திற்கு நாளைக்குப்போவேனென்று சிலதுநாள்நந்தன்சொல்லிவந்தபடியாலே நந்தனுக்குதிருநாளைப்போவாரென்றுபேருண்டாச்சு ஆகிலும் ஈஸ்வரனுடையகுணங்களைச்சொன்னாலும் சொல்லலாம் பத்தருடையகுணங்களைச்சொல்லாமவர்க்குந்தெரிந்தமட்டும் சொல்லுவேமயிர்சிலிர்த்து ஆனந்தகண்ணீர்வடித்து மனங்களித்து பரமசிவனைநினைத்து வாயால்துதித்து ஆத்துமாஆத்துமிகளாயிருக்கின்றதாபத்திரியங்களினாலே வருத்தத்தையடைந்திருக்கிறசெந்துகளுக்கு அமிர்தம்வருட்சித்தாப்போலே நந்தனாருடைய புண்ணியத்தால் அமிர்தத்தைவருட்சிக்கத்தொடங்கினார்.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்ஆதிதாளம்

பல்லவி.

நந்தன்சரித்திரமானந்தர்ஆனனுமாத்தி
யந்தபக்திரசகெந்தஞ்சொல்லச்சொல்ல — நந்தன்

நந்தன்சரித்திரம்வெகுஅந்தரசிவனருக்குச்
சொந்தத்தலையுர்பவமந்தர்கேட்டபேர்க்கு — நந்தன்

வெதுயினைப்போலேசாது பூமியிலிருக்
காது அரிது இருகாதுபடைத்தபேர்க்கு — நந்தன்

வாடிமனதிளகிப்பாடி அரகராவென்
றாடிகனகசபைநாடிச்சேருவேனென்ற — நந்தன்

அண்டர்கொண்டாடுஞ்சோழமண்டலந்தன்னைசூழக்
கொண்[illegible] நாட்டு நல்லின்பூரி [illegible] ர

கீர்த்தனம்—இ-ம்—கமாசு—ஆதிதாளம்.

### பல்லவி.

திருநாளைப்போவார்சரித்திரம்
தேனிலும்பாலிலுமினிதாகண்டீர் — திருநா

சித்தமுமாகியசிவயோகிகளுங்
கர்த்தமிதுவென்றனுதினம்பணியும் — திருநா

மேதினிபுகழுமாதனூர்விளங்கவங்கமாசவுஞ்சாதனைபெருகிய
பேதமில்லாதவன்வேதகுருநாதனைப்பணியும் — திருநா

மனதிற்குற்றமில்லாதவன்நிந்தைவஞ்சனைமாய்கைசொல்லாதவன்
கனவிலும்நினைவிலும்சிவபதங்குருபதம் — திருநா

கருத்துரைகளித்திதுப்பெருத்திடவாசலும்
சாதிமுறைதவாதவன்பவசாசத்திடைமுழுகாதவன் — திருநா

பதமாயாதிகளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிதுவல்லவென்றறிந்திடும் — திருநா

### பெரியபுராணச் செய்யுள்

### விருத்தம்.

பகர்ந்துலகுசீர்போற்றும்பழையவளம்பதியாகும்
திகழ்ந்துபுனல்கொள்ளிடம்பொன்செழுமணிந்திரைக்காத்தான்
முகந்துதரவிருமருங்குமுளரிமலர்க்கையேற்கும்
அகன்பணைநீர்நன்னாட்டுமேற்காநாட்டாதனூர்

### வசனம்.

கொள்ளிடத்துக்குச்சமீபமாகிய உலகமெல்லாம்புகழும்படிக்கீர்த்திபெற்றிருக்கின்றஅமராபதிஅளகாபுரிபட்டணத்தைதோற்புசெய்யும்மாடமாளிகைகூடகோபுரத்தோடுமணிமாதிகள்வெள்ளாட்டிகள்வேலைசெய்யுயசெல்வதத்தோடும் வேதம்வேதாந்ததத்துவஞானமறிந்து சகலசாத்காரம்பெற்றவேதியரோடும் மற்றமூன்று வருணச்சிரமங்கள் கோட்சூழப்பட்டு பூலோகத்திலகமென்று சொல்லப்பட்ட ஆதனூரென்னுங்கிராமத்துவெளியில் நடுநஞ்செய்நிலங்களாலே சூழப்பட்டிருக்கிறகடைசாதியாற்குடியிருக்குஞ் சேரியைசகொண்டாடிச் சொல்லுவார் ஏனென்றால், ஸ்காந்தபுராணத்தில் அஞ்சுபோகாண்டத்திலே சிவபத

தன்குடியிருக்குஞ் சேரியைக்கைலாசமென்றுவர்ணித்துச் சொன்னபடியால்உபமன்னியபகவான் மிகவுங்கொண்டாடிச்சொல்லுகிறார்.

## சிந்து.

பழனமருங்கணையும் புலைப்பாடியதுங்கூரைவீடுதனில் சுரையே படர்ந்திருக்கும் அதைச்சுற்றிலும்நாய்கள் குலைத்திருக்கும்பரந்தோடி வட்டமிடும் இளம்பச்சைபிசிதைமேலிச்சைகொண்டுகோழிகூவுங்கூங் குரலுங்குரலும்பாழுங் கொல்லைபுறத்தினில் வெள்ளெலும்பும் நரம்புங் குவித்திருக்கும் பலநெட்டிமிதித்திடுங் குட்டைகளில் நண்டோனடியிருக்குஞ் சிறுகத்தைகள்வலுக்கிறுக்குந் தோலூறுங்கேணிகளில் வெகுதொல்லைப்படுமாடைசொல்லரியாப்பரமமே அடித்திருக்கும்வயறபக்கங்களில்மெத்த நொக்கெலும்புங்கிழித்தோல் நரம்புகளும் அவாக்கினமில்லைசிறுமீனுலரும் தெருவில்விளையாடிக்கொண்டு அவற்தெந்தினம்பாடுவோர் சுந்தரமாம் இலுப்பைமணிபரையிலகட்டி இண்டந்தலை களில்பூண்டிருக்குந்தலைகளில் பூண்டிருக்குஞ்சங்குதோடுகாதணியும் அந்ததாடமேயவர்தூவிடமாய் மணியோதரித்திருப்பார் தெற்குவாசற்புறந்தனிலேசிக்கொண்டு கொண்டாட்டமாயிருப்பார் மையைக்கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்மதுவண்டெக்கலிப்பார் பறவாத்தியமும்வெகுநேத்தியுடனிருக்கும் புலைப்பாடிஅதில் ஈசன்திருவடிநேசமுடன்தரிக்கும் ஒருபுலையாவர்சாதிமுறைதவாதவராம் நந்தனாரவர்பெயராம்.

## வசனம்.

இவ்விதமாய்க்கடையரிருப்பின் வரப்பினில்வாழ்வார் இப்பரிவுடன்சிவன்கழற்கேவிளைத்தவுணர்வோடு மந்தாரபதி லூற்புலமைண்யாட்டொழில் நாமயத்திலொப்பிய நந்தனொருவருண்டாயிருக்கும் புலைப்பாடியில் பரமசிவபாதார விந்தத்தில்மிகுந்த அந்தரங்கப் பொருந்தினவராகிய நந்தனார்மிகபுத்திபரிந்திருந்தார் வீச்சுடன்சேற்றில்விழுந்தாலும் பிள்ளைபூச்சிமேல்சேரொட்டாது அத்தன்மைபோல எத்தனை காரியமிருக்கினும் முத்தியளிக்குங்கர்த்தனாகிய அத்தனை தனது சுத்தமாகிய சித்தத்தில் நித்தமும்வைத்து உத்தமவித்திபெற்றிருந்தார் மற்றதுமறந்தாற்கற்றதுமறந்தார் உற்றதுமுணர்ந்தார் இப்படி யெல்லாமிருந்தும்நல்லகுண மில்லாமற்போனால் உலகம்பொல்லாங்குசொல்லுமல்லவா.

### சிந்து.

இவர்வெகுநல்லவராமிந்ததொல்லுலகில் அவமேசிலனடியார்

### வசனம்.

என்று ஆச்சரியங்கொண்டு சொன்னபடியினாலே யிவரைப்போல பத்திமார்க்கத்தில் மிகுந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆரிருப்பார்என்று இணைச்சொல்லப்போகாதனைகடந்த பரமசிவ பத்தியானென்று சொல்லப்படும்.

### சிந்து.

அவர்க்காருமெதிரில்லை தாரணியில்கோடிகோடி சென்மங்களோ முன்னம்சூர்றமறச்செய்த நற்றவமே அவதாரமானதுவோ ஈசன் அன்புபுரியபேரின்பசுகங் கொள்ளைகொள்ளவோ பிறந்தார்திருக்கோயில்வலஞ்சுழன்றுவலுடன்செய்யும்பணிவிடைகள்

### பெரியபுராணச்செய்யுள்

### விருத்தம்.

ஊரில்விடுபறுத்துடவையுண்வரிபையாங்கொண்டு
சார்பில்வருந்தொழில்செய்வார்தலைநின்றார்தொண்டினாற்
காரிலையமுக்குடுமிப்படையண்ணல்கொயிறுரும்
பேரிகையேமுகலால்முகக்கருவிரவினுக்கு
போர்வைத்தோள்விசுவாறெனறினையனப்புகலுமிசை
நோவத்தவிணைக்கும்யாமுக்குநிலவமையாற்
சோவுரேதந்தியந்தேவரபிரானர்ச்சனைகட
காற்வத்தினுடன்கோரோசனையுனிவையளித்துள்ளாற்

### வசனம்.

இந்தப்பிரகாரம் நந்தனார் சிவஸ்தலங்கள்தோறும்போய் சுவாமியைத்தோத்திரஞ்செய்கிறதெப்படியென்றால்.

### தரு—இ—ம—காம்போதி—ஆதிதாளம்.

### கண்ணிகள்.

செந்தாமரைமலற்கு
செரிந்தமலற்க
எந்தபிரானுக்கபிஷேகக்
றீரதொழிந்தாற்மண
சிவசரணமூர்த்தி
திழிலவதார
புவனாட்சகனறிருநிலை

மோரபைசளுபவேடையும்
ளாட்டப்சிறந்தவேளூர்
கோரோசனைமேற
வாட்டம்
ஞானசம்பந்தரென
மாகவந்தசீமகாழி
நாயகரேற்றிப்

| | |
|---|---|
| பூரிபீகாரவெகு | காசு |
| ஓருபொற்பறமுமதி | ளோங்கியமாபூரத் |
| தாவக்கவிஸ்வனகர் | தீசரைமிகத்தொழுது |
| ஓருமுகக்கருவிசதத்தோல் | நரம்பிவைதந்தா |
| யீவுலகிற்புகழ்வுந்தன் | பெயரை |
| உமைபொருபாகததி | லுபர்பரமன்றரும் |
| னொருபசுவிங்கன் | ராகமாய்வேடஞ் |
| சமைத்துபின்னுநீதிச் | சோழன்றனசுக்காட்சி |
| வந்தவாரூர்ச்சென்றான் | பக |

வசனம்.

பின்னும்நந்தனர் தான்செய்யுந் தருமமேதென்றால் இவர்புலையனு னபடியால் சிவஸ்த்தலங்களுக்கும்போய் வீதிமைச்சுற்றி சந்நிதியில வந்துதடிவிழுந்ததுபோல் உடல்பணியப்பணிந்து புழுதியில்புரண்டும யிர்சிலிர்ப்பக்கண்ணீருகிய வாய்குளறிஉரைதடுமாறி ஒருதரமழுது ஒருதரந்தொழுது எக்கலித்துகெக்கலித்து ஒருதரஞ்சிரித்து ஒருதர ம்வெறுத்து சுகமறந்துஅகமிசழ்ந்து அனல்கண்ட மெழுகதுபோலுள் ளுருகி ஆனந்தவெள்ளம்பெருகி கள்ளங்கருதிச் சிவனேயென்றுவா ய்வலிக்கப்பேசி கைவலிக்கக்கொட்டி கால்வலிக்கக்கூத்தாடி நிற்கவொ ருமுகூர்த்தஞ்சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையால்வா யசையாமல் அலையடித்தோய்ந்த கடல்போலநிறைந்து தன்னைமறந்தி ருப்பார் தன்னினைவுவந்து பரவசந்தெளிந்து ஈசனைப்பணிந்துகொண்டு வந்தபணிவிடைசெலுத்தக்கோவிலாற்கேட்கரும்பிட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம்—ஆனந்தபைரவி—ரூபகதாளம்.

பல்லவி

வாரிருக்குதுதோலிருக்குதுவாங்கிகொள்ளுவீரேமத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும்நல்லவிருக்கிகட்டும்விச்சை — வாரி

பேரிருக்குதுபோதுஞ்சிவப்பெருமையைக்கொண்டாடி
சிற்றைகின்றதில்லைப்பதியிலசேருதற்குபாயந்தேட — வாரி

சிறியவனுன்சாதியொன்றுமறியாதவனுனேழை
சிவபெருமானுக்கடியேன்செய்யுபணிவிடையிது — வாரி

சிந்து.

செய்யும்பணிவிடைகள்ஈசன் சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே மத்தளபேரிகைக்கும் இசைவாற் கொடுத்தும் புறந்தோல் கொடு

நீத்துமறவாமலே தினமும்நல்ல வாசம்பெருகும் கோரோசனையும்தே
வாலயங்கள்தோறும் தந்துசித்தமுருகியபத்திவெள்ளம் பொங்கோடி
க்கங்குக்கரையென்றுபேதமறவெண்ணாதுக்கண்டோர்சாதியில்நீசனவர்

வசனம்.

இப்படிக்குசெய்யாநின்ற நந்தனாருடைய வாலாறேதென்றார்.

கீர்த்தனம்-இ-ம்-தக்கடா-ஆதிதாளம்.

ஆதனூரிலொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரப்பறையன்
சூதுவாதுமொன்றும்தெரியாதவன் பரிசுத்தமானபத்தன்
கோதிலாதவங்கள்சாதியார்க்குச் சிவகுணங்களைமிகச்சொல்லி
காதலோடுதிருப்புன்கூரீசனைக் கண்டுவருவமென்றார்

நந்தனார் சிவதரிசனஞ்செய்ய வேண்டியதற்காக தங்கள்

சாதியரைக்கூப்பிடுறார்.

கீர்த்தனம்-இ-ப்-செஞ்சுருட்டி-ரூபகம்

பல்லவி

சிவலோகநாதனைக்கண்டு சேவித்திடுவோம்வாரீர் சிவ

அநுபல்லவி.

பவமயங்களைப்போக்கி அவர்
பரமபதத்தைக்கொடுப்பாரந்த சிவ

சரணங்கள்

அற்பசுகத்தைநினைத்தோம் அரன்திருவடிமறந்தோம்
கற்பிதமானபிரபஞ்சமீது கானல்சலம்போலேயெண்ணி சிவ
ஆசைக்கடலில்விழுந்தோமினி யறிவுக்கறிவையிழந்தோம்
பாசமகலவழிதேடாமல் பாதவிக்கும்பாவியேனே சிவ
பாணிடச்சென்மங்கொடுத்தாற் தன்னைவருந்தக்கரங்களத்தார்
தேனும்பாலும்போல்சென்று தோடியில்நின்றுகொண்டு சிவ

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்.

திருப்புன்கூர்ச்சிவலோகன் சேவடிகண்மிகநினைந்து
விருப்பினொடுந்தம்பணிகள் வேண்டுவன்செய்வதற்கே
அருத்தியினொருப்பட்டங் காதனூர்தனினின்றும்
வருத்தமுருக்காலினால் வந்தவ்வூர்மருங்கணைந்தார்

வசனம்

நந்தனாரிப்படிச் சிவலோகநாதனைச்சேவிப்போமென்று நெடுநா
ளாய்ச்சொல்லி நிச்சயஞ்செய்யநந்தனாரும் பறையர்களுக்கு முண்டா
னவாக்குவாதம்.

அவர்கள்-தவஞ்செய்யுஞ்சடங்கிது வல்லவோ பறையர்கள் செய்தால்
பாவமேயென்றார்
நந்தன்-தேருந்திருநாளுக்குமிருந்துபோகுவோம் வாரும்வாருமென்று
வருந்தியழைத்தார்
அவர்கள்-பொறும்பெருமிதுபுண்ணியமல்ல இனிபோவோமென்று ப
திவரையுமழைத்தார் சேரியைநீங்கிசிலதுபேர்வந்தார்
பதினொருபேர்கள் பண்புடன்வந்தார் நந்தன்மாடுபோல்ஞானமார்க்க
ம்பொழிந்துதவமுனிபோலே தானங்கேநின்றார்
அவர்கள்-சிவலோகநாதனைச் சேவிப்போமென்றார்நந்தன்வெருங்கை
யோடேபோகலாகாதென்றார்
வாருடன் தோலுவரிசையாய்க் கொண்டார் அவர்கள் சேரியிலுள்ள
சிரிதுவென்றார்
நந்தன்-வந்தபுலையருக்குபத்தி பெருகவேநெற்றியில்நீரிட்டார் அவர்
சத்தியந்திதாவென்று மெத்தவுங்கும்பிட்டார்

கீர்த்தனம்-இராகம்-வராளி சாப்புதாளம்.

இவர்-சிங்காரமான பள்ளுபாடினார்
அவர்-அங்கங்குளிர்ந்துகொண்டாடினார்
இவர்-கோரோசனப்பையையெடுத்தார்
அவர்-தாராளமாய்வாசக்கொத்தார்
இவர்-சிவமந்திரஞ்சொல்லிச்செபித்தார்
அவர்-தவமிதேயென்றுச்சரித்தார்
இவர்-ஆசைப்பெருங்கடல்தாண்டினார்
அவர்ஓசைப்படாமலேவேண்டினார்
இவர்-அளவில்லாவானந்தமடைந்தார்
அவர்-அளவில்லாக்கரடிசிப்பெற்றிருந்தார்
இவர்-திருப்புன்கூரீசனைப்பாடினார்
அவர்-விருப்பமோடிவரைக்கொண்டாடினார்

வசனம்

அப்படிஎல்லோருங்கூடிச்சிவனை அடிக்கடிவணங்கி அரகராவென்
றுரைத்திடுஞ்சத்தம் பரமனேயறிவார் இப்படிநந்தனார்பதினொருபேர்
பறையரோடு திருப்புன்கூர்வந்துசேர்ந்தார்

சவாயி

கல்லவந்துவீதி வலம்வந்துகண்கள்
சலம்வந்துசோரும் பலம்வந்துதெங்கள்

குலஞ்சுத்தமாச்சு மலம்வந்துபோச்சு
நலங்கொண்டோமென்று நிலங்கொண்டுநின்றார்

வசனம்.

அந்தஸ்தளத்திலே நந்திமிகவும்பெரியதானபடியினாலே லிங்கத் தரிசனஞ்செய்ய நந்திமறைந்திருப்பதால் நந்தனார்துயரமடைந்து சொல்லுகிறார்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்

கண்ணிகள்.

ஆரகாதிரிபுராந்தக சிவகாரவெங்கள்
அம்பிகையொருபாகா எங்கும்
நிரந்தரமாயெள்ளுமெண்ணைபோலவிருந்து
நினைப்பவர்க்கருள் போகா
வெள்ளைவிடைமேல்வரும் விமலநமசிவாய
விளங்கும்வேதமுடிவே நால்வர்க்குத்
தெள்ளுநச்சிவஞானபோதமளிக்கவந்த
சிறந்தமெய்தவ வடிவே
மானும்மழுவும்மரகத வாகுவலயமும்
மல்குலசூலபாணி எளி
தேனுங்காணத்தரிசனைதாவுமையுட
னெழுந்தருள்வீரிங்கு தோணி
மன்னுஞ்சந்நிதிமுனம் மருவுமிடபதேவா
மறைந்திருக்க நினைக்காமேனே முன்னம்
என்னவினைசெய்தேனோ கண்பெற்றபாவந்தானோ
இதத்தில்மகிழ்ச்சி பூணேனே

சவாவி

சிவலோகநாதன் திருச்சன்னிதானம்
மலையாகியநந்தி மறைந்திடுதிங்கே
பலகாலன்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகியிப்படி மறைத்ததேகவென்றார்

வசனம்.

என்றுசொல்லியநந்தனார் பின்னுஞ்சொல்லுகிறார்

கீர்த்தம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

பல்லவி.

வழிமறைந்திருக்குதே மலைபோலேயொரு
மாடுபடுத் திருக்குதே

பாவிபறையனிந்தவூரில்வந்துமிவன் பாவந்தீரேனோஉந்தன்
பாதத்தில்சேரேனோவேறேனோ சிவலோகநாதா வழி
கோடியில்நின்று தெரிசித்தாலும்போதும் கோயில்வர மாட்டேனே
ஐயேஓரடிவிலகினால்போதுமங்கேநின்று உற்றுப்பார்க்கச் சற்றேவி
லகாமல் வழி

வசனம்

இப்படிநந்தனாற் தரிசனங்காண ஓபாமல் அலட்டும்போதுசுவாமிநந்தனார்மீதிறங்கி நந்தியைவிலகச்சொன்னார்.

பெரியபுராணச் செய்யுள்

சீரேறுமிசைபாடித் திருத்தொண்டர்திருவாயி
நேரேகும்பிடவேண்டு மெனநினைந்தார்க்கதுநேர்வார்
காரேறுமெய்ப்புன்கூற் கண்ணுதலார்திருமுன்பு
பேறேற்றைவிலங்கவருட் புரிந்தருளிப்படுத்தார்

கீர்த்தனம்-இ-ம்-துக்கடா-ரூபகதாளம்

ஓருநாளும்வாராதபத்தன் திருநாளைப்போவாரெனுஞ்சித்தன்
உலகெங்கும்பிரசித்தங்கண்டு ஒதுங்காமலிருந்தகுற்றம்

கீர்த்தனம்-இ-ம்-துக்கடாரூபகதாளம்

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள்ளாய்-சந்நிதானம்மறைக்குதாம்நீ சற்

அநுபல்லவி

நற்றவம்புரியும்நம்மை திருநாளைப்போவார்வந்திருக்கிறார்

சரணங்கள்

சாதிமுறைமைபேசுறான் தன்னையிகழ்ந்துயேசுறான் (ம்
கோதிலாதகுணத்தைமுடையோன்கோபங்கொண்டால்தாளமாட்டோ
வேதகுலத்தைப்போதத்துறான்விருப்பியேறுறான்
பூதலத்திலிவனைப்போலேபுண்ணியபுருஷனொருவனில்லை சற்
பத்தியில்கரைகண்டவன்பார்த்துண்டனவன்
சித்தங்குறைமையில்நமதுசெல்வம்முற்றுங்குறையுந்தயவுசெய்து சற்

வசனம்

இப்படிசுவாமிசொல்ல நந்திவிலகினார்.

துக்கடா.

நந்திதூரவிலகிநின்றார்தன்சாமிமனதைகொண்டார்
இவன்நல்லபத்தனென்றார்அடங்காதவெட்கங்கொண்டார்

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ரூபகதாளம்

பல்லவி.

மற்றதெல்லாம்பொருப்பேன்
முததிநாலுங்கொடுப்பேன் மற்ற
பத்தனுக்குக்குற்றஞ்செய்தா
லதைப்பொறுக்கமாட்டேன் மற்ற
திடுக்கென்றவரைததிடிக்கப்பேசி
அடிக்கப்பொருக்கமாட்டேன் மற்ற
பசிக்குதென்றுவருகையிலொருவன்
பொசிக்கப்பொருக்கமாட்டேன் மற்ற

வசனம்.

இப்படியேசுவாமிசொல்லும்போது நந்திமனதுகலங்கி நூவில கின்றான் நந்தன்சிந்தைகுளிர்ந்துஅளவில்லாதஆனந்தமடைந்துகுதித்தார்கெலித்தார்கொண்டாடினார் துதித்தாற்திருவடியுள்ளேபநிததாற் எங்கும்சிவமாகப்பாவித்தார்.

கடுக்கா.

குதித்தாற்எக்களித்தாற்உள்ளங்களித்தாற்
பள்ளுபடிததாற்கண்ணீற்வடித்தார்பற்களைக்கடித்தாற்
ஒருதாரந்துடித்தாற்இருதாம்நடிததார்
இப்படிதரிசனஞ்செய்தார்நந்தனர்தரிசனஞ்செய்தார்

துக்கடா-ஆதிதாளம்.

சட்டமாகச்சந்நிதானங்கண்டுதுடை தட்டினார்கைகொட்டினார்
அஷ்டமூர்த்தியவருக்குமென்று கூத்தாடினார்பண்பாடினார்
கஷ்டமானசமுசாரசாகந் தாண்டினார்மெய்வேண்டினார்
இஷ்டதெய்வசிவலோகநாதனை எண்ணினாருள்ளநண்ணினார்
மட்டிலாதசந்தோஷங்கொண்டுதான் பட்டபாடுகளைப்பேசினார்
சென்மங்கெட்டதென்று தன்னையேசினார்
இஷ்டமானதன்செனங்களோடும்வர கட்டிமுத்தமிட்டுலாவினார்
சிங்கக்குட்டிபோலவே தாவினார்

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணிஅடதாளம்

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரே நந்தனர்தெரிசனஞ்செய்தாரே

அநபல்லவி.

தெரிசனஞ்செய்தோரதேன்மழைசொரிந்து
வரிசையுடனேயிவர்வாழிவாழியே தெரி

சரணங்கள்.

குதித்துக்குதித்துக்கையைக் கும்பிடுபோட்டுத்
துதித்துதுதிததன்றுன்பங்கள்தீப
போற்றிபோற்றியென்று பொன்னடிவணங்கி
பார்த்துபார்த்துப்பரமானந்தங்கொண்டு தெரி
அச்சமசஞ்சந்தவர திவிலுணர்ந்து
இச்சைமறந்தவரேகாந்தமாகப் தெரி

வசனம்.

தெரிசனஞ்செய்தபின்பு கொண்டுவந்தபணிவிடைசெலுத்தி அவ்வீதியில்மட்டையூறுங்குட்டையைக்குளமாய் வெட்டவேணுமென்றுவிசாரமுற்றுற்சுவாமி இதையறிந்துநாளைப்போவாராலேகுளம்வெட்டதாளப்போகாதென்று தன்பிள்ளையை ஆளாகப்போகச்சொன்னார்

துக்கடா.

மாளப்பிறவிபேர்க்கும்பிள்ளையார்வந்தார்
நாளைப்போவார்நீயாரப்பா வென்றார்
பிள்ளையார்நாளின்நாளப்பாவந்தே னென்றார்
நாளைப்போவார் குட்டைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார் வெட்டினால்புண்ணிய மென்றார்
நாளைப்போவார் அதட்டுமெட்டு மென்றார்
பிள்ளையார் குளம்வெட்டுவெட்டு மென்றார்
நாளைப்போவார் அற்பமாய்பதக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார் அப்பனேபோதும்போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார் களித்துநிருவிகற்பமா கிசைந்தார்
பிள்ளையார் குளததைவெட்டுதற் கிசைந்தார்

தரு—இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

தடாகமொன்றுண்டாக்கினார் கணநாதர்
தடாகமொன்றுண்டாக்கினார்

அநுபல்லவி.

சடாமகுடதான்சாம்பவி யுடன்வா
சகலமுனிவர்மனத தாமரையுமலா
சடாட்சரமாகக்குகன் கணபதியுடன்மன்ன
காதலலெவருநதுன்பப்பேர் தயனுசிதமென்ன-தடா

சரணங்கள்

கந்தமுலாவியதாமரைபூத்து கதிக்கமிகுந்திடுஞ்சேர்
கொண்டைவுராலுளுவைக் கணமறுகுதிக்க

சுந்திரமிகுந்தபாவைகள்முழுகினுஞ் சூழச்
சோமசூரியற்கள்சுகமுடன் வந்துதாழ
விந்தையுடனேபலவேள்வியந்தணற் செய்ய
விளங்குஞ்சங்கினமுயங்களங்கமில்லாமற் றுய்ய-தடாக
ஓதிடுவான தியானது தான்மிக நாணஆம்பமலர்ந்து
ஓதிருமுங்குருகின்குலமும்எதிற் காண
ஜோதிமருவுவந்தேவதருநிழலுங் கொடுக்கச்
சுரபிக்கடம்பைமான்கள்குழந்துவந்தங்கே அடுக்க
மாதர்மலர்குழலார்மகிழ்ந்து அங்கே நீராட
வல்வினைகளும்விட்டோடவல்லவற்களுங் கொண்டாட-தடாக
வாசனைதங்கியமல்லிகைமுல்லையின்சாலைசந்தனச் சாலை
வாழைபலாசகமுகுமகனமானபலாச் சோலை
ஆசையாகமயிலழகாவே நடிக்க
அருமறைபூசுரர்களனுதினமும் படிக்க
தேசுலாவுந்திவ்யதீர்த்தமாகுமென் றந்தத்
திசைதேவற்களும்மிக்க இசைந்தனர்தன் சோந்தமாக
நாளைப்போவார்நிஷ்டைகளைந்து பார்த்தார்
குளம்வெட்டியிருக்கவு மகிழ்ந்தார்
பிள்ளையாரிருக்கக்கண்களிற் காணார்

வசனம்.

இதெல்லாஞ்சிவன்செயலென்று சந்தோஷங்கொண்டுமுன்போல் வேகோயில்வலம்வந்துதன்னுடன்வந்த பதினொருபேற்களும் ஆதனூர்வந்துசேர்ந்தார்.

பெரியபுராணச்செய்யுள் விருத்தம்.

இத்தன்மையிசற்மகிழ்பதிலவுஞ்சென் றிறைஞ்ச
மெய்த்திருத்தொண்டுசெய்துவிரவுவார்மிச்செழுந்த
சித்றமொடுதிருத்தில்லை திருமன்றுஞ்சென றிறைஞ்சி
உய்த்தபெருங்காவலுபற் றொழியாதுமன்துதித்த

சிந்து.

பேணிச்சாருந்தொழின் முறையாரும் புகழ் திருப்புன்கூர்ச்சென் றானைக்கண்டு சேவித்திசைபாடிப்பாவித்தபின் தில்லைசிதம்பரத்தைக்கண்டு சேவிக்கவேண்டுமென்றுவலுடன் நாளைப்போவேனென்று

வசனம்.

நந்தனார்திருப்புன்கூர்சிவலோகநாதனைத்தரிசனஞ்செய்து ஆதனூர்வந்தநாள்முதல ஊணுறக்க முதலானதும்விட்டார் தில்லையம்பலம்

திருச்சிற்றம்பலமொன்று சொல்லக்கேட்டாற்சேரியிலுள்ளபெரி யோர்களைக்கூப்பிட்டு வணங்கிக்கும்பிட்டுச்சொல்லுவார்

கீர்த்தனம் - இ-ம்-பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போவேன் தேறித்தெளிவேன்

அநுபல்லவி.

சிதம்பரம்போவேனே தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப்பார்ப்புகழ்தில்லைச் சிதம்பர

சரணங்கள்.

ஒருதரஞ்சொன்ன லுலகங்களுய்ய
திருவினைபரவில்லை யென்னுளுந்தில்லை சிதம்பர
பாதிராத்திரியில்பண்மறையோதி
வேதியர்போற்றி விளங்கியதில்லைச் சிதம்பர
திறமொன்றறியாத் தீங்குகள்செய்யும்
பறயனாய்ப்பிறந்தபாவங்கள்துலையச் சிதம்பர

வசனம்

நாளைப்போவார்தனக்கு தெரிசனங்கிடைக்கவேண்டிய தற்காகக் கற்பகப் பிளளையாரைவேண்டுதல்

விருத்தம்.

காவலுடன்பூமிபடச்சாய்ந்திடுவான் செங்கமலக்காலத்தூக்கி
கோலமிடநடனமிடுந்திருமன்றுள் நாயகனேகுற்றந்தீரப்
பாலிக்கும்படியெனக்குன் னருள்புரிவாயென்று நற்பழங்கள்வைத்து
மேலைக்கோபுரவாசல் கற்பகத்தைச்சிந்தையுள்ளேவேண்டுவாரே.

வசனம்.

நந்தனர் சேரியிலுள்ளபுலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய் தரிசனம்பண்ணவேணுமென்று ஆசையுற்று புத்திமார்க்கங்களைச்சொல்லலுற்றார்.

கீர்த்தனம்—இ-ம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைபபோகாமலிருப் பேனோ-இந்த
நாற்றநரம்புகின்னஞ்சுமப் பேனோ—நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாறுமுடலையுங்கண்டுகளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாளைவிணுகக்கழிப் பேனோ-நான்

நாளைப்போகாமலிருப் — பேனோ-அந்த
நமனாருக்கஞ்சியோடியொளிப் — பேனோ நான்
நாளைப்போகாமலிருப் — பேனோசிவ
ஞானத்தைப்பாராமலிருப் — பேனோநான்
நாளைப்போகாமலிருப் — பேனோஇந்த
நாட்டிலிகழுஞ்சென்மப்படைப் — பேனோநான்
நாளைப்போகாமலிருப் — பேனோதில்லை
நாதனைக்காணாமல்பொசிப் — பேனோநான்

ஆனந்தக்களிப்பு.

காணாமலிருக்கலாகாது — பாழுங்
கட்டைகடைத்தேறவேண்டியிருந்தால் — காண
முத்தியளித்திடும் — பாதத்தில்
மூவாயிரம்பேர்கள்பூசிக்கும் — பாதம்
சத்திக்கிணையான — பாதம்வேலை
சாஸ்திரங்கள்நாலுதேடிய — பாதம்கருணாத
காலனைச்சிறிய — பாதம்ஜன
காதிகளுக்குள்ளேசெலுத்திய — பாதம்
மாலயன்தேடிய — பாதம்எங்கள்
மாணிக்கவாசகர்பிடிகை — பாதம்காண
ஆசையைப்போக்கிய — பாதம்பர
மானந்தளல்லத்திலாடிய — பாதம்
வசம்பொருந்திய — பாதம்தில்லை
மாகாளிதாழவேதூக்கிய — பாதம்காண
பாலகிருஷ்ணன்தொழும் — பாதங்காட்டி
பாம்புபுலிக்குகூத்தாடிய — பாதம்
கோலச்சிலம்பணி — பாதம்
கோவிந்தராஜர்தெரிசிக்கும் — பாதம்காண

வசனம்.

நந்தனார் சிவனைக்காணாமல் காலம்வீணாகப்போக்காதென்று கூப்பிடுவார்.

கீர்த்தனம் இராகம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

எல்லோரும் — வாருங்கள்
சுகமிருக்குது — பாருங்கள்எல்லோரும்
நல்லோர்பணியுந்தில்லையம்பல
நாதன்பாதம்பணிந்துகொள்வோம் — எல்லோரும்

### கண்ணிகள்.

வாருங்கள்பரமானந்தமிருக்குதுபாருங்கள்
விடையெடுத்தாண்டேமெனியன்றேர்வர
வட்டப்பிடித்திடவாருங்கள்தில்லையில்
இடம்பிடித்துநாமெல்லோரும்வாழலாம் வாருங்

சொல்லடா தில்லைசிற்றம்பலமென்று
மெல்லடாவாயைசந்நிதிநேரேவே
நில்லடாயிந்தநாயப்பிலவியைக்
கொல்லடாசிவலோகங்குடிபுக வாருங்

கள்ளடாநமதில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தனார்சொல்லுறுதியென்று
கொள்ளடா தில்லையம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்றுபாடிக்கூத்தாடியே வாருங்

### வசனம்

இப்படிவாருங்களென்றழைக்க புலையர்வாயிருக்கநந்தனார்நல்லவார்த்தையைசொல்லிப் பறையரை சிவநாமத்தைச்சொல்லச் சொன்னார்.

### இருச்சொல்லலங்காரவாக்குவாதம்.

நந்தனார்தில்லையம்பலமென்றுசொல்லச்சொன்னார்
புலையர்களப்பேச்சென்றுசொல்லச்சொன்னார்
நந்தனார்சங்கராவென்றுசொல்லச்சொன்னார்
புலையர் இங்கேவாவென்றுநில்லென்றார்
நந்தனார் சற்றேயாகிலும்சிவத்தியானம்பண்ணென்றார்
புலையர்நத்தையொடுபானம்பண்ணென்றார்
நந்தனார் திருச்சிற்றம்பலமென்றுபிலக்கச்சொன்னார்
புலையர் வெறுச்சகம்பளமென்றுபிலகச்சொன்னார்
நந்தனார்சேரியில்நல்லகாரியமிதென்றார்
புலையர் ஏரியில்நல்லமாரியிதென்றார்
நந்தனார்விட்டநாள்நினையாய்கெட்டநாள்மறவாமல்
புலையர்நிஷ்டைபண்ணுதசென்மம்நஷ்டமென்றார்
நந்தனார்—விட்டவினையைமுளையாமல்நட்டபயிர்பலியாமல்
புலையர்-கெட்டதானல்கிராமநஷ்டமென்றார்
நந்தனார் உங்கள்புலத்தன்மைபோகுமென்றார்
புலையர் எங்களைக்கெடுத்தாயேபாவியென்றார்

நந்தனார் தேவாதிதேவனை தெரிசிப்பீரென்றார்
புலையர் பாவாடைராயனை பாவிப்பீரென்றார்
நந்தனார் அனைத்தாளுமீசனைக்கன்புசெய்யென்றார்
புலையர் இனத்தாரைசொந்தவாக்கின்பமேதென்றார்
நந்தனார் தினமுஞ்சிவனைப்போற்றிக்களிப்போமென்றார்
புலையர்பதரைத்தூற்றிநெல்லளப்போமென்றார்
நந்தனார் பெண்ணாசைமண்ணாசைவிடுதலேநன்றாம்
புலையர் என்னாளுமுன்னாலேகெடுதலையுண்டாம்
நந்தனார்-அப்பனோடிஷ்டமுடனிருப்பேன்தடையேது
புலையர்-கப்பலோட்டிபட்டகடன்கொட்டைதூற்றால்தீராது
நந்தனார்-பூசத்திருநாளில்போய்வருவோமென்றார்
புலையர்-பேசத்தெரியாதுபேயாநீபோவென்றார்
நந்தனார்-அழுதுமுறையிட்டாலம்பலக்கேட்குமென்றார்
புலையர்-உழுதுபயிரிட்டால்உள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார்-சித்தமெல்லாம்பலத்தேசென்றதென்றார்
புலையர்-புத்தியெல்லாம்வேறுபட்டுபோச்சுதென்றார்
நந்தனார்-குற்றாலத்தீசனைக்கூறுவீரென்றார்
புலையர்-கைத்தாளம்போட்டுக்கதறுவீரென்றார்
நந்தனார்-தாண்டவத்தெய்வமேதருந்தெய்வமென்றார்
புலையர்-தூண்டிவீரப்பனேதொழுந்தெய்வமென்றார்
நந்தனார்-இஷ்டபடிக்குமீசனைத்துதியென்றார்
புலையர்-கஷ்டபட்டமாட்டோர்கசக்குதேபோவென்றார்
நந்தனார்-கொண்டாடிதெய்வத்தைக்கொள்ளுவீரென்றார்
புலையர்-பெண்டாட்டிதெய்வமேபெருந்தெய்வமென்றார்
நந்தனார்-நலத்தைக்கொடுக்கவந்தநம்குருவென்றார்
புலையர்-குலத்தைக்கெடுக்கவந்தகோடாலிக்காம்பென்றார்
நந்தனார்-பலவழக்கம்நானறிவேன்மறையாவென்றார்
புலையர்-குலவழக்கமறியாதகுருடாவென்றார்
நந்தனார்-நாக்கறுப்பேன்சிவனைநவிலுவீரென்றார்
புலையர்-மூக்கறுப்பான்கதைமொழிந்தீரேயென்றார்

வசனம்

நந்தனார்பெரியோருடைய அனுஷ்டானத்தைப்புறத்தாருக்கு
ச்சொல்லுகிறார்

## வேறு.

அந்தணர்-சிவனேதெய்வம்சிதம்பரமேகயிலாயம்
தவமேபெருமைதானசம்பிரதாயம்
புலையர்-சேறியேசொர்க்கயேறியேகைலாயம்
மாரியேதெய்வம்மதசம்பிரதாயம்
அந்தணர்-படிப்பதுஞாயப்பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால்குலசம்பிரதாயம்
புலையர்-பிடிப்பதுநண்டுபொசிப்பதுகுறைச்சி
குடிப்பதுகள்ளுகுலசம்பிரதாயம்
அந்தணர்-பாழைக்கடப்பாபறவெளிதாண்டி
கோழையறுப்பார்குலசம்பிரதாயம்
புலையர்-ஆழத்தில்குளிப்போம்ஆங்கோழைவந்தால்
கூழைதடிப்போம்குலசம்பிரதாயம்
அந்தணர்-ஆசையைப்போக்கிஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வுமதசம்பிரதாயம்
புலையர்-பூசைகள்புரிவோம்பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம்குலசம்பிரதாயம்
அந்தணர்-மையத்திலாடிமனக்கயிறுபூட்டி
வையகத்திலிருப்பார்மதசம்பிரதாயம்
புலையர்-கையிலேகலையும்காலிலேசேறும்
பையிலேபாக்குபாசம்பிரதாயம்

## வசனம்.

சிவபத்தியண்ணினால் அணிமாதிகள்அடையலாமென்றந்தண
ர்சொல்லுவார்

## கீர்த்தனம் இராகம் நீலாம்புரி ஜம்பை தாளம்.

அஷ்டமாசித்துகளைப்பெறலாந்தில்லை
யானந்தத்தாண்டவன்கோயிலைக்கண்டு
இஷ்டமுடன்வீதிவலம்வந்தீசன
இணையடிதொழுதற்கு இனிப்பிறப்பில்லை
வாருங்கள்வாருங்கள்சொன்னேன்நீங்கள்
வாயாடாதோடாவருவீரென்முன்னே
கருமணிச்சோலைபோதுமுந்தன்
கள்ளவேஷமெங்களுக்குள்ளேகிடையாது
பருகுவதகூழ்க்கஞ்சிபோதும்வாய்
பதறிவார்த்தைகள்பேசிப்பசப்பாதேபோடா

### வசனம்.

நீசொன்னபடிகேட்பதில்லை எங்கள்நிச்சயமறியாமல் பேசாதேநீ சொன்னபடியேகேட்பதில்லை.

### ஏசல்.

புலையர்-பார்ப்பாரதெய்வமதுபலிக்காதுபறையரைக்
காப்பாற்றமாட்டாதுகைவிடுவீரென்றார்
நந்தனார்-பாப்பாரத்தெருவென்றுபார்த்துபரிதிபோல்
காப்பாற்றுமல்லவோகண்ணுதலையென்றார்
புலையர்-அடுக்காதவார்த்தையைஅல்லும்பகலோதியே
பிடிக்கிறீர்பிடிவாதம்போதுமேயென்றார்
நந்தனார்-கடுக்காயைத்தின்பரோகன்னலதுபோலவே
கொக்காததானாலும்கொள்வீரென்றார்
புலையர்-பித்தனென்றுசொல்வார்போருலகிலெல்லோரும்
சத்தியமிதல்லவோதள்ளுவீரென்றார்
நந்தனார்-பித்தனாயிருந்தாலும்பிறவியறுத்தனைவர்க்கும்
முத்திகொடுக்கும்நல்லமூர்த்தியவரென்றார்
புலையர்-இத்தனைநாளுமிங்கேயில்லாதவார்த்தையைக்
கத்துகிரீரிதுவென்னகாரியமோவென்றார்
நந்தனார்-இத்தனைநாள்சென்றுஈசனடித்தாமரையைப்
பத்திசெய்யின்மனந்தோறும்பாக்கியமீதென்றார்

### அகவல்.

பாக்கியமீதென்று பரமசிவபக்தி
மார்க்கங்களெல்லாம் வரிசையாய்த்திரட்டி
எடுத்துரைசெய்வார்ஈனமாஞ்சாதி
பிடித்ததறியாமல்புலம்புவாரன்றோ

### விருத்தம்.

வங்கணக்காயாவந்தார்வாய்ப்படப்பேசவேண்டாம்
சங்கரைப்போதேபேசிச்சாதித்தகண்டாயன்றோ
பக்குவகாலம்வந்தால்பரமனுற்றிருநாமந்தான்
சக்கரைப்போலேதித்தான்றஞ்சாதிப்புறமுத்திதானே

வசனம்.

புலைவர்களனேகரானபடியால் பலவிதமாகபலர்சொல்லுகிறார்

ஏசல் கீர்த்தனம்—இ-ம்-புன்னாகவராளிரூபகதாளம்.

புலையர்-ஆண்டிப்பரதேசியாகாவென்றவர்
    வேண்டுதெய்வமதுவிளங்காது    வென்றார்
நந்தனார்—மூன்றுலகுக்கிறை முன்னின்றுகைகூப்பி
    ஆண்டவனேயென்றுஅர்ச்சிக்கு    வென்றார்
வேறொருபுலையர்நாத்தைப்பிடுங்கிப்போடவுனட்டாலிந்த
    சோற்றுக்கவலைவிசிஞ்சுமது    வென்றார்
நந்தனார்—கூத்தனார்வந்துகூப்பிடுவேளையில்
    மாத்திரைப்பொழுதில்லைமண்ணுமி    வென்றார்
வேறொருபுலையர்மாணுமருக்களுவாழ்கின்றவிடத்திலே
    யானைகிலுமுங்களுக்கமுகையோ    வென்றார்
வேறொருபுலையர்—மூக்குநுனியைப்பார்த்துமுணங்கியேனக்கோம்
    சாக்கைபோலவேசும்மாயிருக்கிறீ    ரென்றார்
நந்தனார்—வாக்கிலேசிவநாமம்வாராதபாவிகள்
    நாக்கிலேஊசியைநாட்டுவே    னென்றார்
வேறொருபுலையர்-மடைவாயின்பறவைபோல்மதியாமலிருக்கிறீர்
    துடைகாலிநீயென்றுசொல்லுவோ    மென்றார்
நந்தனார்-விடையமீனைவெட்டவெளியிலுன்னி
    அடையாளங்காணுகதுக்க    ளென்றார்
வேறொருபுலையர்—மறையோததெரியாதமடையராய்பூமியில்
    குறையாதபுலதவமைகொண்டோமே    யென்றார்
நந்தனார்—பறையனாய்ப்பிறந்தாலும்பாகதிதேடலாம்
    உறுதியாத்திரம்வேண்டும்உமக்குண்டோ    வென்றார்
வேறொருபுலையர்-கலைசுற்றியாடுதுதங்கச்சிகொழுந்தியாற்
    அளகையேநானென்றறிகிலே    னென்றார்
நந்தனார்-பலப்புரியுறதில்லைநாதாவென்றுநிற்கைத்
    இளைக்கப்போலேபிட்டீர்செல்லடனீ    வென்றார்

வேறொருபலையர்-உலகத்திலெவ்வாது உருவேறிச்சேரியைக்
கலசமிட்டீர்பலன்கண்டீரோ வென்றார்
நந்தனார்-பலகாலுஞ்சொன்னால்பலியாதுபால்வினை
விலக்காமலிருக்கு வேடிக்கை யென்றார்
வேறொருபுலையர்திருப்புன்கூரீசனைச்சேவிக்கலாமென்று
விருப்பமுடனழைத்தவித்தைதா னென்றார்
நந்தனார்-கரும்புதின்னக்கூலிகையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுகாயில்லையே யென்றார்
வேறொருபுலையர்பத்தியில்லாதவன்புலம்புரான்சிவனென்று
கத்தினாலுமென்னகாரியமோ வென்றார்
நந்தனார்நித்தமுமொருதரம்நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலொன்றுந்தாழ்வில்லை யென்றார்
வேறொருபுலையர்-சேரியிலிருந்தாலுஞ்செல்வங்குறைந்திடும்
ஊறைவிட்டாலும்பேரொதுங்குவீ ரென்றார்
நந்தனார்-வாருங்களெல்லோரும் மன்னனைப்போலவே
சேருவோந்தில்லைச்சிதம்பர மென்றார்
வேறொருபுலையர்-பாலாறுபெருகவேபண்ணையப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக்கலையுரீ ரென்றார்
நந்தனார்-பாலகிருஷ்ணன்தொழும்பாதத்தைநான்கண்டு
நாலாம்பதவியைநாடுவே னென்றார்

வசனம்.

அவர்களில் ஒருபுலையர் உரைத்ததெப்போதுஞ் சிவனைக்கொண்டாடினால்நம்முடைய தொழிலுக்குக்கெடுதியுண்டு பண்ணைவிளையாதென்றுசொல்ல நந்தனார் கேட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம் இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

ஆகாவென்றொருகுழிநட்டால்அக்கணமே விளையும்
பாவர்தங்காமற் றலையும்
சிவசிவாஎன்றொருதாஞ்சொன்னால் சென்மசாபல்லியமாச்சு
பண்ணியகருமமதுவே யாச்சு
தில்லையம்பலத்தெரிசனங்கண்டால்தேவரும் வந்தாரே
அந்தமூவப்பொருந் தாரோ
அடிமைக்காரத்தொழில்செய்வதுதுன்பமாநாளும் போச்சே
சென்மம்போனாலும் போச்சே

வசனம்.

நந்தனார்புலையர்களைப்பார்த்து அனேகஞ்சொல்லிநாளைப்போவே னென்றுசொல்ல

சிந்து.

நாளைப்போவேனென்றாரும் அங்கேநாமெல்லாம்பண்ணயர்களோடிவந்து அண்ணேநீபோகாதேநமக்காண்டை பொல்லாதவன் வேண்டிக்கொள் ளான்பாப்பாசாதியுண்டே

வசனம்.

இப்படிச்சொல்லபுலையரைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்

கீர்த்தனம்—இ-ம்—செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே யான்
ஆண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி.

மூன்றுலோகமும்படைத்தளித்திட
மாண்டவர்கொடுத்தடிமைக்காரன் ஆண்

சரணங்கள்

ஆசைக்கயிற்றினிலாடியவரும்பசு
பாசமறுத்தவர்க்கடிமைக்காரன்
தில்லைவெளிகலந்தெல்லைகண்டேறி
தேறித்தெளிபவர்க்கடிமைக்காரன் ஆண்
சிறைபிறையணிந்தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க்கடிமைகாரன் ஆண்

வசனம்.

தன்னையடிமையாகக்கொண்ட வேதியர்சொற்கேளாதவரல்லஅப் படியிருந்தும்பத்திபண்ணவேணுமென்று புத்திநெறியைசொல்லிகாட் டினார்.

விருத்தம்

தவம்பெறுமுனிவர்மெய்க்குஞ்சரித்திரங்கொண்டநந்தன்
பவமயக்கறுக்கவேண்டிப்பகர்ந்திடும்சிவாலயத்தை
அவகுணங்கொண்டயோரறிந்திடப்போயோவெல்லாஞ்
சிவன்செயலாகுமாற்செய்வதொன்றில்லையென்றார்

## வசனம்

திருநாளைப்போவார் அனேகவேதஞ்சொல்ல புலையர்கேளாமலி ருக்கிறதைச் சிவன்செயலென் றுநாளைப்போவார் சும்மாயிருந்தார் அந்த ச்சேரியிலுள்ள புலையர்கூட்டங்கூடி மூதகோணல்நந்தனுக்கு புத்தி சொல்வோமென்றெண்ணி அந்தச்சேரியிலே வெகுநாளாயிருக்கின்ற ஒருபுலையன் வயதுபுகுந்து உடலதளர்ந்து பல்லுகளுதிர்ந்து கோலுகள் கருங்கிரம்பு தெரிந்து முதுகுசரிந்து முழுதும் வலோந்து அங்கம் சொரி படர்ந்து தினவுமிகுந்து அதனைச்சொரிந்து செந்நீர்வடிந்து அவ்வுடல் நடுங்கி இவ்விதமிருக்கிற பெரியகிழவனானவன் ஒருகோலூணி கூனிதருகி கோணலாய்நடந்துவந்து அவன்நந்தனைப்பார்த்து கட்டியணைத்து தலைநிமிர்ந்து கண்ணீர் சொரிந்து மார்பில்வழிந்து மனங்கலங்கி காதல் மிகுந்து ஒன்றுந்தெரியாதவனென்று நினைத்து பரிந்து ஞாலமறிந்து சொல்லுவான்.

கீர்த்தனம்-இ-ப-பிபாக்-ஆதிதாளம்

பல்லவி.

ஞாயங்கானேநீர்சொல்லு ஓய்நந்தனாரே
நமமஜாதிககடுகரும்மா ஞாயங்

சரணங்கள்.

சேரியிலில்லா வழக்கம்நீர்
செய்துக்கொண்டுவந்த பழக்கம் அந்த
ஊரிலெங்குமது முழக்கம்வெகு
உறுதியாச்சுது ஒழுக்கம் இது-ஞா
சிதம்பரமெனகிற பேச்சுநாங்கள்
செய்திடுங்காரியம் பேச்சு அது
மதம்பிடித்ததுபோ லாச்சு அந்த
மண்டலப்பறையருக் கேச்சுது-ஞா
பறையருக்கேதுதைப் பூசும் அதைப்
பார்க்கவேயுனக்கு விஸ்வாசம்சிறு
பயல்களுக்கேயுப தேசம்நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம் இது-ஞா

வசனம்.

சேரியில் பெரியகிழவனனபடியினல்சாதிவழக்கங்களெல்லாமறிந்தவனாதலால் நந்தனாருக்குஇன்னமுஞ்சொல்லுகிறான்.

சிந்து

பாரப்பாஜாதியுண்டே என்னபாடு முழுக்காமெங்கே நமக்குந்திரு நாளைப் அந்தஞாயமுண்டே என்னபாயமிதுவென்றே தடைசெய்தார் சிவன்வேடிக்கைதாவென்று நாடிக்கொண்டே யறியாதுபோலிருந்தார்

௫

## பெரியகிழவன்சொல்லியவிருத்தம்.

கழனியைத்தெய்வமெனச்சுற்றிவந்து தலைவணங்கிகாக்குளித்து
உழுதுபரம்படித்துவிரைதெளிந்து முளைகொள்ளநீரோட்டிவிட்டு
பழுதறவேநட்டதலைக்களைபிடுங்கி மடையினில்நீர்பாய்விட்டுச்
செழித்திடவேபொங்கலிட்டுக்காத்தலறுயனைவேண்டுஞ்செய்கைதான்

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

### பல்லவி.

சுவாமிதெரிசன நமக்குண்டோபுலைய
சாதியென்றேவந்த நீதியறியாமல்

### அநுபல்லவி.

பூமிதரிசனம்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொருசுவாமி
நாத்துநாற்புகளைச்சுமப்பதும் உழுவதும்
நஞ்சைசெயலைசுற்றி வருவதும்வளம்பெற
பார்த்திகள்கட்டுவிரை தெளிப்பதுபறிப்பதும்
பாயுமடையைத்திறந்திடுவது மன்றியில்சுவாமி

சேரியிடையில்குடியிருப்பதும் பதருள்
சிதரைத்தூற்றநெல்லளப்பதும் பார்ப்பதும்
ஊரைவளைந்துதமுக்கடிப்பதும் மதக்குட
முண்டுகளித்துநாய் உறங்குவ தன்றியில்சுவாமி

ஆண்டைமார்களிடும்பணிவிடை செய்வது
மருகில்நின்றுவாய்விடுவதும் நடுவதுங்
தாண்டிநடந்துநெடுங்கோல்பிடிப்பது மளப்பது
தனித்துசுடலைதினங்காப்பது மன்றியில்சுவாமி

### விருத்தம்.

சாதியின்முறைமைகாட்டிக் கடையற இப்போதுமென்
வேதமாமுனிவராலும் விளவியுங்கண்டாரில்லை
பேதமாம்புலவருக்குப் பேரின்பநிஷ்டையேதன்
னாதலாலென்னசெய்வோமென்றப்புலத்தஞ்சுவாரே

### வசனம்.

பெரியகிழவனைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம-ஆதிதாளம்

சிதம்பரதெரிசனங்காணுவிடிலிந்தசென்மசாபல்ய மாமே
சொன்னமானைசமுசாரமபெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுக்கருத்திருக்கச்சிவனைக்காணாமல்காலங்கழிக்க வாமோ
காலபாசநமனருகில்வராமல்கண்டுபோக்க போமோ
இப்படியேயெப்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
பிருதயமறிகதிடச்செய்திருக்கன்மங்களிகழுகதுபிரிந்துபோமோ
பின்னுமுன்னுமறியாதமூடர்கள்புத்திகேட்க லாமோ
புலையர்வாடியிருக்கினுமெய்திடும்புண்ணியங்கள் போமோ
பரமசிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபாவி பார்த்தேன்
பாவஞ்செய்தவர்க்குப்பலியாது அதிலபாடுபெட்டுப் பார்த்தேன்

வசனம்.

சேரிபுலையர்கள்கூட்டங்கூடி அனுப்பினவைக்கபெரியகிழவன்நந்தனுக்குச்சொல்லக்கேட்டு ஆச்சரியப்பட்டு நந்தனார்கிழவனைப்பார்த்துச்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம-கண்டகம்-ஆதிதாளம்

| | | |
|---|---|---|
| மீசைநரைத்துப்போச்சே | கிழவா | ஆசைநிறக்கலாச்சே |
| பாசம்வருகலாச்சே | கிழவா | பாவம்விலகிப்போச்சே |
| கூனிகுருகிப்போச்சே | கிழவா | கோபம்விலகிப்போச்சே |
| அங்கந்தளர்ந்துபோச்சே | கிழவா | ஆங்காரமும்போச்சே |
| சேரியைமிறந்தாயோ | கிழவா | சிதம்பரநினைத்தாயோ |
| பணிடசென்பாடா | கிழவா | மாண்டால்வருமோடா |
| அம்பலத்தரசனடா | கிழவா | ஆனந்தசுப்வாடா |
| திருவடிபணியாயோ | கிழவா | தேடித்தெளியாயோ |

வசனம்.

நந்தனார்இவ்விதஞ்சொல்லி சிவகாமவல்லிபாகனைநினைத்து கேள்விபெரியகிழவன்முகத்திலேதடவி வாயிலேபோட்டு கட்டியணைத்துக்காதிலேசிவமந்திரமுபதேசித்தார் உபதேசித்தவுடனேபெரியகிழவன்சித்தந்தெளிந்துசிவமாயநிறைந்து உற்றுணர்ந்து ஒருவனுமிருந்து அத்தனடியாரருளிதுவென்று பத்திமிகுந்து பரவசங்கொண்டுபேசத்தெரியாமற்பேசுவாநான் இன்றைக்குத்தான் பெரியகிழவனானேன்நந்தனைதுபததரிசிக்கவந்தாயேமுத்திதந்தாயென்றுகூறிவலம்வந்து அடிபணிந்துவிடைபெற்றுக்கொண்டு களித்தேன் ஆனந்தங்கொண்டேன்குறைதீர்த்தேன் அமிர்தமுண்டேன் பசிதீர்த்தேன் பிறவிவென்றேனவிதிஜின்றேனென்றுபேசிக்கொண்டு பெரியகிழவன்வருகிறார்

பெரியகிழவனார் நந்தனாருபதேசம்பெற்றுவருகின்றார்.

# திருநாளைப்போவாரென்னும்.

கீர்த்தனம்-இ-ய-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி.

பெரியகிழவன்வருகிறான் பேரானந்தக்கடலாடி — பெரிய

சரணங்கள்.

பாவிப்பறையனிலிருந்து — பாமுதல்பூதங்களைந்து
பெரியவரென்றுணர்ந்து — பேரின்பலாபத்தையடைந்து-பெரிய
படிபுறச்சுகனுற்றுமகிழ்ந்து — பரமசிவபத்திபுரிந்து
கொடியபாவங்கள்தீர்ந்து — குனிக்குறுக்கிநோக்கு-பெரிய
நந்தனார்சொன்னதறிந்து — நானென்னுமுரையுமிழந்து
பந்தயபயத்தர்நெகிழ்ந்து — பரவெளியாகக்கலந்து-பெரிய

வசனம்.

புலையர்களெல்லாங்கூட்டங்கூடி நந்தனாருக்குச் சிதம்பரப்பித்துத்தெரிய புத்திசொல்லவனுப்பியபெரியகிழவன் நந்தனார்பித்துக்கொண்டு அவனுடையபக்தியையெல்லாம் புலையர்களிடத்திற்சொல்லிக்கொண்டாடுவான்.

பெரியகடுக்கா

திருநாளைப்போவார் இந்தச்சேரிக்குமூருக்கு
மாருக்குப்பெரியவர் திருநாளைப்போவார்
ஒருநாளாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடுமென் றுண்மைகூறிய — திருநாளை

அடாதுசெய்தால் படாதுபடுவீர்விடாதுபாவந் தொடாதே அவன்பேரெடுத்தூறுபடாதே கையிடிபடாதே வெம்பகையிடாதே அப்பாதிடாதவன் கோப்படாதுபட்டால்விடாதுசலம் படாதவன்பயப்படாதவன் இடங்கொடாதவன் அடங்காதவன்நிலைவிடாதவன் மாறுபடாதவன்மனம்விடாதவன் அடங்கிடாதவன்விடைபாவலைப்படான்மாயையிலகப்படாதவன் சிலைபிடைவிடான் கழனியைவிடான் கலப்பையைத்தொடான் நடத்துவழிப்படான்பாவிகிடாரிலலைபிடாரிவெல்லப்படாதுசல்லப்படாதுகள்ளப்படாது பாரையும்விடாது துன்பந்தொடாது வழியைத்தேடாது இருவினைப்படாது சென்மங்கெடாது தெய்வந்தொடாது அவனைவிடாது வேறுபடாமல்ஆசைபடாது அருளைக்கெடாது சங்கப்படாது தன்சக்கடாப்பொங்கப்படாதவன் இணைவிடாதபுண்ணியகடாக்ஷன்செய்தவம்படாது பதிபிடிபடாதசிங்கம்அளவுபடாதமகிமைவிடா பெரியவனடா தெரிசனப்படாதசந்நிதிவிடாத தியானத்தைத்தேடா ஆணவிலகடா வெனற செல்லடா அவனைப்பணியடா தாளைப்பணியடா அறிந்துபோற்றடா கைபணிந்தேற்றடா மலனைத்தூற்றடா மனைத்தேற்றடா பிறவிமாற்றடா ஆனந்தக்கூத்தாடடா சொன்னேன் திருநாளைப்போவார் இந்தச்சேரிக்குமூருக்குமாருக்கும்பெரியவர்

வசனம்.

இப்படிபெரியகிழவன்சொல்லக்கேட்டு நந்தனாராலேகொடுக்கப்பட்டபதினொருபேர்களுக்குள்ளேயும் பனிரெண்டாம்பேராயிருக்கத்தலைபட்டு சிவாவென்றுசொல்லிச் சேரியைக்கொடுக்கத்தலைபட்டீர்களே கிழவாவென்று மிகவுந்துன்பமடைந்து புலையர் ஒருவருக்கொருவர்சொல்லித் துயரப்படுகிறார்.

கீர்த்தனம்—இ—ம்—புன்னாகவராளி-ரூபதாளம்.

பல்லவி.

நாம்என்னசெய்வோம்புலையரே இந்தப்
பூமியிலில்லாதபுதுமையைக்கண்டோம்

சரணங்கள்.

நந்தனொருவராலேயிப்படி யாச்சு
நன்மையுந்தின்மையுமில்லாமற் போச்சு
சந்திக்குசந்திகூத்தாட லாச்சு
சாமியுமில்லாமல்எங்கேயோ போச்சு—நாம்
கன்னற்கண்டாய்வார்த்தைகேட் பாரோ
காதிற்பட்டாலதைகருத்துக்கொள் வாரோ
மன்னாரசாமிக்குப்பூசைபோட் டாரோ
மாரியாத்தாளெங்கேமறைந்திருக்கி றாளோ—நாம்
சேரிக்குள்பதினொருபேரோடுங் கேட்டான்
செய்யுந்தொழில்முறையாவையும் விட்டான்
ஊருக்குப்பெரியகிழவனும் நாட்டான்
உண்மையறியாமல்சிதம்பரந் தொட்டான்—நாம்

வசனம்.

சேரியில் துன்பமடைந்த புலையர்களைப்பார்த்துஉங்கள்தெய்வத்துக்குவழக்கம்போலேபூசைபோட்டுபலியிட்டுவேண்டினால் சேரிக்குநல்லகாலம் பிறக்குமென்று பெரியகிழவனார்சொல்ல புலையற்கள்பூசைபோடுந்தெய்வங்களாவன

வீரன் இருளக்காட்டேறிவெரியன்நொண்டிசாமுண்டிதூற்றித்தாண்டிநல்லண்ணன்தொட்டிச்சின்னான் பெத்தகண்ணன்மாரிபுனியன்சக்கிலிபுடன்கறுப்பன்பாவாடைமூறிக்காத்தான்குழியிரிசிம்மாகன்னி சத்தகன்னியும்சேரிமின்னான் மின்னடியான்சிறுகாட்டுடையான்பனைமரக்காரன்மாரியாண்டிவழிப்பறிகாரன்பேயாண்பக்கிரியுளரியினுஞ்சிலம்பாயி இடையான்நல்லான்ஊமையம்பாக்கியமுங்கல்லன்பெத்தாச்சிவீட்டுதெய்வமுதலாயின.

வசனம்.

இதுகளைத்தெய்வமென்றுவணங்கிக்கொண்டாடவெனக்கோழிஆடுகளுடன்மதுக்குடம்வைத்துப்பள்ளயம்போட்டு பம்பையடித்துவருந்தச்சன்னதர்வரும்சொன்னேன்சேரிக்குநல்லகாலம்பிறக்கும்சிதம்பரப்பித்துநந்தனுக்குத்தெளிந்துவிடுமென்றுபெருகவாழ்வீரெனறும்பெரியகிழவன்சொன்னாரேஅப்படியேகிழவன்சொல்லைநம்பிக்கைகொண்டுபுலையர்களெல்லாம்பந்தலிட்டுப்பள்ளயம்போட்டுகொம்புதப்பட்டைமுழக்கிமுப்பூசையிட்டுவேண்டுவார்

வருந்திக்கொண்டாடும்—அகவல்.

புலையர்—எல்லைபிடாரியேஎதிராகவந்துயெந்
தொல்லையுங்காவலாய்க்கொள்ளடி — யென்றார்
நந்தனார்—சொல்லினுமடக்காதுசோதிபரமானந்தத்
தில்லைநாயகனைத்தேவ — ரறியாரோ
புலையர்—முண்டாகசுட்டிவரும்கொண்டிவீரப்பனைக்
கொண்டாடிபூசைகொள்வீ — ரென்றார்
நந்தனார்—அண்டங்கள்பதினாலுக்கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாகநில்லாது — வென்றார்
புலையர்—கங்கையரிவாள்வைத்தகருப்பண்ணசாமியை
இச்சையுடனேவேண்டியென்றெய்வ — மென்றார்
நந்தனார்—பச்சிலைபிடுங்கிபாதாரத்திலேசாற்றினாய்
இச்சையானதாமீயுமென்றெய்வ — மென்றார்
புலையர்—நேசமறிகோலமும்நீமூன்றுசாவலும்
தீயகள்ளும்வைத்துதெறிசித்து — நின்றார்
நந்தனார்—வாயாலேசிவனென்றுவருந்தினாலெப்போதும்
தாயாரைப்போலவேதழுவிவரு — மென்றார்
புலையர்—பித்துபிடித்திருக்கும்பேயனாம்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச்செய்திடுவீ — ரென்றார்
நந்தனார்—பதிவெள்ளம்பெருகிப்பாய்ந்தாலுஞ்சேரியில்
தங்கையுரிஞ்சாதிருடாது — வென்றார்

வசனம்.

இவ்வகையாகப்பூசைபோட்டுத்தெய்வங்களைக்கொண்டாடும்புலையர்களைப்பார்த்துநந்தனார்சொல்லுவார்.

விருத்தம்.

இத்தனைநாட்பரமசிவன்றிருமகிமையிரவுபகலெடுத்துச்சொன்
பதிபரியென்றனுக்கேயருள்புரிந்தவையன்பாதம் (னேன்
பணிவீரென்றேன் இத்தலையுமிழந்திடவே
மனமெல்லுப்பாரெந்தனையுமவமானித்திற்புத்தி

கீர்த்தனம்—இ—ம்—தோடி—ஆதிதாளம்.

பத்திசெய்குவீரோ டசனைபத்திசெய்குவீரே

## அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்றஉத்தகபனைவிட
நித்தியதேவர்களுமில்லையென்று — பத்தி

## சரணங்கள்

சாதமதாவணயிருக்குளசாவேதனு
சாற்றுமுபநிஷத்துமதற்பரனேஅரனென்று
மேருமற்சொல்லியபின்புமில்லையுன்று
எவர்களும்பிரியசவறப்புவிதனினின்று — பத்தி
ஆகமமிருபத்தெட்டயுதபுராணமும்
அயன்கீதைமுதலான அலக்ஸ்மிருதிசளும்
பரகமாசியபிரமவப்பரமநொருமனென்று
பண்புடனுணர்த்திடும்பான்மையதால்நின்று — பத்தி
கௌதமற்முதலானவிருடிகளனைவரும்
கரியமால்தொழும்பங்கதிபென்வனுதினமும்
புவனத்தில்போற்றியேயேறறினதால்வா
புகழும்புண்ணியபாவம்பொருந்திநாரென்பதால் — பத்தி
அரியயனிந்திரமுதலானதேவரும்
அரனடிதன்னையேஅன்பாய்பூசித்தால்
பரிவுடனவற்செல்வம்பழுதுவாராமலே
பாவித்தாற்சிவனென்றுபத்தர்சொன்னதினாலே — பத்தி
வியாசமுனிவரும்அத்ராடியார்களும்
விஷ்ணுபரமென்றுவிளம்பினதால்முன்னம்
காசிக்கங்கைகரையிற்கையிருந்தும்
கல்லாய்த்தானேயவர்சமத்ததினாலேயும் — பத்தி
தில்லையம்பலத்தில்திருநடனமாடிடும்
தேவாதிதேவனைத்தினம்பணிந்தேத்தியே
அல்லல்சமுசாரக்கடலினில்முழுகாமல்
ஆனந்தகூத்துகளாடிக்கொண்டுநீங்கள் — பத்தி

## விருத்தம்.

இத்தனைநாட்பரமசிவன்திருமகிமை யிரவுபகலெடுத்துச்சொன்
னேன்பத்திவிரியெந்தனுக்கேயருள்புரிந்தவையன்பணிவிரைன்றேன்
அத்தனையுமிழந்திடவேமனவெறுப்பாயெந்தனையு மவதவபனுதிரத்
திசொல்வேனென்றவர்கள்முழந்தாளிற்றடிகொண்டுபுனைந்திட்டாரே

## வசனம்.

நந்தனார் மகாபலசாலியானபடியினால் புலையற்களைச்சிட்சிஞள்சிவ
நாமத்தைச் சொல்லுவார்.

### தண்டகம்

| | |
|---|---|
| தத்திலவிரோதகாண்டிக் | குதிப்பார் |
| முத்தமிக்கைதப்போல்முகத்தைக் | சடிப்பார் |
| வாற்கொண்டுகட்டிவளைக்கும் | பிடிப்பார் |
| மணிக்கல்லெடுத்துடைக்குள் | செழுப்பார் |
| பல்லாரகுரண்டியேபாம்பாடித் | திருப்பார் |
| சல்லாலெரிந்துபவகாயம் | படுகுவாற் |
| குப்புறத்தள்ளியேவைப்பினி | சொன்றுற் |
| சிவபரமென்றுநீர்சேவிப்பி | சொன்றுற் |

### வசனம்

இப்படிசெட்சிக்நபின்பு 'புலையற்களெல்லோருநந்தனாரடிக்குப்பயந்து பத்திசெய்யத்தொடங்கிறார்.

| | |
|---|---|
| அரகாசிவசிவ | அம்பலவாணு |
| தில்லையம்பலதேசிக | நாதா |
| புரமூன்றெரித்தபொன்னம்பல | வாணு |
| கரியுரியேதக்கருணு | காமேன |
| அனுதினமன்றிநுளாடிய | பாதா |
| பிழைபொருத்தருளும்புண்ணிய | மூர்த்தி |

### வசனம்.

மூடப்புலையர்க்குபுத்திதருவாயென்று அவற்களுமிப்படிச்சொல்லத்தொழுவார்

கீர்த்தனை—இ—ம்—எதுகுலகாம்போதி—ஆதிதாளம்

### பல்லவி.

பத்திகள்செய்தாரேபரமசிவபத்திகள் செய்தாரே

### சரணங்கள்

| | |
|---|---|
| பத்திகள்செய்தா நற்றவம்புரியுமனந்த | |
| சித்தமகிழ்ந்திடவததனைபேற்களும் | பத்திகள் |
| எடுபபானசிவத்தைதபடிப்பான தடியொன்று | |
| பிடிப்பான்சாலுக்குஅடிப்பானென்றே | பத்திகள் |
| கல்லாலவனிங்கே சொல்லாலவனறி | |
| வில்லாதவன்வெகுபொல்லாதவனென்றே | பத்திகள் |

### வசனம்.

அந்தச்சேரியிலே புலையற்கள் பத்திசெய்தால் சேரிசிவலோகம்போலேவிளங்கியதுசிலநாளுக்குப் பின்புபுலையற்களெல்லோரும் கூலநந்தனாரைப் பணிந்து நல்லவார்த்தைசொல்லி நாங்களெல்லோரும

ம் நாளொன்றுக்குமூன்றுவிசைசிவனையென்றுசொல்லுகிறோம்மற்ற வேளையில் எங்கள்பண்ணைத்தொழிலைசெய்வேனென்று கேட்கநந்தனார் நல்லது அப்படிதப்பாமல் செய்டங்களென்று நந்தனார்சொல்லச்சேரி பெரியகிழவனுடன் திருப்புன் கூறுக்குப் போய்வந்தபக்திபரிபுலயர்கள்நந்தனைச்சுற்றி அடிபணிந்துசொல்லுவார்.

என்சீரடியாசிரிய—விருத்தம்.

சொல்லையெனுற்பிறவிவிளைமுளைவிசாமம்
　குடிமாறிபபோர்வதர்க்கோவகைகேட்டு
கள்ளமனக்குரங்கதனுல்விடையமாச்சு
　கட்டியிருந்தாவிருந்தவிருத்திபோச்சு
உள்ளங்கைகுள்ளிருக்குங்கனியைப்போல
　உருவில்லாதான்மாவோராறுக்குவாழ்வீர்
எள்ளளவும்பிசகில்லைஎன்றுஞானம்
　விற்றுவார்முகமலத்தைததூற்றுவாரே.

கீர்த்தனம்—இ—ம்—எதுகுலகாம்போதி—ரூபகதாளம்.

பல்லவி.

பார்த்துபிழையுங்கள் நீங்கள் பார்த்துபிழையுங்கள்

அநுபல்லவி.

பார்த்துபிழையுமிந்தன்சோற்றுத்துருத்தியை
எத்தித்தொழூவேண்டாம்காற்றுப்போகுமுன்னே　　பா

சரணங்கள்.

ஆத்திமதிசூடுங்கூத்தனிடமாய்
சூத்திரத்தையிந்தசேத்திரத்துள்ளநாடி　　பா
வீற்றிருப்பீர்காலங்காததிருப்பான்சிவ
சாத்திரத்தைஞானகாத்திரத்தாலுற்றுப்　　பா
மூலக்கனல்தாண்டிமேலக்கரைவந்து
பாலைக்குடியிந்தநாளுக்குள்வாராமல்　　பா
பாலகிருஷ்ணன்தொழுங்கோலக்கண்களை
மேலுக்குமேல்நாடிகாலக்கலியற　　பா

கீர்த்தனம்—இ—ம்—யமுனாகல்யாணி—அல்லது—சாங்காரூபகதாளம்

பல்லவி.

தில்லைசிதம்பர　　மென்று—ஒரு
தாஞ்சொன்னால்பரகதி　　யுண்டுண்டு

அநுபல்லவி.

நல்லசுருதிமுடி　　கண்டுசபா
நாதன்திருத்தாளைச்சிந்தையில்　　கொண்டு—தில்லை

சரணங்கள்.

வேரில்லாமலொருவிருட்சமென் திருக்கு
வினையும்விளைகளெல்லாமது செய்யுந்திருக்கு
பேரில்லாமல்ஞானத்திகொண்டு தருக்கு
பேரின்பவாணரைப்பிசகாமல் செருக்கு — தில்லை
தேசம்புகழுந்தில்லைக்கோயில் வளைந்து
திக்குஞ்சைவபஞ்சாட்சரம் புரிந்து
ஆசையுடனேபர்த்தசாமத்தி விருந்து
அங்கம்புளகிதமாயடிக்கடி பணிந்து — தில்லை
மாயன்கோபாலகிருஷ்ணன்தினந் தேடி
வருந்தும்செந்தாமரைமலரடி நாடித்
தாடையைப்பிரிந்தவிளங்கன்றுபோல கூடித்
தனிதிருந்துதாளம்போட்டுக் கொண்டாடி - தில்லை

கீர்த்தனம்-இராகம்—கொள்ளிப்பந்து-ஆதிதாளம்
பல்லவி.

நமக்கினிபயமேது தில்லைநடாசரிருக்கும்போது
அநுபல்லவி.
மார்க்கண்டேயருக்காமறலியையுதைத்திட்ட
மான்மழுவேந்தும்மாதேவனிருக்க நமக்கி

சரணங்கள்.

இம்மைமறுமைமுதலியாவுக்கும்பரமன்
சின்மயாநந்தரூபச்சிவபெருமானிருக்க நமக்கி
அரியயனமரும்ஆலங்கண்டஞ்சமும்
பரிவுடன்வரக்காத்தபரமசிவனிருக்க நமக்கி
ஆதிசேடனுமானுமலசோனிலக்குமியும்
மாதலாய்தவஞ்செயக்களித்தபரமனிருக்க நமக்கி
இரணியனல்வெறிகொண்டநரசிம்மனை
தரணியில்சட்சித்தசங்கரனருகிருக்க நமக்கி

கீர்த்தனம்—இ-ம்-தோடி-ஆதிதாளம்.
பல்லவி

சங்கரனைத்துதித்தாடு இனிசனனமில்லையென்றுபாடு

அநுபல்வி.
பொங்காவணந்திடு பொன்னம்பல
விந்தியில்நினைவாகப்போற்றுவாய் சிவனை

சரணங்கள்

பாரினிற்பெண்கள்போற் கருந்துபோய்
பற்றவொட்டாமலே திருத்து
பேரின்பஞானத்தை வருத்து-சுகப்
பெருவெளிநெஞ்சி விருந்துசங்கரனே
நீர்மேற்குமிழியிக் காயமென்றும்
நிலையில்லாவாழ்விது மாயம்
போனமாலயன் தேயன்பெறப்
பேசுவதே யுபாயம்சங்கரனே
மனிதஜனனத்தில் தேடுநல்ல
மாதவத்தோர்களைக் கூடு
தனிவெளிமாமொரு வீடுதன்னைத்
தத்துவத்தால்கண்டு நாடுசங்கரனே

வசனம்.

இப்படிச்சொலிய நந்தனாரைநோக்கி அவர்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-சவாயிதண்டகம்-சாப்பு-தாளம்

அவர்கள் புண்ணாகியவிந்தப்புறவிபிணிக்குமருந்
துண்ணாமலிருப்பது உண்மையோ நந்தா
நந்தனார் கண்ணாலேபார்த்திடில்காட்டில்மறைந்திடும்
பண்ணான பூதங்கள்மாயமோ மைந்தா
அவர்கள் இருப்பதுபொய்யெனறிராததுமெய்யென்றும்
இருந்திபபேசியவகையென்னடா நந்தா
நந்தனார் உருதமெதரியநாபரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டுகாணலா மைந்தா
அவர்கள்விஸ்தாரமாமிர்தபிண்டமாமைமதனை
யத்திக்கொண்டிருந்தநுபகர்ந்திடும் நந்தா
நந்தனார் வித்துள்விருட்சமடங்கியவாறுபோல்
சத்துக்குளண்டசராசர மைந்தா
அவர்கள் புத்திக்குளெட்டாதபோதத்தைநாமுண்டு
முத்திபெறுவழிமொழியுமோ நந்தா
நந்தனார் அத்தனிருக்குமிடமன்னயமாதிகள்
பத்துதலில்லப்பாவெளி மைந்தா
அவர்கள் தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண்ணுவதையேது நந்தா
நந்தனார் நித்திரையெழுந்தபின்நினைவுடனேகூடி
உத்தாரம்பேசியேதுண்மையே மைந்தா
அவர்கள் பித்தனைவேறொருபேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள்தெளியுமோ நந்

நந்தனர் பத்தியலைவீசிப்பார்த்திடும்வேளையில்
சுத்திகுதித்திடுந்தாண்டவ மைந்தா
அவர்கள் சிலைமுள்ளநல்லசேதிசொன்னையுந்தன்
காலுக்குக்கும்பிடக்கண்டோமே நந்தா
நந்தனர் பாலுக்குச்சர்க்கரைபலித்ததுபோலுங்க
ளாலேயன்றோவிடுநாடாள மைந்தா
அவர்கள் தூலசரீரந்தனைச்சுமந்தபிள்ளைபூச்சி
போலேபாவேமுந்தன்புண்ணிய நந்தா
நந்தனர் பாலகிருஷ்ணன்தொழும்பரமசிவனரு
ளாலேம்பாங்கிவருமானந்த

எண்சீர்க்கழிநெடிலாசிரிய-விருத்தம்

காரமொன்றுசொல்லைமூலப்போட்டு
உருதிபெலுமிருப்புலக்கையிலேலங்கி
வாங்காரமெனறதட்டுவாகையிட்டு
வடிக்கசடியேகண்ணியதைப்புடைத்தெடுத்து
நீங்காதசிவயோகநிஷ்டைகொண்டு
நிர்மலதாய்வரஞ்சுற்றிவந்து
பாங்கானநந்தனிருதாளைப்போற்றி
பணிந்திட்டார்திருநீற்றையணிந்திட்டாரே

வசனம்

அவர்கள் நந்தனை விட்டுநீங்கி தனித்திருக்கமனம்வசமல்சொல்லுவார்

விருத்தம்.

தில்லையிற்போகவேண்டார்திரும்பிவந்தாலும்மைச்
சொல்லைதுபண்ணைப்பார்ப்பான்சினங்கொண்டபடியாலிந்த
எல்லையிலிருந்துதானேயீசனார்திருநாமதனைச்
சொல்லியேநாலாம்விட்டிற்சேருவோம்வாரீரெனறார்

வசனம்.

அனல்கண்ட மெழுகதுபோ லுருகிப்பத்திவெள்ளம் பெருகிச் சொல்லிய பேர்களை கவாரவிங்கனம்பண்ணி கண்ணீர்சலம் பெருகச் சொல்லுவார்

கீர்த்தனை-லாவணி-ஆதிதாளம்.

தில்லைவெளியிலேயலந்துகொண்டாரவர்திரும்பியும்வருவாரோ
எல்லைகண்டபேரினிப்பிறவாரென்றியம்புவதறியாரோ
பெண்டுபிள்ளைகள்வெறுங்கூட்டமதுபோயச்சுரைக்காய்தோட்டம்
கண்டுகொள்வாம்பரிகாசமறிவிற்கனகசபையினாட்டம்
திருவாதிரையில்தெரிசனங்காணத்தேடித்திரியாரோ
அரிதாகியவிந்தமானுடங்கிடைத்தாலானந்தமடையாரோ

குஞ்சிதபாதத்தைகண்டாலொழியகுறையதுநீங்காதே
சஞ்சிதகுமாரதிகளுடாடியாடலமுந்தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம்பெருவேன்தடைசெய்வதுமறியாரோ
இரவும்பகலுமொழியாதகவலையிலிருப்பதுசுகமோடா
இன்பம்பெருகுப்பரமானந்தவெள்ளமிழந்துநீபோடா

வசனம்.

சிதம்பரம்போவேன்நீங்களிங்கேயிருங்களென்று நந்தனார்சொல்லுவார்

கீர்த்தனம்—இ-ம் செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தனைசெய்துகொண்டிருந்தாலுங்களுக்
கெந்தவிதங்களைபோலாம்சிவ சிந்தனை
அந்தணமுனிவரும்மிந்திரனமரும்
வந்துபணியுமரவிந்தபொற்பாதத்தை சிந்தனை
மாபனைவதைத்தவன்காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன்தாமரைபாதத்தை சிந்தனை
தம்புருவணிந்திறிந்தும்புருநாரத
ரும்பணியும்பொன்னம்பலவாணனை சிந்தனை
வெப்பியதுபபிசகருளியபாலகிருஷ்ணன்
பணியும்திருவம்பலநாதனை சிந்தனை

கீர்த்தனம்-இ-ம் பூரிகல்யாணி—அல்லது-சாமராகம்சாப்புதாளம்.

பல்லவி

தில்லைத்தலமென்றுசொல்லத்தொடங்கினு
வில்லைப்பிறவிபிணியும்பாவமும்

அநுபல்லவி.

சொல்லுக்குமிதுவேசிவலோகம்
எள்ளத்தனையறஞ்செய்யில்மோகத் தில்லை

சரணங்கள்.

ஆகமவேதபுராணங்கள் சாத்திர
காதத்திலாரும்விண்ணுட பாத்திர
மாலயமாயிரத்தெட்டினி னேத்திர
மானந்தத்தாண்டவமாடிய சேத்திர-தில்
அணத்திலாடுமணிமாநி சித்தியுங்
காத்திலாரும்விண்ணுட வெற்றியும்

இணையில்லாதகுழிசாஸ்திர பத்தியும்
இகத்திற்றுபனவருஞ்சிவபத முத்தியும்—தில்
பரமரகசியமென்று பார்க்கலாம்
பாலகிருஷ்ணன்கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
சகடற்கட்குமுத்தியுமுண் டாக்கலாம்—தில்

வசனம்.

நந்தனார் ஞானஉபதேசஞ் சொல்லக்கேட்குமுன்னே நந்தினருடன் திருப்புன்கூறிற்போய் சிவதரிசனஞ்செய் துவந்தவர்களாகிய அரவன்தொந்திஆனையேறி முக்காமாறி முனிசாத்தான் பாச்சலூரான் ஆண்டிசேவகன்சொறியன் வெறியன்காளியான் எல்லைக்கற்றியென்றபெரி[illegible]கிழவரிந்தஆறுபேர்களு மானந்தமடைந்து அவரவர்கள் நிஷ்டையிலிருக்கத்தொடங்கி நின்றார்மற்றப்புலையர்கள்கூட்டங்கூடிநந்தனார் நம்மைநாளொன்றுக்குமுன்னுதாஞ்சிவநாமத்தைச்சொல்லச்சொன்ன குற்றத்தைப்பாராட்டி நந்தனைபடிமைகொண்ட அந்தணரிடத்திற் சொல்லுவார்

விருத்தம்.

இரவுபகல்பரமசிவனிணையடியேதொழுதிருக்குமின்பங்கூறிச், கரைபுரளுங்கடலைப்போற்சிவத்தினிடை கருத்துணர்க்கண்டெல்லாரும்,பாவிவரும்புலையர்களும் பண்புமேலேறிகாட்டிப்பகரக்கேளீர், அரியதொருஅந்தணவனடிமைபுரியுந்தணர்பாலரிக்கைசெய்வார்

நொண்டிச்சிந்து இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

ஐயேஒருசேதிகேளும் உங்கள் அடிமைக்காறப்பறையன்நடத்தையெல்லாம் வரவரக்கெட்டுப்போச்சுசேரியில்வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான் குடியிருக்கமாட்டோம் எப்போதும் கூத்தால்போடுவானுக்கமறந்தே இருப்பானொருவேளை தில்லைச்சிதம்பர மென்று சொல்லி பதப்பிடித்தே அழைப்பானொருவேளை எங்களையும் அண்ணேவாவென்றுசொல்லி கிண்ணாங்கொட்டி குதிப்பானொருவேளை திக்குமுக்கல் கொண்டனையோ லெனதியோ கண்டவன்போல்களிப்பானொருவேளை மரம்போலே கையசக்கால் காலசைக்கால் மெய்யசைக்கலும் இருக்காகொருவேளை தாளம்போட்டெடுக்கவிகொட்டியேகுடிசைகுட்டுதுந்துபேசானொருவேளை கண்டதெல்லாம்பிரட்டென்று சொல்லுமான்மூட்டெத்தனைய டனொருசாமியேபோலே கிளப்பிவாவிட்டலைதுங் குறலூராட்டுமேஐயோ சிவனேயென்பான் கீழ்புண்டுழுவான் யானையுந்தொழுவானே தூண்டிமீனதுபோலே துள்ளித்துள்ளித் துடிப்பான் பற்களைக் கடிப்பானே சிவனென்று மூன்றுதரம் நாங்களு

ஞ்செப்பவேணுமல்லாவிடில் வைப்பினுதைப்பான் கோவிலிற் போவோமென்பானெங்களையுங்குட்டிச்சொல்லி யில்லாவம்புபண்ணுவான்சுற்றிவரச்சொல்லியடிப்பான் சிவன்பேரைச்சொல்லடாசந்நிதியில்நில்லடாவென்பான்சொல்லித்தொலைக்கவேணும் இல்லாவிடில்சுக்குமாந்தடிகொண்டுநொக்கிவிடுவான் கொம்பேரிமூக்கன்போலேமுதுகினில்குத்துவான்புலிபோலேகத்துவானே இதுவென்னகாரணமோவெங்களுக்கிணமாயிருக்குது மானமல்லவோகறுப்பண்ணசாமிதானோ இருளன்காட்டேறியோவினையன் விட்டேறியோபாவாடைதுரைதானோவணபத்திரகாளியோவுன்மத்தவீரனோ பூசைகள்போட்டுப்பார்த்தோம் ஒன்றிலும்போவதில்லைகாரியமாவதில்லையே எங்கள்வள்ளுவரைக்கேட்டோம்அவரெடுத்துச்சொன்னாரிதைவிடுத்துச்சொன்னார்லயான் உருத்திரனார்பிடித்துவாட்டுதடா இப்படியாட்டுதென்றார்தெளியாதென்றுசொன்னார்ஐயேவெளியாதென்றுசொன்னார்

கீர்த்தனம்-இ-ம்-கன்னடா-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

சேதிசொல்லவந்தோம்நந்தனார்சேதிசொல்லவந்தோம்

அநுபல்லவி.

சாதிமுறமைதெரியாதவனுக்கு
வந்தவனென்றொருமாதமாய்தெரிந்த சேதி

சரணங்கள்.

ஏரைப்பிடித்துசற்றே யுழுவான்-மன
தேங்கிதள்ளாடியே விழுவான்எங்கள்
சேரியைப்பார்த்தே யுழுவான-சிவ
சிதம்பரமென்றே தொழுவானையேசேதி
நாத்துமுடிக்கையி லெடுப்பான்-இதை
நடத்தெறியாமலே விழிப்பான்-இதை
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான்அடே
பாவியென்றெங்களை யடிப்பானையேசேதி
உதட்டியசைத்துமுணு முணுப்பான்அவன்
ஊணுரக்கத்தையும் துறப்பான்நாங்கள
அதட்டிப்பேசினு லடிப்பான்பொன்
னம்பலவாணனைப் படிப்பானையேசேதி

கீர்த்தனம்- இ-ம்-கமாசு-ஆதிதாளம்

பல்லவி.

அடக்கியாளுமையே இவனை அடக்கியாளுமையே

அநுபல்லவி.

அடக்கியாளுமிக்கத்துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துகண்டித்துப்பட்டபடத்து — அடக்கி

சரணங்கள்

பொன்னம்பலவாணனென்றிவன் — பேசி
பொழுதைப்போக்குவான்சாம்பலைப் — பூசி
சன்னதங்கொண்டவன்போலவே — வாசி
சண்டைப்பிடிக்கவருவானிவன் — தோஷி- அடக்கி
பலித்துதையேழுநூற்திரம் — போட்டான்
பழமையானபிணிதங்களைக் — கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்தானிவனொரு — சோட்டான்
கோபக்காரனெங்கள்வழிபட — மாட்டான்-அடக்கி
குளத்தைவெட்டச்சொல்லிக்கூலியைக் — கொடுத்தான்
கூட்டிக்கொண்டுபோய்பயல்களைக் — கெடுத்தான்
களத்தைச்சிக்கவேயெங்களை — விடுத்தான்
காடுமண்டிவருஞ்சுடலையிற் — படுத்தான் அடக்கி

வசனம்

சேதிசொல்லவந்த புலையர்களைப்பார்த்து வேதியர்சொல்வார்.

விருத்தம்

காலமேவந்தானிங்கேகள்ளக்கும்பிடுகள்போட்டுப்
பாவனைப்போலேபேசிப்பசப்பினான்போடாவென்றேன்
வேலைசூழுலகில்விந்தவிணனைப்போலேகாணேன்
சிலமாஞ்சிதம்பரத்தைச்சேரவேவிடைகொடேனே

வசனம்.

அந்தணர்சொன்ன மொழியைப்புலையர்கேட்டு மிகவுஞ்சந்தோஷங்கொண்டு சேரிவந்துசேர்ந்தான் நந்தனு மெப்பொதும்போல அந்தணரிடத்தில்வருகிறார்

துக்கடா ஆதிதாளம்.

நந்தனாரும்வந்தார்வெகு
சொந்தமானதங்களையனைக்சாண — நந்த

அங்கமுழுதிலும்நீறுபூசியே ஆரகாசிவசிவவென்றுபேசியே
சங்கையின்றியிருகைகள்வீசியே சாமிசாமியென்றுதன்னைபேசியே
தில்லைச்சிதம்பரபள்ளுபாடியே தெரிசினங்காணேனென்றுவாடியே
அல்லலறுஞ்சிவலோகந்தேடியே யடையவேணுமென்றிங்கோடியே

நந்தனாரும்வந்தார்

விருத்தம்.

சாதிகுலப்பிறப்பென்னுஞ்சந்தேகந்தெளியாதுதானய்நிற்கும்
பேதைகுணம்பற்றறுத்துப்பேரின்பம்வருடித்துப்பேணிக்காக்கும்
ஆதிபராபரமென்னுந்திருச்சிற்றம்பலத்தைக்கண்டறிவிலுன்ன
வேதமொழிவிளங்கிவருந்திருவாயால்விடைகொடுத்துயிடுவீரென்றார்.

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமோன் திருக்குதாம்கண்டபேர்க்கு
சென்மமரணபிணியைக் கருக்குதாம்
உயருஞ்சிகரக்கும்பம் தெரியுதாம்கண்டபேர்க்கு
உள்ளங்குளிரகருணை பொழியுதாம்
பண்ணவாயன்மாலூர் தேடுமாந்தில்லைக்காட்டில்
பாப்புபுலிக்குநிர்த்த மாடுதாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம்ஆரையுமது
ஆனந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய சாலியாம்தருமராசன்
புரத்தில்பழுதுவந்து கேலியாம்
உருவில்லாதகுருவொன் திருக்குதாம்மூலக்கனலை
ஊதியெழும்பிக்காணப் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்நான்மறைக்கு
முணாவில்லாதகாட்சி தருகுதாம்
போய்வருகவுத்தாரக் தாருமேபொன்னடித்தாள்
போற்றவேகண்ணாலே பாருமே தில்லை.

வசனம்

சிதம்பரம் போவேனென்று அந்தணர் கேட்கும்படிநந்தனார் சொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஏகதாளம்.

தாதரிகிட்தக சந்தரிசனத சாதந்தமிதத்திடக்கணந்தரி தினத்ததிம்தகசு ந்தரிகுந்தரி தந்தகணம் தனனந்தனனந் தலாந்தித்தனத்தின்னகிடதந் தோந்தத்தின்னகிடதகதோந்தத் தின்னகிடதோம்.

பல்லவி.

ஆடியபாதங்காணுரேபிர்ம்மானந்தம்பூணுரே

அநுபல்லவி.

நடேர்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனுர்குருவாரத்திலே மன்றுள் ஆடி.

சரணங்கள்

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
பக்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனே யருளைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலிக்கி—ஆடிய
கொட்டமளிக்கும் புனல்றெழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே நெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி—ஆடிய
சேணுஞ்சடைப்புனல் பூமியில்சொட்ட
சேவித்தநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட் கோளமுமுட்ட
கோபால்கிருஷ்ணனு மத்தளங்கொட்ட-ஆடிய

வசனம்

ஆனபடியினுல் நான்சிதம்பரம்போகஉத்தாவு தரவேணுமென்று அந்தணரைத்திருநாளைப்போவார்கேட்கிருர்.

கீர்த்தனம்—இ-ம்—தேசிகதோடி—ஆதிதாளம்.

பல்லவி.

உத்தாரந்தாருமையேஎனக்
கொருவருமில்லைபாகெதியடைய உத்
வித்தைகள்கற்றதுமில்லையாளுெரு
பத்தியிதென்றுபாகதியடைய உத்
குற்றங்களெத்தனைகோடியேன்செய்யினும்
அத்தனையும்பொருத்தாதரவாக உத்
பெண்டுபிள்ளையென்றுபேயனைப்போற்றியே
கண்டுகளித்துகாலங்கழித்தேன் உத்
தில்லைச்சிதம்பரத்தைதெரிசித்துவர்தங்க
ளெல்லையைக்காத்துக்கொண்டிருக்கிறேனையா உத்

வசனம்.

நந்தனுர்சிதம்பரம்போக உத்தாவுகேட்டதனுல் வேதியாடுமை யைப்பார்த்துச்சொல்லுகிருர்.

விருத்தம்.

படிபுகழ்தில்லைநாதன்பத்தியேயுருவாய்வந்து
கடிநகராதனூரில்களித்திடும்நந்தனென்று
சிடுசிடுமூஞ்சிகாட்டிச்சில்விடம்போலேநெஞ்சந்
துடிதுடித்திடவேஞாயந்தோடியும்பேசுவானே.

கீர்த்தனம்—இ-ம்-தண்டகம்—ஆதிதாளம்.

சேரிமுற்றுஞ்சிவபத்திபண்ணும்படி
விட்டையாமதுவிட்டையாம்
சேதிசொல்லவேணுமென்றிலோ
வாதையோஅகமகிழ்ந்தையோ
காலைமாலையில்வந்துதெரிசனங்
காட்டுறாய்நிலைகாட்டுறாய்
கதறினுலுமூர்க்குருவிகருடன்போ
லாகுமோவதிவேகுமோ
அடிமைவேலைசெய்யுமுனக்கிந்தக்கொண்
டாட்டமேகசெனக்கூட்டமோ
அடக்கியாளமாட்டேனுசிங்கக்குட்டி
யல்லவோவதைசொல்லவோ
காளிபூசையவர்போடும்போதுநீ
கண்டித்தையாந்தெண்டித்தையாம்
கபடமெலாம்வெளிப்படுவதாகவழி
காட்டுகிறேனிறைநாட்டுகிறேன்

வசனம்.

நந்தனர் சிதம்பரம்போரேனென்று சொல்லுவதால் அந்தணர் சண்டிக்கிறார்.

கீர்த்தனம்—இராகம்-லாவணி—ஆதிதாளம்.

பல்லவி.

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா பறையா

அநுபல்லவி

அறியாத்தனமினிசொன்னுலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் பறையா

சரணங்கள்.

சிதம்பரமென்பதை விடுகொல்லைத்
தேறடியிலேவந்த படுகாற்றைப்

பதத்திலேபிடுங்கி நடுகனப்
பண்ணனுகசேபலி கொடு-அடாபறையா
எப்போதுமொருதடி பிடிகையி
லெடுத்துக்கொண்டேதமுக் கடிஎங்கள்
கற்பனையாம்பள்ளூ படியுங்கள்
நோகாமலேகாடியைக் குடிஅடா-பறையா
கள்ளந்திருதற்குப் பாரு-உன்
கால்படும்பண்ணையில்வீற் றிரு-இது
சொன்னதுமில்லையோஉன் குருநீ
சுகமுடன்வாழ்ந்துக்கொண் டிரு-அடாபறையா

விருத்தம்.

ஒருபடிவீராவென்றும்உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கருப்பாவென்றும்பாவாடைராயாவென்றுந்
துதிபெருமிருளாவென்றுந்தொட்டியச்சின்னனென்றும்
மதுவொடுபிசிதம்வைத்துவருந்தியேவணங்குவாயே.

வசனம்.

அந்தணர்நந்தனுரைக்கண்டித்துமறுபடியும் நல்லவார்த்தை சொல்லுகிறார்.

கீர்த்தனம்—இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி

நந்தாஒருசேதிசொல்லுகிறேன்கே
ளிநதபக்குதோன்றியநாள்முதல்
சொந்தமுறியெழுதிக்கொடுத்துநீ
வந்தபறையனல்லவோமறந்தாய் நந்தா
பாருஇந்தவயல்வரப்பைவெட்டிப்
பேருமுந்தக்கழனியைவெட்டிப்பணே
சேருபொருப்புள்ளவனுணையன்றி
யாருஇதுவல்லவோகாரியம் நந்தா
வாடாஉன்கூலியைமுழுதுந்தா
வேடாபண்ணைபறச்சிகளுடனே
கூடப்பழனங்கடோறும்நடப்
போடாஇதுவல்லவோபுண்ணியம் நந்தா
பாடுஉன்கறுப்புதெய்வததைக்கொண்
டாடுகள்ளுசுள்ளுடன்பூசைகள்
போடுநெல்விளையும்படிக்கும்வழி
தேடுபுத்திசொன்னேனிதுதான் நந்தா

வசனம்.

வேதியர்நந்தனுரைச் சிதம்பரம் போகாதேயென்று கண்டித்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்—இ-ம்—நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாதேசொன்னேன் சிதம்பரம்போகாதே

அநுபல்லவி.

சிதம்பரம்போனால்இதம்பெறலாமென்று
சேதிசொல்லுமுன்சாதிக்கடுக்குமோ சிதம்பரம்

சரணங்கள்

கள்ளக்கும்பிடுகளைப் போடாதேஉன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடாமுழுமூடா கிழே
தள்ளிவிட்டுவுன்னைத்தகும்படி செய்வேன்-சிதம்
நாத்தைப்பிடிக்கிக்கழனி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பார்த்துப்பரம்படித்து பழுதுவராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீ-சிதம்
அடிக்கடிமருத்துநான் சொல்லவோநீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவேனிருக்குது சாதனம்
தடுத்துப்பேசினால் தாடையிலடிப்பேன்-சிதம்

வசனம்.

அந்தணர்கண்டித்துச்சொன்னதால் நந்தனர் துயரமடைந்துசே ரியில்வந்து சிவனைநினைத்து பக்திபுரிந்துகொண்டாடுகிறார்.

கீர்த்தனம்—இ-ம்—தண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால் முத்திபெறலாமே

அநுபல்லவி.

எத்திசையுமவ்வுயிர்க்குமவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்றுஅம்பலவன்மலரடிதினந்தோறும் பத்தி

சரணங்கள்.

கட்டழகிசோரனிடங்காதலது போலே
கடுகிவருங்கன்றுருகில்கபிலையது போலே
கட்டவரைத்துணியுமில்லாப்பேதைபொருட் காலே
காவலனார்பதம்வருகில்களிப்பதனைப் போலே
கண்டுமுறைநிழலகக்கண்டறியார்மநுமயக்கங்
கற்பனையுமிப்பிரபஞ்சஞ்சொற்பனம்போலொப்புமிரும் பத்தி

தயிர்குடிக்கல்பால்குடிக்கத்தழுவுதல்திருஷ் டாந்தம்
சடலம்பொறுக்காமல்துயர்தருகிலி மோகாந்தம்
ஆயிருந்துவழுத்திந்தமாயையுப சாந்தம்
ஆருமொன்றுசாதனங்கள்வழங்கியது வேதாந்தம்
காயஞ்ஜனிக்காதிருக்கக்கண்டுகொள்ளவேண்டுமென்றால்
காசுபணம்பாசமதுமாசரவே ரேசமுகின்பத்தி
பச்சைமரத்தாணிபோலேபரிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன்பணியும்பொன்னம்பலனைக்கொண்டாடி
இச்சையொழிந்தைம்புலன்களைந்துகளும் வாடி
ஏகாசமானபரிபூரணத்தைத் தேடி
அச்சமறத்திருவிழியிலானந்தநீர்கரைபுரள
ஆனேதிரிபுரனேகங்காதரனேபராபரனேயென்று பத்தி

வசனம்.

சேரியில்சிவபக்திபண்ணிக்கொண்டிருக்கிற பன்னிருபேர்களுடன் நந்தனாருமிருந்து பக்திபண்ணும்நாளையில் ஒருநாள்நந்தனார் பன்னிருவருடையபக்திதிடப்பட்டதோ இல்லையோவென்றுஅரியப்பரிட்சைபார்த்தார்.

இருச்சொல்லலங்காரம்.

நந்தனார்-சிவதலத்தில்சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள்—அவித்தைகளைததூண்டிநிற்றலேகாட்சி யென்றார்
நந்தனார்-சிற்சபையிமகிமையென்னசெப்புவி ரென்றார்
அவர்கள்—அச்சுசருங்காணுதவானந்த மென்றார்
நந்தனார்-ஆகையினாலென்னபலனாகு மென்றார்
அவர்கள்-நாக்கதிலேசிவநாமம்நவிலு மென்றார்
நந்தனார்-கற்றதனாலென்னபலன்கண்டோ மென்றார்
அவர்கள்-கொற்றமைக்காரன்பலன்கொண்டா ரென்றார்
நந்தனார்-அம்பலத்தைத்திறைபோடத் தொடங்கினாரே
அவர்கள்—சம்புவித்தைமாயைக்கு ளடங்கினாரே
நந்தனார்-மனந்திருத்திக்கொண்டார்க்குவாராதொன்றில்லை யென்றார்
அவர்கள்-கனவருத்தமுண்டார்க்குங்காகாதுதொல்லை யென்றார்
நந்தனார்—சாதியிலேயெளியவன்தானறிவானோ வென்றார்
அவர்கள்-ஆதியிலேபேதமில்லைஅறிவீரே யென்றார்
நந்தனார்-ஞானமில்லாதவர்முத்திநாடா யென்றார்
அவர்கள்-ஊனமில்லாச்சிவபத்திதேடா ரென்றார்
நந்தனார் மதியில்லாதவர்களுக்கெல்லாம்விதியே தென்றார்
அவர்கள்-துதியில்லாதவர்க்கெல்லாகதியே தென்றார்

நந்தனர்-பவக்கடலைகுளப்படிபோல்பகுப்பா ரென்றார்
அவர்கள்-அகக்கடலிலிளைப்பாசகிப்பா யென்றார்
நந்தனர்-பாப்பானுத்தாரங்கொடுப்பானோ வென்றார்
அவர்கள்-காப்பாற்றுங்கடவுளுக்குகைபார மென்றார்
நந்த-படித்தாற்போல்காட்டிவிட்டேன்பலமாச்சுதென்று சொன்னார்
அவர்கள்-அடித்தபால்போட்டுவிட்டோராலேயாகு மென்றார்
நந்தனர்-அங்கேயேன்நீங்கள்வல்லையோ வென்றார்
அவர்கள்-இங்கேயேனே துஇல்லையோ வென்றார்
நந்தனர்-எங்கும்நிறைந்தபூரணங்க ளென்றார்
அவர்கள்-இங்குமிருந்துஇபற்றுங்க ளென்றார்

வசனம்.

இப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள்தனக்குத்தானே பரவசமாய்ஆனந்தக்கண்ணீர்பெருகிப்பாடுவார்.

கீர்த்தனம்-இராகம்—செஞ்சுருட்டி—ஆதிதாளம்

பல்லவி.

பாடுவாய்மனமே சிவனைக்கொண்டாடுவாய்தினமே.

இந்திரன்முதலியஇமையவர்க்குபகார
நந்தியின்மீதேறும்நம்பன்பதம்போற்றி பாடுவாய்
ஆலந்தனையுண்டமரரைக்காத்திடு
நீலகண்டன்கழல்பெறநெறியுடன்போற்றி பாடுவாய்
சீலமாகவேசித்தத்தினின்றுடுஞ்
சூலபாணியனெனுஞ்சுயம்புதான்போற்றி பாடுவாய்
மோகமாந்துன்பத்தினால்மூழ்கிகெடாமல்
ஆகமமுறையிடும்அந்திவண்ணனைப்போற்றி பாடுவாய்
பஞ்சாட்சரந்தன்னைப்பக்திபாயுருவேற்றி
மெய்ஞ்ஞானம்பெற்றய்யுமேலானைநீபோற்றி பாடுவாய்

கீர்த்தனம்-இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

சிதம்பரமேநினைமனமேமுத்திபதம்பெறலாகுமனமே

அநுபல்லவி.

சதம்சதமெனும்பொருள்பதம்பதம்பயமருள்
சமரசநடம்புரிசாமிசிதம்பரகிலமன் திருவிருநிகொள்ளாகாசிதம்

சரணங்கள்.

ஒழியாக்கவலைகொண்டு விழலாய் ஆறைய்
உண்மையில்லாவிடிவிட்டுநிழலாய்

தழுவாதிருந்ததில்லைத்தலமெனுமேல் வீட்டை
சாகசத்தாலல்லோநல்லசாபல்லியமாய் பாட்டை
பந்தமும்பெற பந்தமுமேபற
எந்தவினைத்தீர மூன்றாமுற்சிதம்
தேகமெடுத்தவருண்மையறியாய்மோசத்
தெரிந்துவையாவலைசிக்கிமுழியாய்
சாகுமட்டுஞ்சம்சாரமே விட்டு
சலியாமலேயுதைத்துச்சண்டாளமான துட்டு
சம்பாத்தியமது வம்பாரும்விதி
சம்பாதித்தது தெம்பாய்ப்பதிசிதம்
உனக்குள்ளேயுணர்வால்நீமோனம்உண்மை
ஓர்வழிகாட்டுமே ஞானம்
தனக்குசிதம்பரஞ்சார்ந்ததாலே தன்மயம்
சத்திரமாம்கூட்டும்சாம்ராச்சிய சின்மயம்
சரிவாசிவகுரு வசமயமாய்வரு
முருவெளியெனுமொரு பொருளதுவாந்திருசிதம்

துக்கடா

அரகர அரமாதேவா

நந்தனர் சிலநாளன்பு அடிமை கொண்டஅந்தணரிடத்தில் வந்து சிதம்பரம்போகஉத்தாரம்மிகவும் வருந்திகேட்கிறார்

இது அறுசீரடி-விருத்தம்.

வேதியரேபெரியவரேநல்லவரே கடையவிண்ணோர்மெச்சும்
சாதியரேபலகலையுங்கற்றுணர்ந்துபுரையில்லாதவமேசெய்யும்
போதியரேபக்தியில்லாநான்புலையனேதறியேன்புண்ணியமூர்த்தி
யாதிகுருசிதம்பரத்தைக்காணவென்றே யாசைகொண்டேனுப்புவி

கீர்த்தனம்-இ-ம-நாதநாமக்கிரியை-ரூபகதாளம் ரே

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தையொரு தரமாகிலுந்
தெரிசித்துவாவென் றுத்தாரந்தாருமையா

அநுபல்லவி.

தில்லைசிதப்பரத்தைக்கண்டால் பிறவிப்பிணி
இல்லையென்றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் தில்லை
அல்லலறுக்குந்திருவம்பலநாயகன்
அல்லும்பகலுமாடுமானந்தம்பெருகிய தில்லை
யாதிமுதலாயென்னை யடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயெந்தன மீதில்தயவுசெய்து தில்லை

கீர்த்தனம்—இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசிக்கவேணுஞ்-சிதம்பரத்தை-தெரிசிக்கவேணும்

அநுபல்லவி.

தெரிசித்தவுடனுடல்கரிசைப்பிணிகளறும்
பரிசுத்தமாகுமுன்மறுசுத்தமாகவே தெரிசிக்க

சரணங்கள்.

பக்தர்பணியுந்திருக்கூத்தன்சந்நிதிதொழு
தேத்திப்பிரவிதுயராற்றியெப்போதும் தெரிசிக்க
வேதனையடியவர்போதனைமுனிவர்கள்
நாதனைக்கரங்குவித்தாதரவாக தெரிசிக்க
ஈசனைபுலியூரில் வாசனைகனகச
பேசனையென்று நடராசனைபோற்றி தெரிசிக்க
காமனையெரித்தவர் வாமத்தினின்றுசிவ
நாமத்தைசெல்லியர்த்த சாமத்திலவந்து தெரிசிக்க
ஞாலம்புகழுமவன்மாலையணியுங்கோ
பாலகிருஷ்ணனதொழுஞ்சிலம்பொற்பாதனை தெரிசிக்க

வசனம்.

நந்தனார்தரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அந்தணர்சொல்லுகிறார்.

எண்சீரடியாசிரிய-விருத்தம்.

புத்திசொல்லக்கேளாதமூடாவுந்தன்
பிரட்டெல்லாநானறிவேன்போடாபோட
பத்தியென்றுஞ்சித்தியென்றும்பறைபர்க்கேது
பாப்பாரதெய்வமதுபாவிக்காது
குற்றமுண்டுன்சாதியிலேவழக்கமில்லாக்
கொள்கைபாச்சேரியிலேகூடாதப்பா
பித்தமதுகொண்டவன்போலிங்கேவந்து
பேசாதேபோபோவென்றேசுவானே.

கீர்த்தனம்-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரதெரிசனமா நீபதைச்சிந்திக்கலாமா பறையா

அ

அநுபல்லவி.

சிதம்பரதெரிசனஞ்சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம்நீசொல்வதுமாயம்
சொல்லாதேஇங்கேநில்லாதே
சேரிக்குப்போடாநாளைக்குவாடா — சிதம்பர

சரணங்கள்.

சனகமகாமுனியோகிகள்தேடிய
கனகசபேனைக்கண்டறிவாயோ
பேசாதேகைவீசாதே
விரனைத்தொழடாயேரியையுழடா — சிதம்பர

தவமுடையோர்கள்தரிசிக்குமந்திரஞ்
சிவபதமெனறுசேவிக்கலாமா
ஆசாதுவினைபோகாது
விரைதெளியென்றேஅறுதலிமகனே — சிதம்பர

வசனம்.

உழுதுசேறு பண்ணிபரம்படித்து விரைதெளித்துநாற்று பறித்துநடவுநட்டுமடைதிறந்து மடைகோலுகளைபிடுங்கொத்திருந்து பதத்திலறுததுசட்டி அறுத்துநிரம்பிபபட்டடையைக்காப்பது மில்லை இராக்காலங்களில்பந்தம்பிடித்து தடியெடுதது கொம்பு தம்பட்ட முழங்கி கோலாகலமாகி நாலுபறையரோடுங்கூடி வரப்பைவிட்டு ஊரைச் சுற்றிவந்துகாக்கும்படி கிராமத்தாரிட்டகாவல் காப்பதுமில்லை உனக்கு வேண்டியஊணுறக்கம் முதலாகியதேசதருமமும்மறந்து எப்போதும் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலம் சிதம்பரமென்று பித்துப்பிடித்துத் தாயைவிட்டகுழந்தைபோல வாயைவிட்டலறி பேய்பிடித்தவன்போல்மதிமயங்கி உடல்கலங்கி எல்லோரும்பழிக்ககீழேபுரண்டழுது தத்துப்பித்தென்று தள்ளாடியகாரணமென்னவென்று அந்தணர்நந்தனைக் கேட்கிறார்.

கீர்த்தனம்—இ-ம்-சூரியகாந்தம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தபிரமைவந்தகாரணம்
நானறிந்திடச்சொல்லும்

அநுபல்லவி.

அந்தரங்கமுள்ளசொந்தபறயனு
யண்டியிருப்பதுபோய்சண்டைபிடிக்கவந்தாய் — நந்தா

## சரணங்கள்.

சாதிமுறைமைதுறந்தாய்தில்லைச்
   சபாபதியைநினைந்தாய்
சூதுக்காரபறையருடன்கூடிச்
   சும்மாவிருப்பதுஎம்மாததிரம்நான் — நந்தா
குலத்திலில்லாதவழக்கம்நீயதைக்
   கொண்டாடுமுழக்கம்
வெளுத்ததிருநீறென்ன எருமைச்சாணியது
   மேனியிலணிவரோ வையகந்தன்னில் — நந்தா
திருட்டுப்புரட்டுமறியாய் பொல்லாத்
   தீங்குவார்த்தையுரையாய்
மூட்டுத்தனத்தைஎன்முன்னேகாட்டி
   விட்டுப்பேசுறாய் வெறிமயக்கமோஅடா — நந்தா

## வசனம்

வேதியர் நந்தனாரைப் பார்த்துப் சிதம்பரம் வந்தகாரண மென்னவென்றுகேட்டபின் நந்தனார் வேதியருக்குச்சொல்லுவார்

## அறுசீரடியாசிரிய-விருத்தம்

மனங்கொண்ட விடமெல்லாம் போகாமலாணைவிட்டு மறித்துவாங்கி
அனல்கண்டமெழுகதுபோ லெனதுள்ளந் தனதாகவுரிக்கச்சாய்க்கும்
புனல்கண்டவேணியனைப் புண்ணியனை புராந்தகனைப் போற்றி செய்ய
கனல்கொண்ட தில்லைநகர் போய்வருவேன் கருணைவழி காட்டுவீரே

## வசனம்

நந்தனார்வேதியரைப்பார்த்து உத்தாரங்கேட்கஅந்தணர் சொல்லுதல்
கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

## பல்லவி.

நட்டநடவுவிளையும் பட்டவெளியை தொட்டபோதிலும் — நட்
கெட்டமதியைவிட்டுவிடு சேளடாபண்ணையாளடா — நட்ட
கிட்டநெருங்கும்பண்ணையுன்கால் பட்டதினால்பசுமைகொள்ளுமே

## விருத்தம்.

கதிகொருமுழமேநீளுங் கட்டுமுக்கலமேகாணும்
துதிபெறுநந்தாவுன்கை தொட்டதேதங்கமாகும்
பதிதனிற்பெருமைசொல்லும் பறையனாயிருந்துதில்லை
சிதம்பரப்பித்தேன்கொண்டாய் செய்தொழிலேதென்றாரே

வசனம்

நந்தனாருக்குச் சிதம்பரப்பித்துத் தெளியாமையால் வேதிய செ ன்ன செய்யப்போகிறே னென்றுதுயாமுற்று நந்தனாரைப் பார்த்து புலப்புவார்

கீர்த்தனம்-இராகம-தனாசரி-ஆதிதாளம்.

பல்லவி.

பித்தனாய்போனதென்னகந்தா

அநுபல்லவி.

எத்தனையோபுத்திகளெடுத்துபடித்தும் பித்த

சரணங்கள்

சித்தமிப்படி செய்கதாரோ
பற்றுதலில்லாமலே பண்ணியபோரோ
பததியென்று பேரிட்டதாரோ
நித்தமுமிப்படியே நிலையிட்டதாரோ-பித்தனா
எத்திசையும்புகழ் பெற்றிருந்தும்
வித்தைகளனேகம் விளம்பத்தெரிந்தும்
பத்தியோடு சகலமறிந்தும்
நந்தனென்றுபேரிட்டு நானுனக்கிருந்தும்-பித்தனா

வசனம்

மனதிற்றுயாமுற்றவேதியரைநந்தனார் மிகவும்வணங்கிசொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பித்தமதுதெளிந்துவிடமருந்துண்டு தில்லைவனம்பேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண் சந்நிதியில்நேராகத்தலைவணங்கி
தித்தியென்றுநடனமிடுந்திருக்கோலங்கண்குளிரத்தெரிசித்தாலும்
பித்தமதுதெளிந்துவிடும் வேதாந்தமழைசொரியும்பெரியகோவே

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்,

பல்லவி

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குது பேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி

மற்றமருந்துகள் தின்றாலுமுள்ளாக்குவல்லே-வல்லே-வல்லேஐயா-பி

சரணங்கள்

பாம்புபுலியுமெய்ப்பாடுபட்டுத் தேடிப்பார்த்துப் பயிரிட்டது-அந்தப்
பாரளந்ததிருமாயனும்வேதனும் பார்த்துகளித்துக்களித்ததுண்டு

பார்ப்பதியென்றொரு சிமாட்டியதில்பாதியைத்தின்றதுண்டு இன்னம்
பாதியிருக்கும் பறையாநீயும்போய்ப் பாரென் றுத்தாரந்தாரும்தாரும்
பத்துதிசையும் பரவிப் படர்ந்தாலும் பார்த்துப்பிடியாரோ
தத்திக்கு திக்குந்தாளங்களபோடுந் தண்டைசிலம்பு கொஞ்சுந்
சிததிக்குந்தேனே செங்கரும்போநல்ல சித்தமுடையார்க்கே என்
சித்தத்தைக் கட்டியிழுக்குது அங்கேசென்றால்போதுங்கண்டால்
தீருமையே பித்த
ஊரைச்சொன்னாலுமிப்பாவந் தொலையு மூடருக்கும்
பேரைக்கொண்டாடிப்புலம்புகிறார் பலபேர்களுக்குப்பிழைப்பு
சாருநரையுந்திருமருந்து சாதியைப்பாராது-இனனந்
தீராதநோய்கள் படைத்தவெனக்குததீருந்தீருமையே பித்த

கீர்த்தனம்—இராகம்-செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாம விருப்பனோ
சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பனோ-சிதம்
பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே-சிதம்
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே-சிதக்

வசனம்

இப்படி நந்தனார்சொல்லவேதியர் மூர்ச்சை யடைந்து விழுந்து தெளிந்துஎழுந்துசொல்வார்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாற்பதுவேலிபூமிநடவுநட்டாகவில்லை
பாரப்பதுமில்லைசைவப்பழமது தின்றாய்பண்ணை
கார்ப்பதுமில்லையுன்னைகளைவிடமனதுவில்லை
சேர்ப்பதாலாவதில்லைச்சேரியிற்றொலைந்துபோடா

வசனம்.

என்றுவேதியன் சொல்லியஉத்தாரப்படி சேரியில்நந்தனார் வந்துபன்னிரண்டுபேர்களைப்பார்த்துசொல்லுவார்.

திபதை—இ—ம—மாஞ்சை—ஆதிதாளம்.

கண்ணிகள்!

ஆசைநேசராகுந்தோழரேகேளுங்கள்
பேசுந்தெய்வங்களுண்டோஈசனல்லால்நமக்கு ஆசை

அயன்மாயன் அன்றடிமுடிகாணுத
நேயனழலுருவாய்நின்றநின்மலனல்லால் ஆசை

மண்ணும்விண்ணும்மற்றுளபொருள்களாய்
எண்ணுமெள்ளுமெண்ணெய்போலிருக்குமீசனல்லால் ஆசை

அருவாயுருவாயண்டபகிரண்டமெங்கும்
பரமாகியுநின்றதேதந்தப்பராபரத்தையல்லால் ஆசை

வசனம்.

என்று நந்தனர் சொல்லிப் பின்னும்-ஆனந்தகூத்தாடுவார்.

தரு-இம்-சன்னியாசிகிரிபுடைதாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினர்-ஆனந்தநந்தன்
ஆனந்தக்கூத்தாடினர்

அநுபல்லவி

வானுந்தேவர்முனிவர்ஜெயஜெயவென்று
வாழ்த்தும்பிரானடிகள்வாய்ப்பதெப்போவென்று

சரணங்கள்

மாயவலைகுட் பட்டு-அதிலெப்போதும்
மாளாத்துயரப் பட்டு
மாயுமுன்னுகவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்றான் நாடுவனென்றேசத்தி-ஆன

கவலைபடாதே நெஞ்சமேகாலன்கைப்பாசங்
கண்முன்வராதே அஞ்சுமே
தவநிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்று
தற்பதத்தைக்காட்டினேன் தனைக்காணுவேனுவென்று-ஆன

காயமிகவுஞ் சதமா-அன்றியுற்பவங்
காண்பதொவ்வொரு விதமா
ஆயமெழுபிறப்பா யவதரித்தனுண்டென்றான்
தூயபதத்தாலந்தத் துகளற்றிருப்பேனென்றும்-ஆன

வசனம்.

இவ்விதமாகப்பன்னிரண்டுபேர்களையும் வேலைசெய்யவொட்டாமல்தன்சமீபத்தில்நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதைவேதியன்கேள்வியுற்றுநந்தனைச் சீறிக்கடுங்கோபஞ்செய்ய நந்தனர் வேதியருக்கு இதவுசொல்லுகிறார்.

தரு-ஸ்ரீராகம்-ஆதிதாளம்

பல்லவி.

எதுக்கன்மீது இத்தனைபேதகம்
எண்ணுவனோ தோதகம்

அநுபல்லவி,

சாதாரணமான கசடர்சொன்னசொல்லை
சாதனைசெய்து சார்ந்துபிழையொன்றில்லைஎதுக்

சரணங்கள்.

நான்உனக்குபண்டு சாதனஞ்செய்து
நலமாய்த்தந்தாண்டு
தோன்றமேநீசொல்லுஞ் சொற்படிசெய்கிறேன்
பான்மையாம்நித்ய பத்தியாய்உய்கிறேன்-எதுக்
சாகளவுநன்மை செய்தோரைஒருக்
காலும்மறவாத்தன்மை
தாசனுக்கெப்போது முண்டுதாமேகண்டு
யோசிக்கப்போகுறீர் இனிமேல்நான்செய்தொண்டு-எது
ஏழைநான்தானே குதும்வாதும்
எதொன்றறியேனே
பேழியருடனேயொரு மேதிசாலைகளெங்கே
ஊழியனுக்கும் உழுகயிறுங்கொடுப்பீரிங்கே

நந்தனார்-ஏருழுதல்

எழுசீரடியாசிரிய-விருத்தம்

வணக்கமாய்ச்சொல்லும்வார்த்தையையுணர்ந்து
வஞ்சனையிலாதவேதியன்தன்
கணக்கில்லாத்தனதுபண்ணையாள்வசத்தில்
கைப்பிடியாகவேவந்து
பிணக்கிலானிவன்சொற்படியெலாஞ்செய்வான்
பின்னிடான்அழைத்துப்போவென்ன
இணக்கமாய்க்கொண்டுபோயினர்நந்தர்
ஏர்த்தொழில்மிகப்புரிந்தனரே

தரு-இ-ய-சஹானா-ரூபகம்-சாப்பு-தாளம்

பல்லவி

பத்தியாக ஆண்டைசொற்படிசெய்தார் நந்தன்பலருடன்மிகப்பத்தி

அநுபல்லவி.

கீர்த்தனைசித்தங் களித்துக்கதித்தவன்
கமலபாதத்தை நாடிமெத்தக்

காதலாகவேகொண் டாடி
மனம் நீடிபத்தி

சரணங்கள்

நீருள்ள அதனூர் நஞ்சைபுஞ்சைகளை
நிததமுமேர்கொண்டு பழுது அறச்
சுத்தமதாகவே உழுது
காலைப் பொழுதுபத்தி
கருப்புவெளுப்புச் சிவப்புநிறமுள்ளக்
காளைகளைகட்டிப் பூட்டி-பொற்
காறுவொன்றதிலே மாட்டி
ஏ ரோட்டிபத்தி
கந்தன்கருப்பன் கடம்பனிம்பன்
கரியனவன்தமபி பெரியவன்சின்னக்
காத்தானவன்மகன் சொரியன்
குள்ள நரியன்பத்தி
சிரகச்சம்பா சிறுகடன்சமபா
சிவந்தமணக்கத்தை நட்டுகம்பு
சேர்ததுவை மிட்டு
பயி ரிட்டுபத்தி

வ-ம் இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துக் கொண்டிருந்த நந்தனார் இனிமேல்சிதம்பரம் போவேன் போகாவிடில் பிராணனைவிடுவேன் அன்றியும்சேரியில்வரமாட்டேனென்று சொல்லிக்கொண்டுவேதியர்பால் சென்றுதலைவணங்கிக் கரங்குவித்துமனந்துடித்துக் கண்டித்துச் சிதம்பரம்போக உததரவுகேட்கிறார்.

அறுசீரடி-யாசிரிய-விருத்தம்

பொய்ச்சடலம்புழுக்கூடொன்பதுவாசற்றோற்பையைப்போற்றி
செய்யும்,துச்சனிவனென்றெண்ணித் தள்ளாமனன்னெறியைச்சொ
ல்லவேணும்,பச்சைமிகுந்தொடியழகி சிவகாமிமாதுபங்கன்பாதங்காண.
இச்சைமிகுந்திருக்குதையே அம்பலததைகண்டுகளித்திறைஞ்சுவேனே,

தரு இ-ம்சாவேரிரூபகதாளம்

பல்லவி.

பொன்னம்பலவாணனடிதொழுவா
பிறவிக்கடலிடையில்கிடந்தழுவார் ரொருவரன்றி

அநுபல்லவி.

இன்னம்பலதெய்வங்களுமிருக்குமெனக்கிவர்
போலவேதில்லையம்பலத்திலிருந்தருள்செய்திடும் பொன்

வேதமொருநான்குமறியாதபழம்பொருளாகினும்
　　வேண்டுபதஞ்சலிக்காகவே தில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசைசாமணிகுலுங்கப்பிறையிலங்க
　　பணியடமாடமேசடையாடவெப்பரமானந்தக்கூத்தாடிய—பொ

பலகந்தனில்சுகமதுபோலெங்கினும்பரிபூரண
　　முருவற்றதுமருவற்றதகுறையற்றிடுஞ்செல்வங்
கலியற்றமர்வதவற்றவர்விடைபத்தினிலுருவற்றிட
　　கலைக்கற்றவாவலையற்றவரிதயத்தினில்நடமாடிய　　　　பொ

இரவுபகல்கருமங்களிழுக்கும்பொறிகரணங்களதை
　　இருததுவசப்படுத்தும்வகையெனக்குத்தெரியாது
பரவிவருமராகாதியிற்சரணடுங்கிமனதொடுங்கிவழி
　　பாக்குமிடமார்க்குமரிதாக்கும்பாலகிருஷ்ணனதொழும்　பொ

வசனம்.

இவ்வகையாய்ச்சொல்லும் நந்தனாரைப்பார்த்து வேதியர்சொல்லுகிறார்.

சுலோகம்.

மெள்ளப்பேசியெழுகிறாயனுதினமுடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடலாவதென்னபலனோகாட்டுபிசாசலவோ
துள்ளித்துள்ளித்துடிக்கிறாய்சிவபதஞ்செல்லாதுன்சாதியிலே
எள்ளுக்கொல்லையில்மாடுவந்துதொடாதேகும்படிச்செல்லடா

வசனம்.

இப்படிச்சொல்லியவேதியருடனே நந்தனார்தனக்குத் தெரிந்த வித்தைகளை அத்தருணத்தில்சொல்லிக்காட்டுவார்.

முன்நந்தனார்—பின்வேதியர்-இருவருமாகச் சொல்லிக்கொள்ளும்

வட்டிக்குப்போட்டியான இருச்சொல்லங்காரம்.

நந்தனார்—தில்லையைப்பார்க்கவல்லவோ　　　　வென்றார்
வேதியர்-கொல்லையில்முளைகாயில்லையோ　　　　வென்றார்
நந்தனார்—கள்ளம்போனாலுள்ளதுகாணு　　　　மென்றார்
வேதியர்-வெள்ளம்போனாலுள்ளதுவிளை　　　　மென்றார்
நந்தனார்—திருச்சிற்றம்பலங்கண்டால்தேகங்களிக்கு　　　　மென்றார்
வேதியர்-பொரிச்சகறிகொண்டால்தேகம்பெருக்கு　　　　மென்றார்
நந்தனார்—ஆகாரவென்றார்பாவம்போ　　　　மென்றார்

| | |
|---|---|
| வேதியர்-பறையனைக்கண்டால்பாவம்போ | மென்றார் |
| நந்தனார்-வெட்டவெளியிலேமனுமுட்டிப்பாரு | மென்றார் |
| வேதியர்-பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு | மென்றார் |
| நந்தனார்-எனக்குரியஞானமாரியைமதி | யென்றார் |
| வேதியர்-உனக்குரியபறையர்சேரியேகதி | யென்றார் |
| நந்தனார்-கர்த்தாவேயென்னுள்ளம்பெற்று | மென்றார் |
| வேதியர்-கற்றாழையக்கினியில்பற்று | தென்றார் |
| நந்தனார்-மறையோருக்கெப்போதும்வாயிலேதற்க | மென்றார் |
| வேதியர்-பறையருக்கெப்போதும்சேரியேசொற்க | மென்றார் |
| நந்தனார்-கொள்ளித்தேள்போலென்னைக்கொட்டாதே | யென்றார் |
| வேதியர்-அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே | யென்றார் |
| நந்தனார்-கடுமையால்வந்துகவலைப்படுத் | துவதேன் |
| வேதியர்-அடுமையாய்வந்துஅலைப்படுத் | துவதேன் |
| நந்தனார்-தில்லையோடுன்னைச்சேரேனோ | வென்றார் |
| வேதியர்-எல்லையோடுமுன்னைப்பாரேனோ | வென்றார் |
| நந்தனார்-திருவாதிரைவருகுதுபோவேனோ | வென்றார் |
| வேதியர்-மறவாதிருபறையாபோகாதே | யென்றார் |
| நந்தனார்-தெரியாதமெள்ளப்போவேனே | யென்றார் |
| வேதியர்-மரியாதையல்லபோகாதே | யென்றார் |
| நந்தனார்-ஆனையைவிட்டுவழிகாட்டும்பெரியோரே | யென்றார் |
| வேதியர்-பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே | யென்றார் |
| நந்தனார்-ஆடிப்பாடிபடிப்பே | னென்றார் |
| வேதியர்-தேடித்தேடிப்பிடிப்பே | னென்றார் |
| நந்தனார்-தில்லையிலேகலங்காமல்நாடுவே | னென்றார் |
| வேதியர்-கொல்லையிலேவிலங்காகப்போடுவே | னென்றார் |
| நந்தனார்-சிந்தைநொந்துதவிப்பேனோ | வென்றார் |
| வேதியர்-வந்துவந்துஅலப்பாதே | யென்றார் |
| நந்தனார்-கொஞ்சினால்நெஞ்சமுருகாதே | வென்றார |
| வேதியர்-அஞ்சினால்பஞ்சம்வருகாதோ | வென்றார் |
| நந்தனார்-சிதம்பரம்போகஉத்தாரந்தாரு | மென்றார் |
| வேதியர்-இகம்பெறலாமோகத்தாலேபோது | மென்றார் |
| நந்தனார்-சீக்கிரமாய்ப்போறே | னென்றார் |
| வேதியர்-போக்கிரியாய்ப்போவா | யென்றார் |
| நந்தனார்-அன்னிதஞ்செய்யே | னென்றார் |
| வேதியர்-சொன்னதுதவறே | னென்றார் |

நந்தனார்-எங்கள்ஜாதிக்குஎன்னவழி யென்றார்
வேதியர்-உங்கள்ஜாதிக்குஇந்தவழி யென்றார்
நந்தனார்-உற்றதுஒது மென்றார்
வேதியர்-பெற்றதுபோது மென்றார்
நந்தனார்-பறையனாய்ப்பிறந்ததென்தலையெழுத்து வென்றார்
வேதியர்-மறையாய்ப்பிறந்துங்கள்வருத்தமது வென்றார்
நந்தனார்-வாய்க்காதவெனக்குவழிசொல்லு வீரே
வேதியர்-காய்க்காதமரத்தில்கல்லெறி யாரே
நந்தனார்-எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர்-அப்போதுமிப்படிச்செய்தென் னென்றார்
நந்தனார்-உலகமனைத்துங்கடவுளாய்நின்ற தேன்
வேதியர்-பலகலைகற்றும்பறையனாய்ப்பிறந்த தேன்
நந்தனார் பழுதானஜென்மம்படைத்தேனே யென்றார்
வேதியர்-அழுதாலும்கன்மம்மடக்காதே யென்றார்
நந்தனார்-காப்பதுன்பாரம்சட்டுவிடு மென்றார்
வேதியர்-நாற்பதுவேலியைநட்டுவிடு மென்றார்
நந்தனார்-அப்பன்கருணைஇப்படியோ வென்றார்
வேதியர்-தப்பினேனதுமொப்பிலே னென்றார்

வசனம்.

அப்போது நந்தனார்மெத்தவும் ஐயரைவணங்கி உத்தாரங்கேட்கிறார்.

விருத்தம்.

அல்லெனுங்குழலாள்மோகமண்டாதவொருக்காற்றொண்டர்
பல்லூழிகாலஞ்செய்தபழவினைத்தொடக்கறுத்துச்
சொல்லினிமடங்கொணுசுச்சுகக்கடலாட்டிவைக்குந்
தில்லைநாயகனைக்கண்டுதெரிசனஞ்செய்வேனென்றார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

மார்கழிமாதந்திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைபுண்ணாக்கப்பண்ணாமலொருதரம்போய்வாவென்றுசொல்லையே
கட்டையிருக்கையிலசிதம்பரம்போயே காணவேணுமையே
கசடனாகிலும்பாசைவிளையுதுன் சனு[illegible]க்குப்பிடையே

காலில்நகமுளைத்தநாள்முதலாயுமக் கடுமைக்காரனையே
காலபாசத்தில்காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைக்கேனையே
உண்டதாமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணேனையே
எட்டுமிரண்டுமெரியாதைபேதை யெளியேநானையே
இன்னந்தாய்வயிற்றிடையணுகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுக்கண்ணீர்குடிக்கிடும் வெறியேனுனையே
மேதினியினில்நாயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானந்தலங்களொன்றுங்காணு தடியேநானையே
தளாவிடவேண்டாமொருகோடி தருமமுண்டையே
அல்லுபகலுங்களாதாவாலே ஆளாகிநானையே
அன்புடனேநல்லகதிபெறுவாயென் றனுப்பவேணுமையே

விருத்தம்.

சிலையளிக்கிடும்வேளொரிக்கிடச்செய்திருந்திடுந்திருமேனியைக்
கலைசணைக்கிடவேண்டுங்காதலைக்கண்டிலாகியமம்மதனைத்
தலைசுமந்திடுஞ்சேடனார்த்தன்மைகொளுநந்தனுனை
விலக்குவாங்கியபெருமையாலிவன்வேணதெல்லாம்பேசுவான்.

வசனம்.

இப்படிச்சிதம்பரம்போக உத்தாரங்கேட்கநந்தனுருடையசிவபத்திபரிதாபத்தை ஆதிசேடனுலுஞ்சொல்லவொண்ணுதபக்கிமைகொண்டமகானுபாவனைதனக்கடிமைக்காரனென்று வேணபடிபேசுவார்.

கீர்த்தனம்-இ—ம்—முகாரி-ஆதிதாளம்.

மாடுதின்னும்புலையாவுனக்குமார்கழிதிருநாளோ
தேடியெடுத்தாயாரிடத்தேபோய்தீண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையாவுனக்குஆனித்தெரிசனமோ
நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோநாடாதேபோடா
நண்டுக்குக்கலியாணவூனைநரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசைதிருநாளுண்டோபறையாநீபோடா
பூசைகள்செய்வாயோஆண்டவன்பொன்னடிதொழுவாயோ
கூசல்போடாதேபோடாகூழைக்கும்பிடலாகாதோ
கங்கையிலாடுவையோஅங்கேகாணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடிவந்துஇறையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோஉனக்குமானந்தத்திருகூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைக்குத்தெரியும்வாராதேபோடா

### வசனம்.

அடாநந்தாசபாசு நன்றாயிருக்கின்றது நீசிதம்பரம்போகவேண்டுமென்றுகேட்பதை ஆலோசித்தால் மிகுந்தஆச்சரியமாயிருக்கின்றதென்றுவேதியர்பின்னுஞ்சொல்லுகிறார்.

### தரு—இ—ம்-மோகனம்—ஆதிதாளம்.

### பல்லவி.

அடடாநந்தனே தில்லைக்கனுப்புமென்றெனைக்கேட்ப
தாச்சரியம்மிகவாச்சரியம்

### அநுபல்லவி.

அடடாகட்டுக்கதைக ளெனைத்துமிங்குதவாது
நடடாவயலைத்தேடி நடநடவிப்போது

### சரணங்கள்.

ஈனஜாதியிற்பிறந் தோனுனக்கவ்விடத்தி
லென்னஅலுவ லுண்டு—அல்லவென்று
போனபோதிலுமூவா யிரவரிருக்கும்வீதி
புகுந்துநீகடந்து கொண்டு
மானுமழுவுஞ்சிர மாலையணிந்தவரு
மற்றலாதிரிபுர மதனையெரித்தபெரு
மானுக்கியலுந்திரு மஞ்சனோற்சவாதிரு
வாதிரைப்பலன்பெற மாட்டாய்சொற்படியிரு—அட

வெள்ளிகளொருபுறம் வேதியர்களிபற்றும்
மேன்மைகள்மிருந் தங்கம்—அந்தத்
தாழ்மையிலாதிவ்யபத் தவம்போய்வருவதற்கு
தடையில்லையென பொங்கும்
தன்மையிதெல்லாங்கன வாகமுடியவரும்
சாதியிழிவையோசித் தாலேதெரியவரும்
பன்னிப்பன்னிப்படித்தேன் பாவாயற்றேயவரும்
பட்டால்தெரியும்பறையனுக் கென்பதுபோல்வரும்—அட

அல்லும்பகலும்சோ றளித்துக்காத்திடுந்தெய்வ
மானவம்பல வாணன் இங்கிருக்க
தொல்லையும்படவேவேண்டா மென்றுரைத்திட்டவுன்
சொல்மறந்தநீ வீணன்

தில்லூர்திரியாவரப்பேச சேதுக்காகபிடித்
திருக்குமெனதுபிடி திரும்பாதடாபகடி
பஞ்சைமீயா சமர்த்து
பார்ப்பே னெடடாதடி-அட்

வசனம்.

வேதியர்சொற்களைக்கேட்ட நந்தனார்நீங்களென்னைத்தடியாலடித்தாலும்பிராணனைமடித்தாலும் கழுத்தைப்பொடித்தாலும் சிதம்பரத்தில்கடித்தானைக்காணாமலிருந்தேனென்று தடுத்துச்சொல்ல வேதியருக்குகோபம்பிறந்துசொல்லுவார்.

தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியுன்குற்றத்தைபொறுப்பேனோ
அனுவளவேனுஞ்சம்மதிப்பேனோ

அநுபல்லவி.

தனியாம்வேதசாஸ்திரந் தனையுணர்ந்தாலுஞ்சாதி
தன்புத்திபோகாதென்று சரித்திரம்பொய்யல்லநீதி-இனி

சரணங்கள்.

பலகாலமுப்பழமும் பாலூட்டினாலும்பாம்பு
பழகாததற்குவெறப்பாய் பகராதுமோவேம்பு
தவம்விட்டப்புறமபோய்நீ தானசையாதடாவிம்பு
தரையிற்கறந்தபாலுந் தாவும்மூலைக்காம்பு-இனி

இடையிலிருக்குமிந்த இடும்பன்கடம்பன்சரி
இவர்களெல்லாமலிதோ இருப்போர்கள்சிறுநரி
நடையிலிருப்போன்மகா நல்லவனாதூர்தெரி
நானுனைச்சேர்ப்பேனென்று நம்பாதேபரிகரி-இனி

வசனம்.

என்றுசொல்லியவேதியர்க்குநந்தனர் மிகுந்த தாழ்மையோடுஞ் சொல்லவேதியர்க்குக்கோபம்வந்து திருட்டுத்தனங்கொண்டமுரட்டுப்பயலேயென்று மறுபடியுஞ்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ௩ம்-தநாசரி-ஆதிதாளம்.

பல்லவி

திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்நந்தா-அடாவுனக்கு
திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்நந்தா

அநுபல்லவி

முரட்டுத்தனமாய்ப்பே சாதேநீர்மூடா
முன்னும்பின்னுமறி யாக்குடிகேடா
வரட்டுதவளேபோல்வா யாடாதேயடா
வயலேமுழுதிலுஞ்சீர் படுத்திடப்போடா-திருட்டு

சரணங்கள்

புத்தியுள்ளவனுகப் பாருவர்கொண்டுழுது
புஞ்சைநிலமுழுதுஞ் சீருசெய்துவிதைத்து
வைத்திடினம்போற்குடி யாருயிருப்பார்களுனே
ஊேத்துதிப்பார்சகல பேரும்
சத்தியமாகக்குண் டைகளேநீகூட்டி
சார்ந்ததற்குவா யாரநீர்ஓட்டி
சத்தியுள்ளமட் டுக்குமேரோட்டி
தக்கவன்றன்றிர மதுமிகக்காட்டி
மற்றுமற்றனேத் தனேத்துமுடிவற
மெத்தமெத்தசித்த மொத்துசெய்குவாய்-திரு

பட்டாங்குனக்கேதடா பாவியென்சொந்தமான
பழனங்களுமீடேறத் தேவிபூசைபுரிந்து
பொட்டெனப்பதம்பணிந்து சேவியிதைமறந்தால்
போக்குவேனேயுன்னிட ஆவி
சட்டமாகவுஞ் சமர்த்தைகாட்டாதே
சாணமென்றுகண் ணிரைவோட்டாதே
தட்டுவனேகை மிஞ்சிநீட்டாதே
சலசலப்புக்கஞ்சிநரி யோடமாட்டாதே
விட்டுகெட்டுவிட்டு விட்டுவிடுவிடு
கெட்டுகெட்டுகெட்டு கெட்டுப்போகாதே-திருட

பாயுஞ்சலமுழுதும் கட்டிபதனமாகப்
பழையயெருவெடுத்துக் கொட்டிசேறுபோலாட்டி
தோயும்ஈடமுதலோ ரட்டிவாராமற்செய்ய
சொன்னலனுப்புவேனே யட்டி

காயமுள்ள போதேநீகாணடா
கர்த்தன்றனைக் காணப்போவானடா
ஏய்த்துவிட்டுப்போ கப்போராயடா
யோத்துதிருவா திரைக்கனுப்பேனடா
ராயன்ராயன்ராயன் ராயன்சாட்சியாய்
தீயன்தீயன்தீயன் தீயன்உனைவிடேன் திரு

இதுவும்-வேதியர்-சொல்லுகிறார்.

அறுசீரடி-யாசிரிய.விருத்தம்.

வானிருந்தவிடந்தேடிக்காணுமல்மாதவத்தோர்மதிமயங்கத்
தேனிருந்தசெந்தாளைச்சிந்திப்பார்புந்தியுறத்தெளிந்தாரில்லை
ஊனருந்தும்புலையாநீசிதம்பரத்தேசென்றாலுமுளதோமுத்தி
தானிருந்தவிடம்விட்டுப்போகாமல்சஞ்சலத்தைதள்ளுவாயே

வசனம்

அடாவாடாமூடாகேளடா என்னைப்போலொத்தபெரியவர்களா லேகூடத்தேடிஅறியப்படாத ஜெகதீசனுடைய திவ்வியநாமத்தைநத் தையுரிஞ்சும்பறையா நீகத்திக்குலைக்கலாமா இப்படித்தத்திக்குதிக்க லாமா வித்தையொன்றுமறியாதவனிங்கேபத்தியெண்ணலாமா நத்தி முத்திதேடலாமா லத்தமான பெரியோர்களிடத்தே சத்தம்போட லாமா இங்கே நித்தம்நாடலாமாவியர்த்தமானஇந்தசென்மமெடுத்து தேடலாமா அங்கேபுத்திசொல்லலாமா அடாஇதுவெல்லாம் விட்டுவி ட்டா நாத்தைப்பிடுங்கிநடடா உன்தொழிலைத்தொடடா தோலகட்டி யதடியையெடடா யாருந்திருடாமலிருடா களத்தில்படுடா காவல்கொ டடா புல்லறுடாமுரடா வழிதெரியாக்குருடர் நான்சொல்வதுகேள டா இதுடா உன்செய்கையென்றுகல்லாலெறிந்துதடியாலடித்து வா யால்திட்டி தேள்போலேகொட்டி இவனொருஆல்போலேநின்றான் அ வர்நாள்போகுதேயென்றா.

வசனம்

நந்தனார்வேதியனைப்பார்த்துசொல்லுகின்றார்நீங்களென்னையடிக் கலாம் நானும் அடிபடலாம்தங்களுக்குகைநோகும்என்றுசொல்லுவரா

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்ததுபோதுமையே-என்னை - அடித்ததுபோதுமையே
அடித்தாலுங்கள்கைவலி யாதோ
அடிமைவேலைசெய்யுமென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென்மனதிற் படாதோ
பாவியெனக்குயினிமேற்றெரி யாதோ-அடி

நல்லவரோயுங்கள்மனதுபிர காரம்
நடக்காமலிருந்ததும்ப சாரம்
சொல்லத்தெரியுமோயுனக்குப சாரம்
சுகிர்தசாதியுங்களாலேயிந் நேரம்-அடி

வசனம்.

ஐயனைத்தலைவணங்கிச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

இலவுகாத்தகிள்ளை யாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே
பறையன்சொல்லுபழு தாச்சே-நீங்கள்
பார்ப்பானென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே-தெய்வ
மில்லாமலெங்கையோ போச்சே
சேரியேசொற்கமென் றாச்சே-தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விழலுக்கிறைத்தாற்போ லாச்சே-எந்தன்
வேண்டுதல்வீணாகிப் போச்சே
கண்டதைக்கண்டிட லாச்சே-நல்ல
காலம்பிறக்காமல் போச்சே

வசனம்.

பெரியோர்கள்கோபத்தைஎளியேன்தாங்கேனென்றுசொல்லுவார்.

கீர்த்தனம் இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பெரியோர்விசனமடையாரடைந்தாற் பெருங்கடல்தீயாதோ
பேயேன்தாங்குவேனோஇம் மாத்திரம்பொறுத்தாலையே

அல்லும்பகலும்நானறிந்துமேதோ வறியாமல்போனேன்
ஆசைகொண்டேன்திருவம்பலத்தெய்வம் மோசஞ்செய்யுதையா
பாவியெனைத்தொடர்ந்தடித்தாலுமென் பாழ்வினைதீராதோ
பார்தனில்போர்சொல்லாதவனன்றே படைத்ததுபோதாதோ
சிங்கம்பொசித்திடுமிறைச்சியைவேறொரு செந்நாய்தொடலாமோ
சிதம்பரம்நான்தொடலாமோசாதியில் சின்னவனானன்றோ
இன்னமுஞ்சிதம்பரம்போவேனென்று இங்ஙனேவருவேனோ
இம்மட்டுப்போதுமையேஉங்கள்தய விருந்தாலதுபோதும்

இவை-ஐஞ்சீரடியாகவந்த- விருத்தம்.

சேதிவந்தவன்வேதியன்சினத்தால்
காருகளாந்திடுஞ்சோலைநின்றவன்கருத்தை
ஏருலாவிங்பரமனற்றாண்மலயுறுக்கி
தீரனாகியநந்தனுமப்படிச்செய்தான்.

வசனம்.

தங்களையருக்குத்தலைவணங்கி பெரியகும்பிடுபோட்டு ஒருசோலையிலிருந்து சமாதிபண்ணிதன்னுடையசரீரத்தைதில்லைவெளியிலேகலந்துக்கொள்வேனென்று வீரவைராக்கியபட்டத்துடனே சேரியில்வாராமல் தானேயிருந்தார் தன்னுடைய துயர்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்புவித்து சங்கைக்கொண்டாடுவார்.

விருத்தம்.

வேதியரிப்படிசொல்லவெந்துமனம்வேறாகிவினைபோவென்று
சாதியிலேபாவமதுநீசனன்றோபிறப்பித்தாய்சுவாமிதன்னை
சோதனையேசெய்கின்றாஎவ்வுயிர்க்குமவ்வுயிராய்த்தோய்ந்திருக்கும்
ஆதிகுருவல்லவோநீபார்ப்பானுக்குள்ளிருந்துமனுப்புவீரோ.

கீர்த்தனம்-இ-ம்-செளராஷ்டகம்-ஆதிதாளம்

ஐயர்வுன்னடைக்கலம்பொய்யாகியதேகமடைக்கலம் ஐயாஐயா

அத்தாநான்வருவேனே அம்பலத்தைபெருவேனோ
சற்றேயாகிலுங்காண்பேனோசந்நிதிகாணாதென்செய்வேன்

விருத்தம்.

தாறில்லா தவிப்பிறவியைத்தானெடுத்தஞ்சி
தூறுபட்டனற்கீழ்க்குலமாகியித் துன்பம்
நீறுபட்டிடுமல்லவோ தில்லையினின்றுமல்
பேறுபெற்றிடுவேனதற்குமொருபிசகோ.

கீர்த்தனம்-இ ம்-எ துகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயோதெய்வமேயிந்த வையர்க்கடிமையானேன்
செய்யாவினைசெய்தல்லவோ
உள்ளங்களைந்துருகிஉய்யும்படியாய்க்கேட்கில்
கள்ளக்குமரனல்லவோ
ஆலைக்கரும்பதுபோலாச்சுதங்கமுழுதும்
வேலைக்கிடமுமில்லையே
கோவில்கும்பத்தைக்கண்டால்கோடிவினைகள்தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண்
தில்லையம்பலவாணதெய்வம்புலையர்க்காக
கல்லாச்சமயலாச்சுதே
பொன்னம்பலவாயுன்னைப்போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ
அன்னைதந்தையும்நீயென்னுவிபொருளும்நீ
உன்சந்நிதிவரச்செய்வாயே

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடிமுடியொன்றுமில்லாதம்பலத்தரசேயுன்பால்
கொடியனுன்வந்தாலென்னகுறையுமோவதனால்நீதி
நடலைசெய்பார்ப்பான்கையில்நடுங்கவோவிடுத்தாயென்றும்
படிமிசைவீழ்ந்தானடிப்பதறுவான்கதறுவானே.

கீர்த்தனம்-இ ம்-லாவணி-யமுனைகல்யாணி.

பல்லவி.

செய்யுமுபாயமறியேனறியேன்
ஆகரசிவனேதில்லைச்சிவனே செய்ய

பத்துவருடகாலமாகவந்துபார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிபோய்வாவென்றொருநல்லசேதிசொல்லக்காணேனையே செ

பாவிபுலையனாய்ப்பிறப்பேனோஇந்தபாரினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதேபொன்னம்பலவாவுன்னடிக்கமலங்காணேனையா செ

பல்லுமுளைத்தனாள்முதலாகஇந்தப்பாடுபடுவேனோ
தில்லைநாயகாகனகாவென்றுன்னைத்தேடும்வகைகாணேனையோ செ

நாற்பதுவேலிநிலமிருக்கிறதைநடுகவேணுமென்றார்
கார்ப்பதாருங்களைபிடுங்குவதாரொன்றுநடுத்தப்பேச்சுக்கடியேன் செ

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென்றுவதைப்பிடித்திழுத்திடுவேன்
பார்த்தனிருக்கிருபைசெய்யாவிடிற்பறையன் பாபம்வீண்போகாதுசொ
[ன்னேன்-செய்

தில்லைச்சிதம்பரத்தைக்காணுவிடிலென்தேகந்தெளிந்து
சொல்லிவிட்டேன்பொன்னம்பலவாவுன்சொர்னசபைக்குவருவேனோநா
[ன்செய்

விருத்தம்.

கடுகிவருந்தியும்பணிகலனாகவுங்கற்றைச்
சடிலமேவியபுரவியுனற்றரிக்கவுந்தகுமோ
விடுவதில்லையுன்னருகினிற்றனொருவேங்கைக்
கொடியன்வந்ததினாலென்னதில்லையிற்குறையோ.

இதுவுமது-விருத்தம்.

மாவளர்தில்லைமாநகர்வீதியும்மதிலும்
கோயிலுந்திருக்கூட்டமுங்கண்டுகண்குளிரப்
பாவியாகினேன்காயத்தையேதுக்குப்படைத்தே
னாவிதானிருந்தும்பரகதியடைந்திலனே.

ஆதிநாள்முதற்றவம்பெருமாமுனிக்காக
தாதமோங்கவேநாடகம்புரிந்திடுநாதன்
பாதம்போற்றியென்னேரமும்பாவியானந்தன்
ஏதந்தீரவேகனவிலுமீசனுமிருந்தார்.

வசனம்.

தில்லைத்தலத்தைக்காணாதஜென்மமிருந்தாலென்ன போனாலென்ன வென்று நிச்சயம்பண்ணி மனதுருகிவாடும் வேளையில் கொஞ்சம் நித்திரைபோலவேகண்டு அந்நித்திரையில் அம்பலத்தேவன்வந்து சொல்லுவார்.

கீர்த்தனம் இ ம்-எ தருகுலகாம்போதி- ஆதிதாளம்.

பல்லவி.

கனவினில்கண்டாரோநந்தனார் கனவினில்கண்டாரோ

அநுபல்லவி.

மனதிலெப்போதும் வருந்தியடிபணியுங்
கனகசபேசனைக் கண்ணினாற்காணாமல்- கன

சரணங்கள்.

நீடுங்கழனிகள் நானடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனைக்கிணையார்பத்தி
மானில்லையெனத்தில்லை நாதனும்வந்துரைக்க- கன
கங்குல்பகலாய்க் களித்தநின்னருளாற்
சங்கரனேயென்று சாருநன்னிலையால்
அங்கம்புளகித மாச்சுதுஅதனை
லிங்கேவந்தேனென்று ஈசனும்புகல- கன

விருத்தம்,

அறிவுமிகுந்தாற்றலுடன்சிவபெருமான் பெயர்சொல்லியாற்றுநாளில்,கருமருவுமிடறழகன்றனதடிமைவெறியகக்கனவில்வந்துகுறையறவே கழனிகளைநட்ச்சொன்னேமுனக்குவிடைகொடுத்தேனென்றமறையோறவர்க்குரைத்துநீவிரைந்துவாவென்றுமனதுட்சென்றார்.

நந்தனார் கனவில்நடேசமூர்த்திசொன்னவசனம்

நம்முடைய நந்தனாரே உன்னிடகழனிகளை நமது பூதகணங்களாலேநடச்சொன்னேம் வேதியருக்குக்காட்டினால் உத்தாரங்கொடுப்பானென்றுசொல்லி தான் அம்பலத்தேசென்றார்.

சந்நிகள்.

களையடாமல்சலம்விடாமல் சதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதைக் கட்டுகட்டவேதோணும்

பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேடுதண்ணியாம்
பரமசிவனைப்பணியுமந்தனூர் பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்துருவமாகி கருணைமாரிகண்டனள்
கடுகிநடந்துவேதியரிடங் காணவென்றுசென்றனன்

விருத்தம்.

அய்யபோவாருமென்றுஅழைத்திடுமந்தனைத்
துய்யவேதியருங்கண்டுதொல்புவித்தெய்வமெல்லாம்
பொய்யிதுவென்றுதள்ளிப்புலையனும்வந்தானென்று
செய்யவேண்டியதுசெய்யச்செப்புவாஜெப்புவானே.

பலவிதஇராகஞ்சேர்ந்தகீர்த்தனம்- இம்-வராளி ஆதிதாளம்.

பல்லவி.

வேதியர்சொல்லுதல்.

நந்தாவுனக்கென்னமதி வந்ததென்னதந்ததாரு-நந்தா
அந்தரங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
மிந்தையாய்நினைத்ததன்றோ அந்தவேளைபுத்தியில்லை-நந்தா

தோடி.

கொல்லைக்காட்டுநரிபோலே பல்லைக்காட்டிபேசுவாய்
கல்லைக்காட்டிகோபங்கொண்டு சொல்லைக்காட்டியேசுவேன்
இல்லையெனசொன்னதெல்லா மில்லையென்றுபோச்சுதா
கல்லையென்ஐயர்சொன்ன சொல்லுநிறமாச்சுதே
சித்தமுந்தெளிந்துதா வற்றதுவுணர்ந்துதா
பத்தியுந்துலைந்துதா கத்தனும்பறந்துதா
சட்டம்சட்டம்நல்லதுகல்லது மெத்தமெத்தசந்தோஷம்-நந்தா

மத்தியமாவதி.

இப்படிஇப்படிசொல்லாதே தப்பெடுத்தடிப்பையா
சொற்படியொப்புதலாகநீ மெப்படிநடப்பையா
கள்ளக்கும்பிடுதள்ளடா காரியங்கைக்கொள்ளடா
எள்ளுக்கொல்லையைக்காரடா எங்குஞ்சுற்றிப்பாரடா

தெய்வமென்பதுகுற்றம் தெளிந்துபாருசுற்றம்
கையைக்கொட்டுசத்தம் கண்டுகொள்ளுநித்தம்

ஊணுறக்கமேயின்பம் ஊனிறந்தாலேதுன்பம்
சாண்வயிற்றுக்குஅப்பு சாதிமுறைமைவம்பு
ஓகோபலேபலே சபாசுகண்டுகொண்டாய் - நந்

### கேதாரகௌளம்.

சூதாடிதோற்றவன்போல் வாதாட்டிநிற்பவர்க்கு
வேதாந்தசாஸ்திரங்கள் காதாலேகேட்டிருந்து
என்னகாரியம்அதில்என்னவீரியம் தள்ளுதள்ளு - நந்

### புன்னாகவராளி.

தில்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகம்பட்டால்புண்ணாகிப் பார்த்ததில்லையா
அம்பலமாவதுஆகாச முற்றுப்பாறு
அருளில்லைபொருளில்லை கண்டுசேரு
பத்தியென்றும்சித்தியென்றும்வற்றியென்றுமுத்தியென்றும்
இத்தனைநான்கற்றகலை அத்தனையும்பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறுபேசினதால் சோறுபோடுமோ - நந்

### நாதநாமக்கிரியை.

எல்லாமுழுப்புரட்டு வல்லான்வகுத்தவழி
சொல்லாதேசும்மா நில்லாதோ
காரியத்தைப்பாரடா உனக்கிணையாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லஊரடா - நந்

### மாஞ்சை.

கஞ்சுகூழுகுடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும் சஞ்சலமென்ன - நந்

### மத்தியமாவதி.

சம்பாநெல்கிடக்குதுனக்குத்தாரோன் ஒற்றைச்
சல்லாகிழித்துனக்குத்தாரோன் ஒற்றைச்
சண்டாங்கிச்சேலையொன்று துண்டாய்க்கிடக்குதுந்தன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்றாய்சுகமாயிரு - நந்

### புன்னாகவராளி.

துட்டுவெட்டுபோக்குதின்று தண்டைவெட்டிபார்த்தையா
கண்டானடிக்கட்டளையில் முண்டிருக்குபார்த்தையா - நந்

### மோகனம்.

தாரணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணினுந்தோணாது கோணிநடந்தாலுமென்ன

பெண்டாட்டியில்லாச்     சுகமல்லவோமனங்
கொண்டாட்டம்கொள்ளா     ததைச்சொல்லவோ - நந்

## ஆரபி

ஏருவிட்டழுதவயல்     மறுவிட்டுத்தேவையில்லை
எதுவெட்டினாலுந்தாங்குந்     துருவிட்டுப்பார்க்கவேணுந்துரையே
நிலம்பாராதபேட்கட்குப்     புரையேயிதுவல்லாமல்
வேறேயுண்டோயிறையேயிந்தவூருக்கிது     நல்லவிரையே - நந்

## அசாவேரி.

முளைக்கால்விளைந்ததானால்     சேலைக்குக்காணும்
உனதுகூலிக்குக்காணும்     குழந்தைபாலுக்குக்காணும்
ஊருக்குளிந்தநிலஞ்சபலைபயோநீ     வாரிவிடவேணு - நந்

## சாவேரி

வாரிநகாலைசுற்றிப்பாரு     கோரையைப்பிடிங்கிநம
சேரியையுழுகச்சொல்லு     வீரியைநடுகச்சொல்லு
செட்டியார்குளத்தருகே     மூட்டிருக்கப்போர்த்தையா
வெட்டியானகத்தருகே     திருட்டிருக்கப்பார்த்தையா - நந்

## புன்னாகவராளி.

எல்லாமுனதுபொறுப்     பொல்லாமுன்துக்கம்
மல்லாமல்வேறேகதியில்லை     இல்லைஇல்லை
கட்டியடிக்கட்டளையில்     விட்டதுமுளைத்துதா
பொட்டத்திலேகுட்டையிலே     நட்டதுபலித்துதா
காடுவெட்டிநஞ்சைபண்ணு     மாடுகட்டிவைக்கோல்போடு
பாடுபட்டழைத்தாலன்றோ     வீடுகட்டிவாழலாமா - நந்

## வசனம்

இப்படிசொல்லும்வேதியனாபண்ணையைப்பார்க்கவாருமென்றுநந்தனார் கூப்பிடுவார்.

## விருத்தம்.

பண்ணையாவையும்பாருமென்றழைத்திடப்பரிந்து
கண்ணுலாவியவேதியன்களிப்புறத்தன்னுள்
பண்ணுலாவும்பொன்னம்பலக்கூத்தனைப்பாவி
எண்ணிலாவரும்காதல்கொண்டிருந்தனர்தாமே.

## வசனம்.

கேவலமாகிய நீசன் சிவகணங்களாலே ஓரிராத்திரியில் நடவுநட்டு அறுப்பறுக்கும்வயலைவேதியர்கண்டு ஒன்றுந்தோற்றாமல் உலகவாசனையற்றுநின்றார்.

வசனம்.

நந்தனார் அம்பலவாணனைக்கொண்டாடிக்கூத்தாடுவார்

கீர்த்தனம்-கடுக்கா.

நந்தனானந்தபரிதமானான்நந்தனாரும் ஆனந்தமாகினார்
சொர்க்கமானவயலவந்துபார்க்கையில்
விந்தையாச்சுதுபலபந்தம்போச்சுது
சிந்தைதீரவேயத்தானந்தத்தின் நந்தனா

நீச்சச்சாதியென்றுடேசிப்பேசுமித்த
தோசிவேதியனுமாசையாகவே
தேசமென்றுந்தில்லைவாசமாகூட
ராசமூர்த்திக்குதாசனென்றுவரும் நந்தனா

வாருவாருமிதைப்பாரும்பாருஞ்சிவ
னோவந்துசெயுங்காரியங்களிது
பாரிதின்மீதிலிணையாருமில்லையென
ஊரிலுள்ளபெரியோருஞ்சொல்லச்சொல்ல நந்தனா

சித்தமீதிலொருகுற்றமேதுமில்லை
சுத்தமானவிதயத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவெகுசித்தியாகிவர
முத்திதேடிவருபத்தனென்றுமகிழ் நந்தனா

வசனம்.

நந்தனைப்பார்த்து சிவபத்தர் அபசாரம்பண்ணினேனென்றுமிக வுங்குழைந்துசொல்வார்.

தரு-இ ம்-பியாகடை-அடதாளசாப்பு.

பல்லவி.

நந்தனாரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்

அனுபல்லவி.

விந்தையைக்குறியாமல் விழலனறியாமல்
வீம்புக்குக்கச்சுகட்டி விசினேனென்னையாளும்-நந்த

சரணங்கள்.

அறியாமனத்தினாலே ஏதோபசி யான்
அருமையைத்தெரியாமற்போனேனே மெத்த

சிறியோர்செய்தபிழைபெரியோர்பொறுப்பரென்று
செப்பும்வார்த்தையுமக்கேதனவோனே இந்த
முறையுணர்ந்தோர்க்குளென்னதான்சொல்லத் தோணும்
மூடன்மேற்கிருபைவைத்துமுழுதுங்காத்திட வேணும்
நிறைவுற்றவருட்பெற்றோர்க்கேதுங்கோண் காணும்
நினைக்குமுன்னடிவணங்காதோர்வந்துயர் வேணும்-நந்த

நேற்றுப்பொழுதளவுஞ்சும்மாவிருந்த இந்த
நிலங்கள்முற்றும்பயிர்கள்முளைத்துக் கதிக்கச்
சாற்றுங்கதிர்கள்முற்றிச்சாய்ந்து அறுவடைக்குத்
தக்கதாவிருக்குதேமிகக்கிளைத்து உமது
ஆற்றல்தனக்குநிகராவரோ யாவரும்
அய்யாவுனதுநல்லருளாலநலமே வரும்
நாற்றிசையோர்களுங்கடிப்பணிய வரும்
நாயேன்களிக்கமனம்நம்பத்தகிருபை தரும்-நந்த

குண்டைகளுங்கலப்பைக்கோலுங்காறும் விதையும்
கொட்டத்திலிருக்கநீர்செய்திரோ அந்த
அண்டர்பணிந்தில்லையாண்டவனே யுமக்கு
வடிமையாளாகிவந்துசெய் தாரோ
உண்டத்தனைதாலென்றுண்டுக்குமைத் தொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர்யாருமேகக் கண்டேன்-நந்த

வசனம்.

என்றுவேதியர்சொல்லிப்பின்னுஞ்சொல்வார்.

இதுவும் வேதியர்சொல்-விருத்தம்.

கறைபடுங்கண்டன்றாளைக் கருத்தினிற்பெறவேநோக்கி
குறையருள்நந்தனாருக் குலமதாகிமுன்றெண்ணி
மறைபுகல்பெருமையாலே வருத்தினேன்கொடியனென்று
இறைபடுவெளம்போலஞ்சி யேங்கியேயாற்றுவானே.

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி ரூபகதாளம்.

குற்றமெந்தனைசெய்தபோதிலுமந்தன் சித்தத்தில்நினையாதே-சிவ
பக்தனென்றறியாமல்பதறிவார்த்தைகள்சொன்ன பாவந்தலையாதே

புலையர்கள்பரகதிசேரும்படியவர்புண்ணியஞ் செய்வாரோ-உன்னை
கலிதீரக்கண்ணாற்கண்டபேர்களெல்லாங் காட்சிபெறுவாரோ
ஒருவன்மனதறியவொருவனுலாகாதென்றுலகம் மொழியாரோ-அது
திருமாச்சுதினிபுந்தன்சென்மசபலமச்சு தெய்வமுமிறங்காதோ
ஜாதிபிநகுலஞ்சாஸ்திரங்கிடையாது சந்தோஷப்படலானேன்-இப்போ
ஆதிசிதம்பராகசிதம்பரமென்று அனுப்பிவிடலானேன்

வசனம்.

இப்படிமிகவும் வணங்கிவாலாற்றைக்கேட்டநாளைப்போவர்கனவி லேஈசன் வந்து கருணைசெய்தாரென்றார் அதற்கு நாளைப்போவானைப்பார்த்து வேதியர் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம-யதுகுலகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுன்கனவினிலெப்படிவந்தார்
வரந்தந்தாரென்றாய் நந்தா
சந்ததமுஞ்சனகாதிமுனிவர்தொழும்
சச்சிதானந்தமூர்த்தியல்லவோ நந்தா
ஆதிமுடிவுங்கிடையாதபராபரஞ்
சோதியல்லவோநீச்சசாதியென்றறிந்தும் நந்தா
அண்டாண்டநிறைகின்றசபாபதிக்
கொன்றுபேதமில்லையென்று நந்தா

வசனம்.

வேதியர் செய்தபிழையெல்லாம்பொறுத்துக்கொள்ளுவீரென்று சொல்லநந்தனார் மறுவுத்தரவுகூறல்.

கீர்த்தனம் - இ - ம - தெண்டகம்-எதுகுலகாம்போதி.

வேதியர்-ஏழைப்பார்ப்பான்செய்திடும்பிழையை
பொறுத்துக்கொள்ளாதே நான்
இனமறியாதவன்முன்புத்திசொன்னதுவும்பொய்யோ

நந்தனார்-பொய்யாகியவிந்தவுலகத்தைப்பார்க்கும்
புண்ணியவானே நான்
புலையனுக்காளடிமையல்லவோபுத்திசொல்லுமையே

வேதியர்-புத்தியுண்டுவித்தையுண்டு
பத்திகிடையாது    வரலால்
புலம்பினதாலென்னமனமடங்காதுபோகங்கிடையாது

நந்தனர்-கிடைக்குஞ்சிதம்பரதெரிசனமென்று
கிருபைசெய்யு    மையே
கீழ்குலமல்லவோநாயினுங்கடையேன்கீர்த்திபெறுவீரோ

வசனம்.

பரமபத்தனுகிய நீயேயெனக்கு அடிமைவேலைசெய்பவன்போலவந்தபடியினலே என்பிறப்பிணி துலைந்ததென்று சொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அப்பொழுதுபோனதன்றிமறைமுடிவையுளங்களிய
யறிவினுன்னித்
தவம்பொழுதுங்கணப்பொழுதுங்கண்டறியாப்பாவியெனைச்
சார்ந்தானன்றே
சிவக்கொழுந்தினடிமையென்றுபெயரிட்டுவேலைகளைச்
செய்ததாக
பவக்கடலைக்குளப்படிபோலதாண்டிவாச்செய்ததுந்தன்
பத்திதானே

கீர்த்தனம் இ-ம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ    பதத்தின்-உன்னை
நம்பாமலேமோசமானேனன்    பித்தன்
பூமிக்குள்நீயொரு    சித்தன்-இந்தப்
பூமிக்குநானெருசாஸ்திரப்பிர    சித்தன்
சாமிக்குள்ளேவெகு    மத்தன்-உன்னை
கண்டுதெரிசித்தபேர்களே    முத்தன்-நந்தா
படித்துமென்னவேதங்கள்    வேதம்-அகில
பார்த்ததில்லையிந்தபகவன்    கீதம்
எடுத்துச்சொன்னாய்சிவ    போதம்-அது
ஏற்காமல்போச்சுது    என்பிடிவாதம்-நந்தா
தெவிட்டாதேசோகம்    பாணி-உந்தன்
தேகமுழுதிலுஞ்சிதன்றிரு    மேனி

பணையோகிவேரு சுஃனி-போலே
பழுததேனனுங்கியாத்தும் ஞானி-நந்தா
பவசாகரந்தாண்டிச் சென்றாய்உள்ளே
பார்த்துணர்ந்துபரமானந்தங் கொண்டாய்
தவமாணிபோலே நின்றாய்-தில்லை
தாண்டவராயனைக்காணாமல்நீ கண்டாய் நந்தா

வசனம்.

இப்படியே வேதியர்சொல்லும்போது நந்தனார் மனம்நொந்து கை கால்நடுங்கி ஐயரைச்சுற்றியந்துவணங்கிஎனக்கு அன்னங்கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங் காப்பாற்றினபெரியவரே உங்களுக்கடிமைவேலைசெய்யுமென்னஇப்படிப்பெருமையாய்ச் சொல்ல வேண்டாமென்றுசொல்லுவார்

தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்,

பல்லவி.

ஐயாசொல்லு வேனேஉம
தடிமைப்பறையன் தானே

அனுபல்லவி

மெய்பாகவேயிந்தனிவாழ் வோர்கள்
வேலைசெய்யூழியர்தம்மையோதாழ் வார்கள்-ஐயா

சரணங்கள்

வேம்புக்குயர்ந்தமதுரங்கள் பூட்டினும்
வீறுமதன்குணம்மாறுதென நாட்டினும்
ஆம்புத்திக்காரரென்றாலேயாவ துண்டோ
அய்யனருளையல்லாமலும் வேறுண்டோ-ஐயா,

மேவுங்கீரைத்தண்டுமேருவைத் தாங்குமோ
வீசும்கதிர்மின்னாம்பூச்சி யோங்குமோ
ஆவதழிவதெல்லாமையன் றன்னாலே
ஆச்சுதென்றாலென்னஆச்சுது என்னாலே-ஐயா

முன்னமேசெய்தவினையின் வசத்தாலே
மூடப்புலயனாற்மேவி யதனாலே
இன்னம்பவேதுன்னின்னமும் ஏண்டா
எந்திக்கொள்ளுமென்றனைக்கெடுக்க வேண்டாஐயா

வசனம்.

நந்தனார் தனதாண்டையாகிய வேதியரைப்பார்த்துத் தங்களுடைய குருவாக்கினால் என்னையுமிப்படிப் புழலாமாவென்றுமிகவும்வணக்கமாய்ச்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்- அமீர்கல்யாணி

பல்லவி.

சின்னசாதிபல்லே சிதம்பரம்போய்வருகிறேனென்றன் சின்
அன்னை தந்தைபொருவரில்லை அடைக்கலமென்னையாளவேணும் சின்
ஈரமில்லாநெஞ்சமாகி இரைச்சிதின்றவுடலைப்பெருக்க சின்
அல்லும்பகலுமதனைப்புசித்து அறிவுமயங்கிப்போட்டோங்களும் சின்

வசனம்

இப்படிச்சொல்லிநந்தனாரைப்பார்த்துவேதியர்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்,

பல்லவி,

ஆருக்குப்பொன்னம்பலங் கிருபையிருக்குதோ
அவனேபெரியவனாம்

அனுபல்லவி,

பாருக்குள்வீடுகள் மாடுகள் ஆடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனாவானோ ஆரு

சரணங்கள்.

வேதபுராணங்களோதினதாலென்ன
வேலைசூழ்பணிமாதராலென்னகாரியம்
சாதனையாகவராதொருநாளும்
மணணாசைபெண்ணாசைபொல்லாது
பாணன்மதங்களடங்கவேசெய்தகோ
பாலகிருஷ்ணன் தினந்தொழுமம்பல
வாணனென்றுதரவாய்விரும்பாதன
வானவராகிலுந்தான்தனசின்னவன்

வசனம்.

பொன்னம்பலஞ் சிவபத்தியுள்ளவன்பெரியசாதிசிவபக்தியில்லாதவன்பார்ப்பனாயிருந்தாலுஞ் சின்னசாதியானபடியினாலேதிருப்புன்கூரிலுனக்காகப்பரமசிவன்சந்நிதியைவிலக்கி தெரிசனங்கொடுத்துங்குளம்வெட்டினதுமொருராத்திரிகாலத்திலேநாற்பதுவேலிநிலமுநடராஜமூர்த்தியேவந்துநடவுநட்டதும்பார்க்கும்போதுநீயே மகாபுண்ணியபுருஷனென்றுசொல்லவேணுமேயல்லாமல்வேறில்லை நீயிதுவரையிலெனதுவார்த்தையைத்தள்ளினதுமில்லை ஆகையாலெனக்குகுருவாகிநின்றுஉபதேசம்பண்ணென்று பின்னுஞ்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-கண்டகம் ஆதிதாளம்.

பல்லவி,

நந்தாநீகுருவுபதேசஞ்செவியிலிடவேணும்நான்கடைத்தேற நீ
நொந்தாநான்சகிக்கமாட்டேன்
நோவெனும்பிறவிக்கடலிடைவீழ்வேன்
மந்தாரம்பூவெடுத்தானார்மலரடிசாற்றிவாழ்வென்னறிவு
சிந்தாமல்வரந்தரவேணும்சிதம்பரரகசியந்தெரிசித்திடவே
வைத்தாக்கருணைக்கடலுன்மனதிற்சென்றநீநிர்த்தனம்புரிந்து
ஒந்தாசைபூதகணங்களுரிமையுடன்சந்தூழியஞ்செய்ய
பெற்றாநீபெரியவனுந்தன்பெருமையையானறிவேனோமூடன்
கந்தாமல்மோசம்போனேனையபிக்ஷைசொல்லேனற்கதிபெறவேசர்

கலிவிருத்தம்,

வேதமோதறஞ்செய்திடுநூற்களைவிதித்துமை
ஆதனுதியுன்னடியவர்க்கடுஞ்சினமடைய
பாதகம்புரிந்தேனென்றுந்தனைப்பாவி
ஏதந்தீரவேவேதியருபசரித்திருந்தார்.

வசனம்,

இப்படிசொல்லியவேதியர்வார்த்தையைத்தள்ளப்படாமையால்சு
ற்றிவந்துதலைவணங்கிஒருமூலையைநோக்கிச்சொல்லுகிறாப்போல்சொ
ல்லுகிறான்.

கீர்த்தனம்-இ-ம-புன்னாகவராளி- ஆதிதாளம்.

பல்லவி,

ஐயேமெத்தக்கடினம் உனக்கடிமை ஐயேமெத்தக்கடினம்

அநுபல்லவி,

பொய்யாதபொன்னம்பலத்தையாயிருக்குமிடம்
நையாதமனிதர்க்குஉய்யாதுகண்டுகொள்ளும் ஐயே

சரணங்கள்,

வாசியாலேமூலக்கனலில்வீசியேசுழன்றுவர
பூசைபண்ணிப்பணிந்திடுமாசற்குண்டலியைவிட்
டாட்டுமேபனமூட்டுமேமேலேட்டுமேவழிகாட்டுமேயிந்த
மானாபிமானம்விட்டுத்தானாகிநின்றவர்க்குச்
சேனாதிபதிபோல்ஞானசபதியுண்டு
பாருமேகட்டிக்காருமேஉள்ளேசேருமேஅதுபோதுமே அங்கே
சந்தையறவேநின்றுபொங்கிவரும்பாலுண்டு

அக்கமிளப்பாறிகொண்டுதங்கபொம்மைபோலவே [மே
னிலுமேவதுஞ்சொல்லுமேஞானஞ்சொல்லுமேயாதும்வெல்லு
அட்டாங்கம்பண்ணினுலும்கெட்டாங்குபண்ணியது
கிட்டாதுகிட்டவரவொட்டாதுமுட்டியது
பாயுமேமுனைதேயுமேஅதுவோயுமேஉள்ளதோயுமேவேத
மந்திரத்திலேயுமில்லைஅந்தரத்திலேபவ
தானமேஅது ானமேமவுனமேபேசாமோனமேஅந்த
மூப்பாழுங்காண்டிவந்துஅப்பாலேநின்றவற்கு
இப்பாவைகிடையாதுஅப்பாதிருநடன
மாடுவார்தாளம்போடுவார்அன்பர்கூடுவார்இசைபாடுவார்
கண்டாருக்கிடையாதுவிண்டாருஞ்சொன்னதில்லை
யண்டாணடகோடியெல்லாமொன்றாய்ச்சமைந்திருக்கு
மல்லவோஅதைக்கொல்லவோபறையன்சொல்லவோ
சொல்லவோநேரமாகுதல்லவோ
பாலகிருஷ்ணன்பணிந்திடுசீலகுருசிதம்பரம்
மேலேவைத்தஆசையாலேகாலனற்றுப்போவனென்று
சாத்திரம்நல்லக்ஷேத்திரம்ஞானநேத்திரங்கொண்டு

கலிவிருத்தம்,

வானவேலியவும்பாவாழ்த்தியமறையைக்
கானமேசெய்யுப்வேறேயுமக்கடுமை
ஈநுமாமிழிகுலத்தினிலெய்தியநந்தன்
ஞானவாரிகொண்டேயவாருளுநநனேந்தார்.

வசனம்,

இதப்படிநந்தனர்சொல்ல வேதியர்கேட்டு திவ்வியஞானமடைந்து நந்தனைப்பார்த்துச்சொல்லுகிறார்.

கிம் இ-ம்-சாமா-ஆதிதாளம்.

கண்ணிகள்,

சிதம்பரம்போய்நீவாருமையா நான்
செய்ததெல்லாமபசாரமையா சிதம்
சிதம்பரம்போவீர்பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம்நந்தனேயினிமேல்
எத்திசையிலுமுமக்கிணைசொல்லப் போமோ
பத்தியழுதலென்றுப்புழுகியபெரியவற் சிதம்

சித்தமுந்தெளிந்ததுதெய்வமேநீயென்று
புத்தியும்வந்ததுகெதியிதுவல்லவே சிதம்

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியனைச் சுற்றிவந்து தலைவணங்கி ஒடுக்கவணக்கத்துடனே தூரவிலகிநின்று வேதியனை ஆசீர்வாதம் பண்ணச்சொல்லுவார்.

கீ-ம்-இ-ம்-ஒரடியிலிரண்டுவார்த்தை-துக்கடா.

| நந்தனார். | வேதியர். |
|---|---|
| சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ | கிடைக்கும் |
| ஜென்மசாபல்லியமாமோ | ஆகும் |
| பதம்பெருந்தவநெறியறிகிலேன் | அறிவீர் |
| பரமனருள்செய்வாரோ | செய்வார் |
| ஜாதியில்தாழ்ந்தவனல்லவோ | அல்ல |
| சாத்திரமுறைமைக்குஞாயமோ | ஞாயம் |
| ஆதியாம்பலதெய்வம்நாடுமோ | நாடும் |
| ஆனந்தமடைவேனோவையரே | அடைவீர் |

வசனம்.

வேதியர் நந்தனாருக் காசீர்வாதம் பண்ணியனுப்பியபின்பு நந்தனாருடைய குணாதிசயங்களைக்கொண்டாடுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடியவர்மனமிடியப்பேசினதுண்டபராத
மனந்தங்கோடி
படுநரகில்வீழ்வாரென்றெனவுனைக்கும்பாவமது
பலித்ததென்று
துடிதுடித்துநொடைநடுங்கிநீர்வடிந்துசிதம்பரத்தே
துதிகள்செய்து
கடிபுகழுந்திருத்தொண்டர்குணமெல்லாமுலகறியப்
பகருவாரே.

இதுவுமது.

சாஸ்திரக்குப்பையெல்லாந் தள்ளினேனென்பதருபோலே
காத்திரஞ்சுத்தமாச்சு கனிந்திடுமுள்ளம்பத்தி
மாத்திரமிருந்தாற்போது மற்றொன்றுமில்லைசைவ
க்ஷேத்திரமுழுதுஞ்சுற்றிச் சேருவேனில்லையென்றார்.

கீ-ம்-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்நேரமும் நந்தனைச்சிந்தித்தா
னந்தனாகியிருந்தனர்நந்தனார் எந்த

பந்தத்தீரவே யிந்தவுருவாகி
வந்துதோவார் தந்துதோசிவனென் எந்த

வசனம்,

விட்டுதோ இந்தவிட்டுக்கவலைகள் பட்டுதோ பவசாகரச் சேரழிந்திட்டுதோ முக்திவெள்ளம் கரைபுரண்டுதோ வென்று ஏத்தித்தொழுபவர் எந்நேரமும் வேதியரிப்படியே சிவபக்தி பண்ணிக்கொண்டு ஆனந்தமடைந்திருந்தார். அப்படியிருக்க நந்தனார் ஆதனூரை விட்டுச்சிதம்பரம் வருகிறார்.

கீ-ம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகிறார் ஆதனூரைவிட்டு
கொள்ளிடந்தாண்டி யப்பால்வருகையிலே
தொண்டராங்கம்பாவசமாய் எங்கும்பொங்கிச்சிவமாய் நந்த

அந்தக்கருணை விருத்தியழிந்து
அநேகஜென்மவாசனையை
யனல்கொண்டுதிகைத்தாரோ சஞ்சிதவினையென்றுவருத்தாரோ நந்த

குண்டலிசத்தியைக்கொண்டு
கிளம்பிமண்டலம்புகுந்து
சஞ்சரித்துக்கொண்டார்குறையஅமுர்தமுண்டார்கிளையார் நந்த

அஞுகிமாய கற்பிதமிந்த
நாமரூபாதி பிரபஞ்சமெல்லா
மழிந்துபோமென்பார்குறைகடலெழுந்தநுரையென்பார் நந்த

சைவத்தலங்களிற்றெய்வமிதுவே
சத்தியம்பண்ணுவேன் நான்பறையன்
சதுர்மறைகேட்டிலையோமிக்கஷண்மதங்கேட்டிலையோ நந்த

எப்போதும்நட ராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க்கிடுறையோ
னிந்திரபதிநிகரோதிரும்பியும்வந்தவர்காண்கிலரோ நந்த

ஈசன்கருணை னேசமிலாதவ
னெத்தனை வேதங்கள்கற்றாலு
மெட்டபெருங்கொம்புநெருங்கித்தொட்டால்செங்கரும்பு நந்த

ஆதனூரிலொருபுலையனுக்காக
அம்பலநாடக மாடுவரோ
வருந்தவம்புரிந்தேனேகனவில்வருந்தியுமிருந்தேனே நந்த

அரகரசம்பு சதாசிவனேபொன்
னம்பலத்தாடிய கேசிகனே
ஐயேயுன்னடிமைமனதுனையேனுனுன்னடிமை நந்த

செழித்துவிபனுலகெட்டிச்சிகரங்க
ளைந்துக்தெரியுது காணையே
தில்லைத்தலமென்பார் அன்புடன்சொல்லப்பலமென்றார் நந்த

குதிப்பாரொருதரங்களிப்பார்கண்ணீ
ரருப்பாறுனந்தலாகிறியால்
கொண்டானடிப்பாரேகுரவைகன்றுய்ப்படிப்படிப்பாரே நந்த

பாரளந்தகோபாலகிருஷ்ணன்றுதி
பாடுந்திருவடிபணிவேனே
பாகதியடைவேனேபூமியில்மறுபடிவருவேனே நந்த

வசனம்.

நந்தனார் ஆதனூரை விட்டு கொள்ளிடத்தருகில்வரும்போதுசொல்லுகிறது.

கீ-ம்-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி,

கொள்ளிடக்கரைபோனன்-நந்தன்
கோபுரங்களைக்கண்டான்

அனுபல்லவி.

பள்ளச்சாதியிலும்பறைச்சாதிநானென்று
உள்ளமுருகியவர்வெள்ளைக்கரைபுரள கொள்

சரணங்கள்.

ஓடத்தின்மேலேறி-நந்தன்
ஒங்குமகிழ்ச்சிமீறி
நாடியவரும்நல்லநடனக்கூத்தாடி
நணியுடன்நதிபெறலாமென்றுதுதிகொண்டு கொள்

அக்கரைபோனானே-நந்தன்
ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவசிதம்பரேசனைக்காண
சிந்தைமகிழ்ந்துசிவதியானஞ்செய்துக்கொண்டு கொள்

திருவாதிரைத்திருநாள்-செய்யுந்
தினமல்லவோயிங்கள்
திருநடராஜமூர்த்திதிருமுகந்தனைக்காண
சித்தங்களிப்பேனேயென்றுறுதிகொண்டு கொள்

வசனம்.

இந்தப்பிரகாரந்தோத்திரஞ்செய்து கொள்ளிடக்கரைதாண்டி வரும்போது தில்லைக்கோபுரத்தைக்கண்டுதெரிசனம்பண்ணுவார்.

கி-ம்-இ-ப்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி,

கோபுரதரிசனமே-எந்தன்-பாபவிமோசனமே

தாகங்கள்மூன்றுந்தணித்துவிடும்நல்ல
சோபனமுண்டாஞ்சோதிவிளங்கிய கோபுர

விண்ணைத்துமேலோங்கியேகண்டு
கண்ணுளார்க்கெல்லாக்காட்சியளித்திடும் கோபுர

அல்லும்பகலுமமரர்துதித்திடும்
தில்லைக்கிறையோன்றினமுமகிழ்ந்திடும் கோபுர

வசனம்.

தில்லைத்தலமிப்படியிருக்குதென்று.

கீ-ம்-இ-ம்-நவரோஜ் - ஆதிதாளம்.

பல்லவி.

மாங்குயில்கூவியசோலைகளும்வாபீடகூபதடாகங்களுந்
தூங்கதிர்மண்டலமெத்தையுஞ்சொர்ணசபேசன்துசமாமும்
நாலுபுரத்திலுங்கோபுரமும்நவமணிச்சித்திரமண்டபமும்
சீலமுறுந்திருவீதிகளுந்தில்லைவேதியர்மாளிகையும்
கண்டேன்கலிதீர்ந்தேன்என்கவலையெல்லாமொழிந்தேன்
மண்டலம்புகழுஞ்சபேசன்சந்நிதிவாழ்த்திப்பணிந்துநின்றேன்
தஞ்சமென்றடைந்தேனிந்தச்சடலத்தால்நொந்தேன்
அஞ்சவேண்டாமென்றொருதரஞ்சொல்லியழைத்தாலாகாதோ
அபபாவுன்சரணம்தில்லைக்கரசேயுன்சரணம்
ஒப்பாரில்லாநாடகம்பயிலுமொளியேநின்சரணம்

வசனம்

கோபுரதரிசனமே என்கிறகீர்த்தனமுதற்கொண்டு சிதம்பரவிசாரமென்றுபெயர்.

சிந்து.

சிவக்வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே அறியாததுபோ லிருந்தசெம்பொன்னம்பலத்தாடியைக்கும்பிடவே ஆதனூர்தனிலிரு ந்துவிடும் அம்புபோலப்பறந்தையமின்றித்தில்லையருகில்வந்தார் மனந் தேறிக்கொண்டார் குறையாறிக்கொண்டார்கெண்டாமணியோசை.

திருநாளைப்போவார்புராணம்,

விருத்தம்,

நாளைப்போவேனென்றார்தஞ்சொலத்தெரியாது
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப்பொழியப்போவாராய்
பாளைப்பூங்கமுகுத்தபழம்பதியினின்றுபோய்
வாளைப்போத்தெழும்பணஞ்சூழ்தில்லைமருங்கணைந்தார்.

இதுபொழிப்புரை.

வசனம்.

நாளைப்போவேனென்றுசொல்லி அநேகநாள்ஒழியச்சபாநாதரை த்தரிசனம்பண்ணவேண்டுமென்னும்ஆசையை அடக்கக்கூடாதவராய் பூளைப்பூவையொத்தநிலைமையையுடையபிறப்புகளால் உண்டாகியசம் பந்தம் நீங்கும்பொருட்டுபோகின்றவராய், பாளையையுடையபொலிவா கியகமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமையுற்ற தம்முடையஊரில்நின் றும் புறப்பட்ட ஆண்வாளைமீனனது எழும்பிவிளையாடும் வயல்களையு டைய சிதம்பரத்தின் எல்லையையடைந்தார்.

இ-ம்-இ-ம்-காக்கப்பிரியைரூபகதாளம்.

கெண்டாமணியாடுதுகண்டுபிணிவாடுது

| | | |
|---|---|---|
| முத்திமணிதேடுது | நாடுதுகூடுது | கெண்டா |
| பாவசமாகுது | பாவங்கள்போகுது | கெண்டா |
| ஜெனனமாறுதிகள் | மோசமுதிர்ந்து | கெண்டா |

சிந்து.

கெண்டாமணியோசை காதில் கேட்குதென்று ரதைப்பார்க்கவெ ன்றே கொண்டாட்டமாகிவந்தார் கையைக்கும்பிட்டேன்னமக்கும்பிட்ட தோவென்றேமனமகிழ்ந்தார் தெருவீதியிலேவந்து காதலுடன் கண் டார்களையாறி இருகண்களிலானந்தம்பொங்கிடவே நின்றார் மதிற்புற த்தே வெகுநேர்த்தியென்றுரிதைப்பார்த்ததில்லை பணிந்தார்பாவசமா ய்நல்லபாக்கியசாலிகளாகுமென்றார்இதுதானே தில்லைப்பதி.

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்டு ஆனந்தானுபூதியைச்சொல்லுகிறார்.

கி-ம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி,

தில்லைத்தலத்தைக்கண்டார் அதிசித்திவிலாசமென்றார்-அந்த
எல்லையிலேறிநின்றார் மனதேக்கமாகக்கொண்டார்
இருகண்கள்நீர்வடித்தார் கொடுங்காமமலையறுத்தார்

இருகையைத்தூக்கிக்குவித்தார் தன்காலைக்கோணிக்குதித்தார்-இந்த
ஐம்புலன்களைமறந்தார் பரமானந்தக்கடலுறைந்தார்
தனதேகபாவமறந்தார் தில்லைச்சிவனேயென்றிருந்தார்

கி-ம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

இதுதானோதில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோதில்லைத்தலம் இது

அதுவோஇதுவோவென்றுஅலைந்திடும்பேயனைக்
கதிதருவேனென்றுகைகாட்டியழைக்குது இது

காசினியிலிதைக்கயிலையென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயுண்டுபேணிப்பார்த்தறிகிலேன் இது

வசனம்,

நந்தனார் தில்லையைக்கண்டு கொண்டாடுவார்.

கி-ம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்,

வசனம்,

தில்லைதில்லையென்றார்பிறவி இல்லை இல்லையென்று மறைமொழியும்

தொல்லைதொல்லையென்றகொடுவினை
வல்லைவல்லையென்றகலுந்திருத் தில்லை

கற்றோங்கற்றோங்களங்கமறிந்திட
பெற்றோம்பெற்றோம்பேசாப்பெருமையி
லுற்றோமுற்றோம்பொன்னம்பலத்தில்
தத்தோந்தத்தோமென்றுநடனமிடும் தில்லை

வாடிவாடிமாலயனீசருக்கும்
கூடிக்கூடிக்கொண்டல்லும்பகலும்
தேடித்தேடித்திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோபாலகிருஷ்ணன்தொழும் தில்லை

துண்டா-௩-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி,

இதுவோதில்லைச்சிதம்பரக்ஷேத்திர மீசனிருப்பிடமோ
மதுரம்பொருந்திடும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம் வாழும்பெரியிடம்
பதவிபெருந்தொண்டர் பணிந்து வருமிடம்
பரதெய்வமுமல்லில் பாதியிலுறுமிடம்-இது

௪-ம்-௩-ம்-பியாகுருபகசாளம்,

ஆடுஞ்சிதம்பரமோ வையன்கூத் தாடுஞ்சிதம்பரமோ

ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள் (ஆடுஞ்)

ஆருமறியாமல் அம்பலவாணர்
சீரடியார்பார்க்கச் சேவடிதூக்கியே (ஆடுஞ்)

பாலகிருஷ்ணன்போற்றும் பானுமதிச்சடையினர்
தாளமத்தளம்போட தாதெய்தாதெய்யென்று (ஆடுஞ்)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தில்லையைக்கண்டபோதே தெளிந்ததென்னுள்ளமெல்லாம்
பல்லூழிகாலஞ்செய்த பாழ்வினைதொலைந்துபோச்சு
நல்லருள்நடனங்கார்க்கும் நாயகனார்சிற்சபைக்கு
சொல்லுவார்மகிமைசெப்ப சேடனாலாகாதென்று.

வசனம்

இப்படியே தில்லையைக் கொண்டாடி தில்லையைப் பாராதவரே பாவியென்பார்

கீர்த்தனம்-௩-ம்-சவாயி-சாபுதாளம்.

பல்லவி.

மார்கழிமாதத்திருவாதிரைநாளையில் வந்துசிதம்பரதேசிகனை
பாராதபாவிகட்கேதுமில்லையிந்தப் பாரில்வந்துபிறவாதவரோ
வானிற்றெடுந்திருமாளிகைமண்டபமாவதிலுந்தில்லைமாநகரம்
காணக்கிடைக்காதஇந்தபாக்கியங்காதில்கேட்டவண்ணங்கட்ணது
ஆதிபராபரமாகியதில்லைப்பொன்னம்பலவாணர்சந்நிதியில்
நாதமுஞ்கீதமுங்கேட்குதுவானந்தநாடகவேளைநானறியேன்

வசனம்.

நந்தனார் சிதம்பரங்காணுததால் சிவலோகங்காணுமென்பார்,

கீர்த்தனம்-இம்-சாவேரி ரூபகதாளம்.

பல்லவி.

சிதம்பரம்வந்துதெரிசியாதஜென்மம்வீணென்றுபேச
மனதிலெண்ணினார்பாதகமலத்தியானம்பண்ணினார்.

பறையனுக்குமிந்தக்கலத்தைப்பார்த்தபின்புமோக்ஷபதவி
பலித்ததல்லவோபாவிஜெனனமறுத்ததல்லவோ
கொண்டுகொண்டகங்களியர்பெருமையெல்லாம்சொல்லிச்சொல்லி
துள்ளித்தாவினார்ஞானவிசையையள்ளித்தூவினார்
பூதலத்தினிலிதுவேதெய்வமென்றுநந்தனார்தக்கடல்
பொங்கிப்பாடினார்புண்ணியத்தலமென்றுதேடினார்.

கீ-ம-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

அரகராசங்கராவண்ணலேவம்பலத்தானே
நானுந்தனடைக்கலமென்று
உருகித்துதியாரோ-வானந்தம்
பெருகிப்பதியாரோ

முத்திபளிக்குந்திருமூலத்தானனைக்கண்டு
பத்திபண்ணாதவன்பாமானல்லவோ
பாருக்குச்சுமையாச்சு-அவனிருந்து
மாருக்குச்சுகமாச்சு

மங்கையர்மோகமாய்மயங்கித்தினந்தோறு
மங்களபுங்கிதமாயவரின்மேல்
கொண்டழிக்கியிழைத்தாரோ-அன்னியமாய்
நாளையுங்கழித்தாரோ

வீசுநடைநடந்தமெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்போதொருவருமங்கில்லை
தூசியும்போகாதே-காதறுந்த
ஊசியும்வாராதே

சிவசிதம்பரமென்றுதில்லைவெளியினின்று
பவசாகரமென்றுபரமபதமடையுந்
தவநெறிபொருந்தாரோ-பொருந்திய
வவலையும்வருந்தாரோ

சாத்திரங்கற்றாலுஞ்சதுர்மறையுணர்ந்தாலும்
சூத்திரம்பெற்றாலுஞ்சொன்னேன்சங்கரா

மாத்திரம்போகாதே-கருணைக்குப்
பாத்திரமாகாதே

சரணாகதியென்று சார்ந்தடிபணியாமல்
வருணாஸ்திரம்விதி வழுவாதிருக்கினுஞ்
ஜனனாதிகள் விடுமோ-சரவண
மனனாதிகள்படுமோ

அஷ்டசித்திகள்பெற்று ஆண்டாயிரங்காலம்
மட்டிருந்தாலுமென்ன மரணபயமெய்திலா
நஷ்டஜென்மமாச்சே-மனிதஜென்ம
மெட்டிவீணாய்ப்போச்சே

முப்பாழுந்தாண்டி மூலத்தீமூட்டிக்கொண்
டப்பாலேநின்று லானந்தங்காணலா
மொப்பாரிலலையடா-ஊடுருகி
நிற்பாரில்லையடா

ஆலமிடறடக்கி யம்பலக்கூத்தன்கோ
பாலகிருஷ்ணன்தொழும் பரமசிவனேயென்று
பாடிப்படியாரோ-பருவத்தில்
தேடிப்பிடியாரோ

வசனம்.

நந்தனார் சிவபக்தி பண்ணாதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-சாப்புதாளம்.

வானோர்புகழுந்தில்லை வனநாதர்வாழுஞ்
ஞானசபையைப்போற்றி நமச்சிவாயவெனறு
சொல்லாதவன் கல்வி கல்லாதவன் வெகு பொல்லாதவன்

காசினிபுகழ்சிவ காமிவல்லியைக்கண்டு
பாசமகலும்நெறி பாராதவன்சுத்தப்
பதராச்சு ஆட்டினதராச்சுகிருமிக் கெதிராச்சு

ஆட்டுக்காலைச்சற்றே கேட்டுவாங்கியுள்ள
காட்டிக்கொள்ளாதவன் மாட்டுக்குவமையென்று
நாடாரோகண்டு கூடாரோஎன்றுந்தேடாரே

அம்பலவாணனை யருகில்வந்தணுகையால்
கும்பிட்டிறைஞ்சாத குருடர்களுக்குத்திற
  மதியேதுபரகதியேது பண்ணும் விதியேது
நாக்கிருந்துஞ்சிவ நாமத்தைநவிலாமல்
சாக்குப்போக்குப்பேசுஞ் சண்டியவனைக்கால
  னடியானேகட்டிப்பிடியானே கையாலிடியானே
வேதாகமநூற்களை விரித்துணர்ந்தாலு
மேகாந்தபக்தியென் றில்லாதவனுள்ள
  முருகாதுகள்ளங் கருகாதுவெள்ளப்பெருகாது
ஆத்திமதியுஞ்சடை யழகனடியவரைப்
பார்த்துகளிக்காத பாவிமனிதர்க்கொன்றும்
  பலியாதுவினைசலியாது சிவம்பொலியாது
பாலகிருஷ்ணன்சேடும் பாதரசத்தைக்கண்டு
சீலமுடனேயுண்டு செபிக்காதவன் துன்பம்
  துலையாதுயின்பம் நிலையாதுஜன்மம் கலையாது

வசனம்.

சிதம்பரம்பாராத கண்படைத்தாரை முகத்தைக்கெடுக்கவந்தபுண் படைத்தாரென்று சொல்லுவர்.

கீர்த்தனம்-இ-ம் ஆனந்தக்களிப்பிலே-ஒருபோகம்.

காணாதகண்ணென்ன கண்ணே
  வீணானகண்மயிர்க்கண்ணது புண்ணே (காணா)
சொல்லும்பொருளிறந்த துரியவடிவதாகி
  யல்லும்பகலுமற்ற வானந்தப்பேரொளி (காணா)
பசியாமருந்தளிக்கும் பரமாகசிவசத்தி
  லசையாமலேயாடு மம்பலநாதனைக் (காணா)
ஊராருமறியாம லொளிகண்டுபிசகாமல்
  ஈராறுகாற்கொண்டு எழும்பியவண்டபம் (காணா)
அண்டத்துளடங்காத வாசைவலையைப்பூட்டி
  பிண்டத்துளடங்கிய பேரின்பதெய்வத்தைக் (காணா)
நாசிநடுவிருந்து நாதனைதானென்று
  பேசாமற்றுனிற்கும் பெருமையையொருநாளும் (காணா)
என்னையானறியேனென் றிகழ்ந்திடும்பேயனைத்
  தன்னுந்தனியனுக்கித் தருவனென்றழைத்தானைக் (காணா)

சோற்றுந்துருத்தியிதைச் சுமந்ததினாலென்ன
ஆத்திமதியுஞ்சடை யழகனமருங்கோயில் (காண)
சிலங்கமலமுங்குச் சிவகாமிமனமகிழ்
கோலக்கனகன்றில்லைக் குழகனுடியகூத்தைக் (காண)
பாலகிருஷ்ணன்றொழும் பாதத்தைப்பணிந்தொரு
நாளும்மறவாத நலமிக்கவழிதேடி (காண)

வசனம்.

பத்திபண்ணுநவன் முத்திபெறுவனென்றுசொல்லுகிறார்.

கீர்த்தனம்-இம்-தெண்டகம்-ஆதிதாளம்.

வேதம்படித்தும் சாஸ்திரங்கற்றும் மெய்யினில்நீறுபூசுவதும்
ஆதிசிதம்பரதேசிகன் திருவடிக் காளானலன்றுனந்தம்
உடனேதுலைபும்பவபந்தஞ் சொன்னேன்சொன்னேன்சொன்னேன்
ஊணுறக்கமுதலாகியநான்கு முண்டேயுலகில்யாவருக்கும்
ஆணவமலநீத்தார்களறிவா சகத்தைச்சுருதிக்கொள்ளுவாரே
ஜகத்தைப்பொய்யாத்தள்ளுவாரே சொன்னேன்சொன்னேன்
அருந்தவமுனியாகிலும்நல்ல ராசைபொல்லாதறியாரோ
வருத்தப்படுத்திமெனைமயங்கி னைத்திமென்னமயங்கோசம்
உற்றுப்பார்த்தாலதுநேசம் சொன்னேன்சொன்னேன்
அரவணைகோபாலகிருஷ்ண னல்லும்பகலும்பணிந்தேற்றும்
திருவடிசரணாகதமென்றெண்ணித் தெளிந்தார்களன்றோபாபக்தி
ஒழிந்தாராக்கன்றோவாமுத்தி சொன்னேன்சொன்னேன்

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்,

இப்பரிசாயிருக்கவெனக் கெய்தலரிதென்றஞ்சி
யப்பதியின்மதில்ப்புறத்தி ஹூருதபெருங்காத
லொப்பரிதாம்வளர்த்தோங்க வுள்ளுருக்கிக்கைதொழுது
செப்பரியதிருவெல்லை வலங்கொண்டுசொல்லுகிறார்

வசனம்.

இந்தப்பிராமணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க, எனக்கு அவ்விடத்திற்குப்போகுதலரிதென்று பயந்து அந்தஸ்தலத்தின்ம

இலின்புரத்தில் அளவற்றபேரன்புசமானமில்லாயல் வளாமனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையைவலஞ்செய்துகொண்டுபோவார்.

விருத்தம்.

அம்மையார்தில்லைமாநகர் மருங்கிடையணிந்து
சும்மைபிட்டுவிழிதனில் நீர்ச்சொரிந்து
விம்மியேசிவனார் சரிதங்களைவிரித்துக்
கொம்மைவிட்டவர் பாடியுமானந்தங்கொண்டார்.

வசனம்.

நந்தனார் தனக்கிந்தபாக்கியங் கிடைத்ததென்று கொண்டானடிக்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

கொண்டானடிக்கிறார்தில்லைக்கோயிலைக்கண்டுதாவித்தாவி (கொ)
அண்டாண்டந்தொழு மம்பலநாதனைக்
கண்டாரைக்கண்டுகொண் டோமென் றானன்றாய் (கொ)
அஞ்சலிகொண்டுகதித்து அரகாவென்றுஜெபித்து
குஞ்சிதபாதத்தைத்துதித்துக சூரவைகள்பாடிக்குதித்து (கொ)
அங்கம்பரவசமடைந்து ஆனந்தக்கடலெழுந்து
பொங்கிச்சிவமென்றறிந்து புவியதிர்ந்துபணிமிகுந்து (கொ)
இருகண்ணில்நீர்பெருக இறைஞ்சியனாடுருக
அருமைச்சிவன்கதிதருக அம்பலவாணன்வருக (கொ)

இதுவுமது.

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்

பல்லவி.

கொண்டானடித்தாரோ நந்தனார்-கோயிலைக்கண்டு
கொண்டானடித்தாரோ நந்தனார்

அநுபல்லவி.

அண்டர்மகிழ்ச்சியாலே அரனேயென்றுமென்மேலும் (கொ)

சரணங்கள்.

பண்டுகான்செய்ததே யோகம்-அதனாலுருக்
கொண்டுவந்தேன்பாரிட தேகம்-ஆச்சேயித்தப்
புண்டரீகப்பதவை போகம்-கண்டேனென்போல
பண்ணிலவர்க்குளதிப் போகம்-என்றுதுதித்துக்

கொண்டாடுமிவர்புகழைக்
கூறுவதுமேயுற் சாசம் (கொ)

வஞ்சமனத்தையொரு மித்து-வினைத்தொழுக
பஞ்சபாதப்பயே ெடுத்து-வுழுத்தர்களைக்
கெஞ்சியவர்களை யடுத்து-வுழலாமலே
கஞ்சமலர்ப்பதங் கொடுத்து-ஆண்டருளென்று
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் துதித்துக் (கொ)

ஒருநாற்புறமதிற் ஜொலிக்க-வெல்லைசுற்றி
வருவார் திரும்புவார் களிக்க-சிரசின்மேலே
இருகைகுவித்துவாள் வளிக்க-நடேசரைத்
திருநாளைப்போவார் மிளக்க-வாகையாலிந்த
பேதமில்லையே யுரைக்கக் (கொ)

வசனம்.

இப்படிவீதியைச்சுற்றிசந்நிதியில்வந்துஅடியற்றபனைவிழுந்தாற்போலுடல்படியப்பணிந்து புழுதிபடப்புரண்டு ஆனந்தமடைந்துநிர்த்த சபை தெரிந்து தெரிசனம் பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம-லாவணி-ஆதிதாளம்.

சபாதெரிசனங்கண்டான்நந்தனுஞ் சுபாவமுடனேநின்றான்
சபாதெரிசனங்கண்டான்கனித பிரபாவமாகியசபாபதியிருக்கும்
சதாகாலமும்வேதங்கள்மொழிந்திடுஞ் சிவாகாரமாய்செழித்துவளர்ந்தி
தில்லைமூவாயிரமுனிவர்கள்கூடி மல்லும்பகலுமவாவர்நாடும் [டும்

வசனம்.

தெற்குவீதியினின்று சபாபதியைத் துதிபண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம-செங்கலா-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயஜயெதீசா அதிசுந்தராஞ்சிதபாதா ஜெயஜெபதீசா
தில்லையைக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையில்நின்றே னினிப்பிறவேன்காண

எனக்கினிபாரீடு கரும்புபோலினிக்குதுபார்விடு
    ஆசாபாசத்தைவேறே வெட்டுமோனத்தத்தின்முழுக்காட்டு
வைக்குமிதுயாருக்குங்கிடையாது இந்தசுகம்பாருக்குளிணையேது
    சாணாகதமென்றிங்கேவந்தேன் சாமிபராச்கு
உமையடைந்தேன் ஜெனனாதிகளான் மிகநொந்தேன்
    வேறொருதெய்வங்களைவருந்தேன் (ஜெய)

தென்றிசைக்கோன்வந் தழைத்திடும்வேளையில்
    பெண்டுபிள்ளைகள்குன்றோட்டம்
ஓடத்திலேறியபெருங்கூட்டம்
    நானும்நமனுந்திண்டாட்டம் ஒ நம்பிக்கைநாரும்
நானுனக்கருள்புரிந் தானேவேனென்று
    கனவிலாகிலும்வாருந் தட்டியெழுப்பிக்கவலைகள்தீரும்
அடிமையென்றுமனதுமகிழ்ந்துபாரும்
    தில்லைவெளியில்வருவரோசேரும்ஒம் (ஜெய)

ஆகரசங்கானேபொன்னம்பலத்தாண்டவனே
    பரமதயாமூர்த்தி யென்றடிபணிந்தேன்மனங்குளிர்ந்தேன்
ஜாதியிற்சின்னவனானுல்முன் வீதியில்வந்தேனாகாதே
    பாதகஞ்செய்யினுஞ் சிதம்பரமென்று
பகர்ந்தால்மழவினை போகாதோ
    தீதில்லாதபெருந் தவத்தோர்வந்தால்
தெரிசனைசெய்தேன் போதாதோ
    ஆதிபராபரமாகியிவனைக்கொண்டாடுவேன்
பாடுவேன் தேடுவேன் நாடுவேன் (ஜெய)

அபசாரமாகியசமுசாரம் சதாவிஷபகாமாதிகோரம்
    உபாயமறிந்துசதாயேறப்படாததுஜெகதீசாமாயா
விலாசகற்பிதமிந்தஜெகம் அனேகசஞ்சிதவாசனைகள்
    சிவலோகமென்கிறபாவனையால்நிவாரணம்பெரியோர்கள்
பண்ணியதொழிலிற்பயனறிவார் பாலகிஷ்ணன்தொழும்கழலை
எண்ணியபடியெதவமுறுவார் எனதுனதென்னுமுறையிடுவார்
சமாதிபண்ணியகர்மமாதிகிருந்தி யடாதேபேதைகைவிடாதேயும்
    சபாபதிவெகு கிர்பாநிதியுன்
பிரதாபமறியேன் அபாவப்பறையன் (ஜெய)

## விருத்தம்.

வாட்டுவாருடல்வேர்படசழலிடைவருந்தி
மூட்டுவார்மூலக்கனல் மதிமண்டலமுகடடில்
மாட்டிறைச்சியருந்திய புலையன்றன்மனத்து
ளாட்டுக்கால்சற்றே தந்திடுமம்பலத்தரசே.

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான் காபி-ஆதிதாளம்.

## பல்லவி.

தாதாதாரீயாடியபாதம் தத்தித்தெய் தத்திக்கெய் யென்றாடியபாதம்
ஆதாரவாகபதஞ்சலிமாமுனிக் கானந்தநாடகமாடுந்திருவடி
ஆகமவேதபுராணங்களோதிய யோகிகளாலேதேடும்திருவடி
சிந்தைமகிழ்ந்துகுவிந்திடவேதிய சுந்தராஞ்சிதகுஞ்சிதபாதம்
பாரளந்திடுகோபாலகிஷ்ணன் துதிப்பாடிப்பாடிப்பணியும்பாதாசம் தா

வசனம்.

நந்தனார் பிறவிப் பிணிக் கஞ்சித் துதி பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

அம்பலவாணுயுன் சரணமடைந்தேனுனேழை
ஆதரித்தாளுவதுன்பார மல்லவோசொல்லவோ
எடுத்திடுஞ்ஜனனங் கணக்கெழுதத் தொலையாதென்பாடு
இன்னமும்பிறந் திடுவேனோநடேசனேயீசனே
ஆசையெனும்பெருங் காட்டிலேயாற்றுமுழுமூடன்
அகலவிடாதேயும் நம்பினேனென் னையனேமெய்யனே
பாரளந்தனோ பாலகிருஷ்ணன் பணியுமலர்ப்பாதம்
பாவியென்னுள் ளூறவேகருணை பாருமேவாருமே

வசனம்.

அம்பலத்திலாடும் நடனத்தை வர்ணித்துச் சொல்லுவார்.

கீர்த்தனம் இ-ம்-சங்கராபரணம் ரூபகதாளம்.

## பல்லவி.

ஆடியபாதா இருவர்கள் நாடும்வினோதா

## அனுபல்லவி.

ஆடியபாதா வயனுமாலுந்தினம்
தேடியுங்காணுமற் றிசைமறவாக
திந்திந்திந்திந்திந்தெனை ஆடிய

வீரவெண்டையஞ்சிலம்பசைந்திடமேவுஞ்சடையும்புலையன்
சாருந்தொண்டர்கள்மனங்கவிழ்ந்திடசாலோகாதிபதவியுந்
தந்தோந்தந்தோந்தந்தோமென்று (ஆடிய)
வேதமுனிவர்கள்பாடவுஞ் ஜனகாதியோகிகள்
வெகுநாதமெங்கினுமூடவுந் திருநந்திமத்தளம்போடவுந்
தகுந்தகுந்தகுந்தகுமென (ஆடிய)
பாலகிருஷ்ணன்துதிகள்செய்திடப் பண்ணவர்கள்பூமாரிபெய்திட
சீலமுள்ளசிவகாமிமகிழ்ந்திடத் திருச்சிற்றம்பலததாசனுந்
தாந்தாந்தாந்தாந்தாமென்று (ஆடிய)

வசனம்.

நந்தனார் அடிமைத்திறங்காட்டிச் சொல்லிவாரூர்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

அறிந்தறியாமலே செய்ததபராதமையாஎன்னை
ஆண்டவனேதில்லைத் தாண்டவங்கள்கடந்திடு மத்தாவுன்சரணம்
பருகியவண்டபகிரண்டவாரபா அடிமைவுன்சரணம்
நடுவுமாதியுமந்தமுமென்றுமிலாதபிராமனேசரணம்
பொங்குமானந்தக்கடலேவெளியேயறிவின்னறிவேவுன்சரணம்
என்றுமநிஷ்களநிற்குணரூபா வுன்சரணம்
கருதிநின்மகிமைகண்டதோரியாதளிரியேனுன்சரணம்
எள்ளுக்குளெண்ணெய்போலெங்குங்கண்டமதாகுமீதாவுன்சரணம்
யானேவெட்டிநண்டுமறியாதவன் கனகசபேசாவுன்சரணம்

வசனம்.

இப்படி யனேகவிதமாய் கொண்டாடி யுட்புகுந்து தாண்டவம் பாராதகுறை கொண்டு சுவாமியை நான்உள்ளே வரலாமோவென்று கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி.

வருகலாமோவையா-உந்தனருகில்நின்று கொண்டாடவுநான்

அனுபல்லவி.

பரமகிருபாநிதியல்லவோ இந்தப்பறையனுபசாரஞ்சொல்லவோ
உந்தன்பரமானந்தத்தாண்டகம்பார்க்கவே நானங்கே (வருக)

பூமியில்புலையனாகப் பிறந்தேனே-நான்
புண்ணியஞ்செய்யாம லிருந்தேனே
சாமியுன்சந்நிதி வந்தேனே-பவ
சாகரத்தையு மிழந்தேனே
கரைகடந்தேனேசரண மடைந்தேனே-தில்லை
வாசராப்பிரதாபமும் பாபமுந்தீரவே(வரு)

வசனம்.

இப்படித் திருநாளைப்போவரென்னுங் கீர்த்திபெற்ற நந்தனார்தில்லையில்வந்து கொண்டாடும் பத்திமார்க்கத்தை ஆதிசேஷனால்வர்ணித்துச் சொல்லப்படாதஞானபக்தி வைராக்கியசாஸ்திரங்கள் குடியிருக்கும் ஊரின்பேர்சொல்லக்கேட்டறியாத பேதையாகியகோபாலகிருஷ்ணனென்னும் பெயர்கொண்டவென்னால்சொல்லத்தருமானதோ உளறிக்கூறியதால் பெரியோர்கள் பிழைபொறுக்கக் கடமையென்றுசொல்லி வணங்குகின்றார்.

சிந்து.

இதுதானோ தில்லைப்பதி யென்றுளக்களித்தாராடிக்கொக்கரித்தார்-ஐயாவுன்சந்நிதியைக்காண ஆசைவைத்தேன்மிகநேசமுடன்- தெருவில்பொடித்தூளை அள்ளித் தேகமுழுதிலுந் தாகமுடன் - தரித்தார் திருநீறாய் நாலு சாஸ்திரவேதங்கள் பார்த்துணரும் - பெரியோரிருக்குமிடம்.

வசனம்.

நந்தனார் அந்தத்தில்லைத்தலம் இப்படி யிருக்குமென்று சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-செந்தகமிக்கா-ஆதிதாளம்.

கண்டகம்.

ஆகமங்கள்வேதியர்கள்சிவ னடியார்கள்கூட்டம்-சம
தேகமாகிப்பயோதுவிளைகின்ற யோகிமுனிகளுட்டம்-பூ
லோககைலாசமென்றதைப் போற்றுவார்களாட்டம்-அதி
வேகமாகவெங்கேபாகிலும் வெளியேபோகவேணுமையே
இங்கிருக்கலாகாதையே இங்கிருக்கலாகாதையே
பாவிப்பறையனிங்கேவாலாமோ சுவாமிதரிசனஞ்சாலாமோ

யிசூ

பாதகமலங்களைத் தொடப்போமோ
பாவமெனைப்பிரிந்து தொலைப்போமோ
இங்கே ஆகாதாகா தையே
வேள்விசெய்யும்புகைமேலுலக மெழும்பிபோகுதையே
புண்ணியவான்கள்புரியுந்தவம்
அரகரசிவனென்று ஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடன்ரனைப்பிரதக்ஷணம்வருமிடம் ஆகாதாகாதையே
மணியாடுதுவெகுஜனங்கூடுதுவீதிவலமாகுது திருப்பதம்பாடுது
உள்ளேடமாடுதுபணிவிடைபோகுது பரவசமாகுது
மெத்தபயமாகுது இங்கே ஆகாதாகாதையே
தீண்டாதேஇங்கேவேண்டாதேசும்மா இரையாதேஇங்கேதரியாதே
என்னைப்பாராதேபடியேறாதேஉள்ளே போகாதேவரலாகாதே
யென்பார்ஆகாதாகா தையே

சிந்து.

பெரியோரிருக்குமிடம் இந்தப்பேயனிருப்பதுஞாயமல்ல-நானே பறைச்சாதியில்லை நாதன்றெரிசன மாதரவாய்-பண்ணுப்படுபாவி இந்தப்பாரிலிருப்பது சாலவே-என்றேகுளத்தோரம் சுத்தி ஏங்கிநின்றார் துயர் நீங்கிநின்றார்-ஐயாப்பெருங்கவலை கொண்டு உள்ளங்குழைந்திட வெள்ளமெனக்- கண்ணீர்கரைபுரள இரு கைதொழுதாலவர்மெய்தொழுதார்-கீழேபுரண்டழுதார்.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செல்கின்றபோழ்தந்தத் திருவெல்லைபணிந்தெழுந்து
பல்குஞ்செந்தீவளர்த்தப் பாலில்வேள்வியெழுபுகையு
மல்குபெருங்கிடையோதுங்கி மடங்கணெருங்கினவுந்தன்
டல்குந்தகுலநினைந்தேயஞ்சி யிடைந்திவர்நின்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துக்குப்போனபொழுது அதினெல்லையைக்கண்டு நமஸ்கரித்துஎழுந்துவிருத்தியாகச்சிவந்தஅக்கினியை வளர்த்தி ஆகுதிசெய்கின்ற யாகத்தால்உண்டாகிய புகையுமிகுந்தபிராமணப்பிள்ளைகளின் நான்குவேதங்களை ஓதும்படியாக அடிக்கடிநெருங்கியிருக்கும் மடங்களையுங்கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தை நினைந்துஉள்ளேபோவதற்குப்பயந்து போகாமல்நின்றுவிட்டார்.

## இதுவுமது-விருத்தம்.

நின்றவரக்கெய்தரிய பெருமையினைநினைப்பார்முன்
சென்றவையுங்கடந்தூர்சூழெயிறுவாயிலைப்புக்கார்
குன்றனையமாளிகைக டொறுங்குலவுபவேதிகைக
ளொன்றியமூவாயிரதங் குளவெண்பாராகுதிகள்.

## வசனம்.

எல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார்தான்உள்ளேயடையக்கூடாத அக்கோயிலின்பெருமை நினைப்பாராகி முதலில்அந்த எலலையைக்கடந்து ஊரைச்சுற்றியிருக்கும் மதிலின்திருவாசலையடைந்தார் அங்கேதிண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும ஓமங்கள்செய்யப்படுகின்ற தென்றுசொல்லிக்கொள்ளுவார் சுவாமியைப் பூசிக்கிறதில்லை மூவாயிரவர்களுடையவீடுகள்மாளிகைகள் மூவாயிரமென்றூர் வேதவிதிப்படியாகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியிலே தாம்போகக்கூடாதபடியால்அதைநினைந்துதங்குலத்தை இகழ்ந்து இருக்கலாகாதென்று அவ்விடம்விட்டொருகுளத்தருகில்வந்து சுவாமியைப் பாராத ஜென்மமேன் படைத்தேனென்றுதாழப்புரண்டழுவார்.

## கீர்த்தனம்-இ-ம்-சரசாங்கி-ரூபகதாளம்.

பல்லவி,

இந்தச்சடலம்வந்தவா றேதென்றறிகிலேன்நானேதென்றறிகிலேன்

அனுபல்லவி

சந்ததமும்தில்லை யம்பலத்தானை
சிந்தித்துமாயச் சிணுக்கறுக்காமல் (இந்தச்)

சரணங்கள்,

அங்கமலங்களைப் போக்கியேசிவ
கங்கையிலாடிக் களங்கமறாமல் (இந்தச்)

ஆடும்நடனங்கண் டானந்தமாகிப்
பாடிப்படித்துப் பணிந்துகொள்ளாமல் (இந்தச்)

அஞ்சக்கரத்தை யெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவி மயக்கறுக்காமல் (இந்தச்)

பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைத்கும்பிட்டு
சீலமுள்ளமூத்தி சித்திபெறாமல் (இந்தச்)

கீர்த்தனம்-இ-ம்-தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி.

கனகசபாபதி தரிசனம்ஒருநாள் கண்டால்கலிதீரும்

அநுபல்லவி,

ஜனகமகாமுனி கைதொழுதேத்திய தினகரகோடிதேஜோன்மயமாகிய

சரணங்கள்.

மனதிலொடுங்கிய கல்மிஷம்போக்கும்
மாயப்பிறப்பறுத்து மறுவடிவாக்கும்
ஜனனமரணசமூ சாதத்தைநீக்கும்
திருவடிநிழலிலே கூட்டியேகார்க்கும்(கன)

சுருதிமுடிகளில் சொல்லிக்கொண்டாடும்
துய்யவெளியையொளி யாகவேகூடும்
தருமநெறியுந்தவ ரூதுளநாடும்
ததிங்கணத்தோமென்று தாண்டவமாடும்(கன)

பற்பலயோசனை செய்வதுந்தொல்லை
பாகதியடையவு பாயமுமில்லை
அற்புதமாகவே தானொருசொல்லை
அணியுங்கோபால கிருஷ்ணன்பணியுந்தில்லை(கன)

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

கட்டைகடைத்தேறவேணுமே கனகசபாபதிநடனங்
கண்டுகளிக்கவந்த இந்தநந்தனார் (கட்டை)
கட்டைகடைத்தேற வொட்டுமோஜென்மம்
கெட்டதல்லவோ இஷ்டமறியேன் (கட்டை)
முத்தியிலளிக்கும் பத்தியிலென்ன
சிற்றம்பலவன் சித்தமறியேன் (கட்டை)

வசனம்.

தேகம் படைத்தால் சிவபத்திபண்ணவேணுமென்றுநந்தனார்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

தேகம்வந்தவாறு சொல்லவோ-சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்பதற் கல்லவோ
இந்தவிஷயசுகத்தை நாடுமே-பாவிமனக்குரங்
கிருப்பிடங்காணுமே லோடுமோ
இல்லைத்தலத்தைக்கண்டு மாச்சுதே-உள்ளேசென்றுநடன
தெரிசனம்பண்ணாமல் போச்சுதே

பறையனென்றஜென்மம்   போகுமோ-பாழ்வினையாம் பின்னம்
பாரில்வந்துபிறக்க   லாகுமோ
அடிமையென்றுவந்தே   னுய்யுமோ-ஒன்றையுநானறியே
னம்பலத்தெய்வமென்ன   செயயுமோ
பார்த்தெல்லாமழிந்து   தோணுமோ-கோபாலகிருஷ்ணன்
பணியும்பரமசிவன்கருணை   வேணுமோ

வசனம்.

சிதம்பரதெரிசனங் கண்டபேர்க்கு ஜென்மம் இல்லையென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-ரூபகதாளம்.

பல்லவி,

தெரிசனக்கண்டவர்க்கு மறுஜென்ம   மில்லை
வரிசையுடனம்பலவன் வாழ்கின்ற   தில்லை(தெரி)

சரணங்கள்.

இரவுபகலிடைவிடா தேகாச   பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கும்   நத்தி
பரவிவருமானருளாலணிமாதி   சித்தி
பணிந்துவந்துசிற்றம் பலத்தைவலம்   சுத்தி(தெரி)

சொர்ப்பமென்றிவ்வுலகம்தோன்றிவரும்   வேதம்
சொன்னததுநின்படியாகும்   போதம்
அற்புதமிர்தங்கமோடு தாளவகை   கீதம்
அனவரதத்திருநடன மாடிவரும்   பாதம்(தெரி)

அல்லும்பகலோயாது அடியார்கள்   கோஷ்டி
அரகராவென்றமிர்த பானமதைக்   கூட்டி
தில்லைவாழந்தணர்கள் கைபிடித்துக்   காட்டி
சிக்கெனவேதிரைத்திறந்து பரவெளியைக்   காட்டி(தெரி)

நஞ்சுண்டகண்டனுக்குக் கொன்றைமலர்   சாற்றி
நல்லதிருச்சாந்தணி அம்பிக்கையைப்   போற்றி
குஞ்சிதவத்தந்தமது மனதிலுற   வேற்றிக்
கோபாலகிருஷ்ணன்தொழும் நடராஜ   மூர்த்தி(தெரி)

வசனம்,

தனக்கு தெரிசனங்கொடுக்க அம்பலவாணர் எப்போதுவருவாரோவென்று விசாரப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி.

பல்லவி.

எப்போவருவாரோ எந்தன்கலிதீர எப்போவருவாரோ

எப்போவருவாரோ எந்தன்கலிதீரச்
செப்பியதில்லை சிதம்பரதேவர் (எப்போ)

கற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்றக் காட்சிதந்தாள (எப்போ)

அற்பசுகவாழ்வி லானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன் பொன்னம்பலவாணன் (எப்போ)

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

வருவாரோ அருள்-புரிவாரோஎந்தன்
மனதுசலிக்குதுநா னென்னசெய்வேன்
அரகரசங்கர வம்பலவாணனே
ஆதரிக்காதிருப்பாரோ ஒருக்கால் (வரு)

வசனம்

நான் சின்னஜாதியானதால் வருவாரோ வாராரோவென்றுஞ் சஞ்சலப்படுவார்.

கீர்த்தனம்-இம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வாராமலிருப்பாரோ ஒருக்கால் வருவாரோவடியேன்

பாராமலிருப்பாரோ பதஞ்சலிமுனிக்குப்
பாதங்கொடுத்த ஈசனுமென்று (வாராம)

கனவினில்வந்து கழனிமுழும்நட்டு
மனதுமகிழ்ந்துமென்னை வாவென்றுசொன்னவர் (வாரா)

களங்கமறவேஅவர்காலுக்குக்கும்பிட்டு
குளத்தங்கரையில்நின்று கூப்பிடும்வேளையில் (வாரா)

அல்லலறுத்துப்பர மானந்தமேதரும்
தில்லைத்தலத்தைக்கண்டு தெரிசனம்பண்ணியும் (வாரா)

வசனம்.

இதுவரையில் வாரதபடியினால் இனிமேல் தில்லைத்தலத்தை விடாமல் சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம் பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதி,-தாளம்

பல்லவி.

இன்னம்வரக்காண்கிலேன் என்ன செய்குவேனவர் (இன்)

இன்னம்வரக்காணிலேன் தில்லை பொன்னம்பலவாணன் பண்ணையும்
நட்டென்னையுமிங்கேவாவென்று சொன்னவர்மறந்தாரோ (இன்)
சொல்லும்பொருளுநிந்தச் சோதியேமகிழ்ந்துவாழும்
தில்லையைவிடாமற்சுற்றித்தேகத்தைமாற்றிக்கொள்வதானல்லது இன்)
பாலகிருஷ்ணன்போற்றும் பாதச்சிலம்புகுலுங்கக் கோலமுடன்
நடனங்கண்டேன் குறைகள்தீர்ந்தென்றுசொல்லவுந்தான் (இன்)

வசனம்,

இப்படிச் சொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து புரண்டழுவார்

சிந்து.

கீழேபுரண்டழுவார் என்றுங் கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலைகுனிந்தார் எந்தன வேதனையைக்கண்டு ஆதரிக்கும்
தெய்வங்கிடையாதோ பாவி சித்தந்தெளியவிர்த்திருந்து
வாவென்றழையாதோவிண்ணில்வானவர்கள்போற்றுமூனமிலாக்
கனகசபைநடனங் கண்டு காயங்களித்திடநாயடியேன்
வருந்தித்தகியேனே எந்தன்வாணுளுருகுதுவிணையே
அடடாஇதென்னஜென்மம்.

வசனம்,

இப்படி புரண்டழுது தான்படுகிறதுன்பத்தைக்கண்டு ஆதரிக்கும்படியான தெய்வம் எங்கும் கிடையதோவென்றும் இருந்தால்வந்துஎன்னையாதரிக்காதாவென்றும்என் மனது குளிர ஒருவார்த்தை சொல்லாதாவென்றும் மேலாகிய தேவர்கள்போற்றும்படியானவனேஎன்னுடையதோசதிரத்துக்கிரங்கிவரக்கூடாதா வென்றும்உனதுநடனசபைக்கு என்னையழைத்துப்போய்க்காட்டி என்னுடையஇழிவானகுலத்தைமாற்றக்கூடாதோ வென்றும் இப்படிப்பற்பலவாறாகப்பணிந்துதுன்பசாகரத்திலாழ்ந்தார்.

விருத்தம்

சாதிபேதமுங் குணக்குறியாவையுங்கள்ளி
ஆகியாதியென்றறற்றினேன் றிசைதனிலணைந்தும்

மாதவர்புரி தொண்டர்கள்பணிதிரன் மறைக்கக்
கோதிலாவுநக் கொண்டுமிப்பிறவிக்குக்குறையோ.

வசனம்

இப்படிச்சரணாகதமென்று உன்னை நம்பிவந்து துன்பப்படலாமா சிவனே சிவனேயென்று பெருங்குரலிட்டுதனக்குச் சென்மம்போதும் போதுமென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை

பல்லவி.

போதும்போதுமையா-எடுத்தஜென்மம் போதும்போதுமையா

அநுபல்லவி.

மாதவமாமனிவர்கள்புகழுந்தில்லை
வனத்திலனுதினமும்வளரும்அம்பலவாணா (போ)

சரணங்கள்,

சோத்துமெளியும்புழு வூக்கைநரம்புகளும்
ரத்தமலங்களுமூத்திரக்கும்பி (போ)
சந்தசமுமடியேன் யெந்திரம்போலே
வந்தெழுவரையிலும் நொந்துமிருந்தேன் (போ)
கொழுத்தவாணிகள்போலே மிருத்துவிரும்புமென்னை
வயிற்றிலிருந்துபடும் வருத்தமென்னசொல்வேன் (போ)
மாதர்கள்மீதினில் மையல்கொண்டேகிவிடும்
வேதனைகொண்ட வெறும்பயலானேன் (போ)
அண்ணல்கோபால கிருஷ்ணன்பணியுந்திரு
அம்பலமேவும் பொன்னம்பலவாணா (போ)

வசனம்

ஜென்மமே நஷ்டம்அதிலும் புலையனாகப்பிறப்பதுமிகவுங்கஷ்டம் என்றுநந்தனார் சொல்லுவார்.

கீர்தனம்-இ-ம்-காகாப்பிரியை-ரூபகதாளம்,

பல்லவி.

இந்தஜென்மம்வேண்டாம்இனிஎந்தஜென்மம்வந்தாலும்வரட்டும் (இ)

சந்திநடுவினில்மந்திரங்களைசொல்லி
வந்தனைகள்செய்துசிந்தைமகிழாத இந்த

வேதமறிந்தவர் பாதம்பணிந்தவர்
போதமறைந்திடாத்தீதடைந்தேன்பாவி இந்த

பாவிப்பறையனீ தூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுரைத்திடும் இந்த

கீர்த்தனம்-இ-ம்-ஆஹிரி-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் சிதம்பரத்தெல்லைவலஞ்சுற்றினார்

அநுபல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் தேவருமறியாத
எல்லைவாசல்கடந்திருளறவேண்டி தில்லை

சரணங்கள்.

சாதிக்குறையத்தானே சந்ததமுநினைந்து
வேதனைகொண்டுள்ளம் வெதும்பியேவாடி
பாதிப்பிறையணியும் பரமசிவனைக்கண்டு
போதமடைந்து பரிபூரணமாக தில்லை

மோகவலைக்குட்சிக்கி முழுமூடனாகவே
போகமேதில்லையென்று புத்திகெட்டேனே
பாகனைவேண்டுடல் பரவசமாகியே
ஏகாரத்திற்றன்னை யிருத்திட்டுச்சுகிக்க தில்லை

ஓராறுதாண்டியேயுன் மணிக்கோட்டைகள்
சீராறுகாணாத சிதம்பரரகசியம்
ஈராறுகால்கொண்டு இருத்திப்புலன்றனையும்
பேராறுபெருகியே பெருவெளிகாண தில்லை

வசனம்.

இப்படித் தில்லைத் தலத்தைவிடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சுவாமிவருவாரென்றும் மனதைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவார்மனமேநீ மயங்காதிருசொக்கேன்சொன்னேன்
வேணாதுதருவார்கருணைபுரிவார்திருவம்பலவன்
பரகதியுந்தருவார்சாதிபறையனென்றும்பாரார்நீயதை
உறுதிகொள்ளவேணும்மெய்யன்புடன்
அரகரவென்றொருதரஞ்சொன்னாலும்போதும் வருவார்

வசனம்.

தன்னைஇரட்சிக்கும்சமையம் இதுதானென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-தனுசாரி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுநல்லசமையமையா ரட்சிக்க இதுநல்லசமையமையா

சரணங்கள்.

இதுநல்லசமையமையா வென்னைரட்சித்தாளும்
ஈமமகேசநடேசசபேசா இதுநல்ல
பாலகிருஷ்ணனபோற்றும் பதங்களைக்காண
சீலமுள்ளமுத்திசேருவதற்கே இதுநல்ல

வசனம்.

இவ்வளவுசொல்லியும் இரங்காமற்போகவேண்டிய தென்னவென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

இரக்கம்வராமற்போன தென்னகாரணம்சுவாமி
கருணைக்கடலென்றுபெயர்தன் காதில்கேட்டுநம்பிவந்தேன்

சரணங்கள்.

ஆலமருந்தியண்டருயிரை யாதரித்தவனதுகீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும் பணிந்திடும்நடராஜமூர்த்தி
பழியெத்தனைநான்செய்கினும் பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர் கனகசபாபதியிப்படி.

விருத்தம்.

அண்டானதியானவையும் வேள்விகளமைத்தும்
குன்றிலாத்தலம் புண்ணியமாமலைகுவித்தும்

வின்றிடாமலேயீசன் றனக்களித்தவிவேகம்
மன்றுளாடியபாதத்திலே மனம்வருமே.

வசனம்.

மகாபுண்ணியசாலிகளுக்கு முத்திவருமேயன்றி தனக்குதவா தென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனுசாரி-ஆதிதாளம்.

சாதியில்தாழ்ந்திடும்புலையனுக்கும்பா சதியோ வேத
சாஸ்திரநான்கினுமோதறியாதது விதியோ
நண்டுகெத்தைகளைவதைசெய்தருந்திய தேகம் மன்றுள்
நடனதெரிசனங்காணவென்றாலதி மோகம்
எந்தவழியைக்கண்டேறுவது ஞானம் செக
தீசனுக்கன்றோதெரியுமந்தவு பாயம்
சிதம்பரம்போவேனென்றுரையா பாவி இந்த
ஜென்மமெடுத்துவீணாகத்தவிக்குதெ னாவி

வசனம்.

இப்படிநான் ஈனசாதியாயிருந்தபோதிலும்உம்முடையசரணாரவிந் தத்தில் வைத்தபுத்தியை மறந்தவனல்லவென்று சொல்லுகிறார்.

துக்கடா-இ-ம்-மணிரெங்கு-ரூபகதாளம்.

பல்லவி.

எப்படிகெட்டாலுந்தன் பொற்பதமறவேன்காணும் எப்படி.

சரணங்கள்.

அற்புதமாகியதில்லையம்பலவாணரேநான்
சொற்பனத்திலுமையன்றி மெய்ப்பொருளாகவும்வேண்டேன்
தப்பிதமெத்தனைசெய்கினும்
கைப்பிடித்து ஆண்டுகொள்ளும் எப்படி

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இவ்வண்ணமிரவுபகல் வலஞ்செய்தங்கெய்தரிய
வவ்வண்ணம்நினைத்தழுவ வடித்தொண்டரவர்வெய்தி
மைவண்ணத்திருமிடற்றார் மன்றுணடங்கும்பிடுவே
தெவ்வண்ணமெனநினைந்தே வேசாறிநெடுந்துயில்வார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துக்கொண்டு உள்ளே போகக்கூடாததன்மை நினைத்துவருத்தப்பட்ட உயர்வுபொருந்தியஅடியவர் வேசாறி கரியநிறமுள்ள கழுத்தினையுடையசுவாமி கனகசபையில் ஆடுகின்றகூத்தை எப்படிதரிசிக்கலாமென்று விசனத்தோடும்நித்திரைசெய்வார் இப்படிநித்திரைசெய்து மறுபடியும் எழுந்து சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-கன்டா-பியாரு-ஆதிதாளம்.

பல்லவி.

விருதாச்சென்மமாச்சேவந்தும் விருதாச்சென்மமாச்சே
சதாகாலமுமையன்சந்நிதானத்திலிருந்து நிதானம்பெறாமல் (வி

சரணங்கள்.

முத்தியளித்திடுமூர்த்தியைக்கண்டு
பத்தியைப்பண்ணிபதமடையாமல் விரு

பொற்கழலசையப்பொதுவிலிருந்து
நக்கராடும்பதந்தன்னைப்பாராமல் விரு

தில்லைக்கதிபதிதெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவென்பிறவியையறுக்கும் விரு

வசனம்.

நானுபதசிக்க யோக்கியனல்லவென்று தள்ளுவாரோ கொள்ளுவாரோ அப்படிதள்ளினாலும் தில்லையிலேதானேஎன்தேகத்தை விடுவதேயன்றி திரும்பிப்போகமாட்டேனென்று சொல்லிப் புலம்புகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி -ரூபகதாளம்.

பல்லவி.

தள்ளுவாரோஎந்தனைக் கைக்கொள்ளுவாரோ

சரணங்கள்.

தள்ளிவிட்டால்நான்போகேன் தனித்திருக்குஞ்சமையமல்ல
அள்ளிவிட்டன்பை அம்பலவாணனொருக்கால் தள்

எனதென்றபிமான பிச்சையறுநிஷ்டைபண்ணி
மனமிறந்ததுவெளியில் மருவாதபாவியென்று தள்

நானுமிந்தப்பொய்யுடலை நானென்றெண்ணிநான்சுமந்து
நானுபட்டதுன்பமெல்லாம் துலைந்ததென்றுஇங்கேவந்தும் தள்

பாலகிருஷ்ணன்தேடிவரும் பாதமலர்காணேன்
வேல்விழியார்மோகங்கொண்டு விர்த்தியறமூடனென்று தள்

## சிந்து.

அடா இதென்னசெம்மனென்று அத்தனது எல்லைசுற்றிவந்தார் இரவுபகலோயார் இவை ஈசனைகண்டு விசுவாசமுடன் பாலகிருஷ்ணன்பணியும் திருப்பாதமுள்ள தில்லைநாதனவன்கனவிலுருவாகியது

## திருநாளைப்போவார்புராணம்.

## விருத்தம்.

இன்னல்தருமிருபிறவியிது தடையென்றேதுயில்வா
ரன்னிலையேயம்பலத்து ளாடுவாரறிந்தினிதில்
மன்னுதிருத்தொண்டரவர் வருத்தமெல்லாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண் முறுவலொடுமருள்செய்வார்

## வசனம்.

இப்படித்திருநாளைப்போவாரென்னும் நந்தனார்இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச் சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து வருத்தத்தினால் மயங்கிசோர்ந்துநித்திரையடைந்தார் அந்தநித்திரையிலே நடராஜமூர்த்திவந்து காக்ஷிதந்துசொல்லுவார் எனக்குமிகவும் பிரியமுள்ளநந்தனாரே யும்மிடத்தில் நம்முடையபத்தர்களாகிய வேதியர்களைவரச்சொல்லுவோம் அவர்கள்முன் நீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந்துமறைபடித்து வேதியர்களுடனே சபாபிரவேசம் பண்ணுமென்றுரைபகர்ந்து ஐயன் அந்தர்த்தானமானார் நந்தனார் கனவிலகாட்சியானதைக்கண்டு களித்து விழித்துதெளிந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத் தோத்திரம்புரிந்துசொல்லுவார்.

## கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

## பல்லவி.

சந்நிதிவரலாமோ சுவாமி தெரிசனந்தரலாமோ — சந்

இல்லறவாழ்வாம் — பணிமுடி
இருந்தேனன்றோ — மிகவாடி
அல்லும்பகலுங் — கொண்டாடி
அடியேன்கனக — சபைநாடி — சந்

விதியிலேசற்றே — வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் — டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவனென் — றறிந்தேன்
தனித்திருப்போமென்றிங்கே — வந்தேன் — சந்

காலால்விசிக்கலன் மூட்டி
  காலைமதிமண்டலமே லோட்டி
பாலாறுபெருகவேயெனைக் கூட்டி
  பார்த்துமில்லைகாண் தோட்டி சங்

வசனம்.

நந்தனார் தான்கண்டசொற்பனத்தைக் கொண்டாடுவார்,

கீர்த்தனம்-இ-ம்- நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சொற்பனக்கண்டுகொண்டேன் அதிசயமாய்ச்
சொற்பனக்கண்டுகொண்டேன்

அநுபல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேனெல்லாங்கற்பனையென்றறிந்தேன் வே
த, தற்பதவாக்கியமேவுருவாகி யற்புதநடனம்புரியயின்று சொற்

சரணங்கள்.

அம்பிகைமாணுள்மான்மழுவணிந்திடுஞ்செங்கோளன்செய்பொன்னம்
பலந்தனில்தாளமத்தளம்போட மறைகள்பாடகொண்டாட மண்டல
த்தோராசைதீர்ந்து மண்டபமணியோசைநேர்ந்து மனதுருக மறலி
ருக வரந்தருக வரந்தருக சொற்

மங்கையர்மோகமில்லாதாரையும் வருந்தியழைக்கும் பொல்லாதாகிய
மாயப்பிணியைவெல்ல மருந்துசொல்ல வழியிற்செல்ல நல்லபண்ண
வர்முரசடிக்கபதஞ்சலிவியாக்கிரமபாதர் துதிக்கமாயன் கோபாலகிரு
ஷ்ணன்களிக்க உடுக்கையெடுக்க உலகந்துறக்க சிறக்க சொற்

வசனம்.

நந்தனார் தான்கண்டகனவு நிட்சயமோ பொய்யோவென்று சந்
தேசப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சூரியகாந்தம்-சாப்புதாளம்.

பல்லவி.

கனவோநினைவோ கண்டதுவின்றே
மனதிலுறுதிகொள் வழியொன்றுங்காணேன் கனவோ

நித்திரைதனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு கனவோ

ஆருமிகழ்ந்தள்ளும் நாரும்புலையனென்னை
வாழும்பரமபதஞ் சேருமென்றழைத்தது கனவோ

கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டி கட்டளையிட்டது கனவோ

வசனம்.

தான்கனவில்கண்டதுபோல் சுவாமி வருவாரோவாராரோ வென்றுசஞ்சலப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சாமராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரோவரந்தருவாரோஎந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ எப்போ வரு

திருவாரூந்தென்புலியூர் திருச்சிற்றம்பலவாணன்
குருநாதனாகவந்துஎந்தன் குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளைக் கருவறுத்திடுகிறேன்
பயப்படாதேயென்றுசொல்ல வரு

மறைநாலும்வழுத்தறியா மகிமைபெருநடராசன்
கரையுறுஞ்சேவடியை நாடிநம்பினவனானல்லவோ
அனுதினஞ்சிவ சிதம்பரமென்ற
வடிமையேற்கருள்புரிந்திடயிங்கே வரு

மணிமார்புஞ்செஞ்சடையும் பார்க்கவெகுமையலானேன்
பணியுங்கோபாலகிருஷ்ணனிடம் பரமதயாநிதியல்லோ
பவக்கடலடிக்கடி பெருகுதுவிலக்குமோ
மலைக்குதுகரையேற்ற வரு

வசனம்.

நந்தனார்இப்படி அநேகவிதமாய் வருவாரோ வாராரோவென்று பலவிதமாகக் கொண்டாடுகிறார்.

திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இப்பிறவிபோய்நீங்க வெரியினிடைமூழ்கி
முப்புரிநூன்மார்பருடன் முன்னைவாவெனமொழிந்த
வப்பெரிசேதில்லைவா ழந்தணர்க்குபெரியமை
மெய்ப்பொருளா ளருமருளியம்பலத்தேமேவினார்,

வசனம்.

நந்தனார் கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்திதில்லைமூவாயிரம்பேர்கள் கனவிலேவந்துசொல்லுவார் பக்தர்களே எனக்குமிகவும்பிரியமுள்ளவனாகிய திருநாளைப்போவாரென்னும் அழகாகியநாமத்தைக்கொண்டு என்னைக்காணவேண்டுமென்று தன்னைக் காணிக்கைகொண்டு சாதியிற்றாழ்ந்தவனென்று மிகவுங்குழைந்துகொண்டிங்கே

வரலாகாதென்றுபயந்துக்கொண்டு தன்னைத்தவிர மற்றதெல்லாமனி த்தியமென்று பத்திபண்ணியடையவேண்டுமென்று தில்லையைச் சுற் றிக்கொண்டு தெற்குக்குளத்தங்கரையில்நின்று ஆடிப்பாடி ஆனந்த க்கொண்டு இருக்கிறார் அவரை என்னைப்போல் நினைத்து நீங்களெல் லோரும்போய் அழைத்துவாருங்களென்றுசொல்லி சுவாமிமறைந்தா ர் இப்படிக்கண்டகனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசல்வந் து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்கள்.

தரு-இ-ம-சங்கராபரணம். அடதாளம்,

கண்ணிகள்.

அதிசயமொன்று கேளப்பாதீக்ஷதரே
  யர்த்தராத்திரிப்போதி    லென்னேஎன்றன்
துதிபூரவசமாகத் துதிபரவும்பல
  வாணன்கனவில்வந்தா    னென்னே
வாஸ்தவமெனக்குமிந்த வண்ணமாகக்கனவில்
  வந்துரைத்தாரயிந்தே    காடி உத
யாஸ்தமயமாகுமுன் னவராட்டபடிக்கு
  அழைப்பதுத்தமமென்று    சோடி
அப்போதங்குவந் தவப்பண்ணுதீக்ஷதர்
  ஆமாமிதுநிச்சயந்தான்    எங்கோன்
செப்பியசொற் செந்தீவளர்த்திடச்
  செய்யவேண்டுமைய    னியந்தான்
அவசியமென்கிறீர் காரியந்தெரியாமல்
  ஆருக்கடுக்குமோ    புலையன்சிறந்த
தவசிரேஷ்டராகுமோ தலத்தினில்வருகத்
  தலைபத்தோ அவன்பந்தா    லலைவன்
பத்திபுள்ளவனைபரமனுக்குயிர்தோழன்
  பதஞ்சலிபுலிப்பாதா    காட்சிசிவன்
சித்தத்தின்படிசெய்துசெனனங்கரைகடப்போம்
  தெளிவீர்நீங்களிந்தச்    சூட்சி
என்றாங்குசிவசங்கரதீட்சதர்
  இன்னாருந்தாமச    மேதோநீச்சன்
என்றுலுந்திருச்சந்நிதிக்குவருவ
  தொருக்காலுங்கட்டுத்    தகாதோ
சொல்லுமென்றாவராமென்றுருங்கட்குச்
  சித்தத்திலுள்ளசந்    தேகம்தெளிய

அல்லும்பகலுமோயாமேசாஸ்திர
மாராய்வதற்குமனேகா — சாகரம்
தரும்படிபேசிச்சந்தேகந்தெளிவ
தத்தென்றுரைத்த — மொழியே-நம்
பெருங்கூட்டமாகவே கூடிச்சென்றாவர்
பேதமறந்தொரு — வழியே

## வசனம்.

தில்லைமூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந்தெளிதல்

## விருத்தம்.

மறைக்கிழவரிவ்விதஞ்சென்றார்களங்கே
மனுவிக்கியானிகளாசீர்வாதஞ்செய்து
வந்தகாரியமேதோவுரைப்பீரென்ன
மற்றுளானவர்தங்கள்கனவிற்றோன்றி
குறைந்தமதிபுலைச்சாதிவந்துதித்தோன்
கோதிலாநந்தனென்போனவனல்லன்பன்
கூறுமிவ்வுலகிலவலம்மருவான்நாளை
கொணர்ந்தவனைத்தீமூள்கச்செய்தேஅப்பால்
மறையொருசக்திதியில்நம்முன்னாக
விடுங்களென்றருளிச்செய்தவர்மறைந்தார்
உணர்ந்தோமுன்னிதுதெரியச்சொலலவந்தோ
மொழியுமாறுத்தாமயாதென்றார்நீதி
அறிந்தவன்னோரமந்தப்படிக்கேசெய்வ
தழகாகுமென்றனர்பின்மகிழ்ச்சியாலே
அந்ததில்லைமாநகரத்தெல்லைச்சுற்றி
யாடுவர்நந்தனாரைத்தேடுவார்.

## திருநாளைபபோவார் புராணம்

## விருத்தம்.

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரெல்லோரு
மம்பலவர்திருவாயின்முன்பட்சமுடனின்று
எம்பெருமானருள்செய்தபணிசெய்வோமெனவேத்தி
கம்புரிவுபெருகவருந்திருத்தொண்டர்பாற்சார்ந்தார்.

## வசனம்.

தமதுபிரானாகிய சபாநாதரிட கட்டளையைக்கேட்ட தவம்பொ
ருந்திய பிராமணன்களெல்லோரு மம்பலவாணரது கோயிற்றிருவசல்

முன்புகூடி பயத்தோடும் நமமுடைய ஆண்டவாருள்செய்த ஊழியத்தைச் செய்வோமென்று வணங்கி அன்புமேறபட்டிருக்கும் திருநாளைப்போவாரைத் தில்லை மூவாயிரவர் தேடவருகிறார்கள்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டரைக்காண்கிலமே தில்லையில்வந்துதொண்டரைக்காண்கிலமே

அண்டசராசரமெங்கும்படியளந்து
மன்றுளாடியமன்னவர்க்கடிமை — தொண்

சொல்லும்பொருளுமற்றச் சோதியயங்கொண்
டல்லும்பகலுமற்றம்பலவாணன் — தொண்

அஷ்டதிசையும்பரிபூரணமாகவே
மட்டில்லாதுவளரத்தோங்கியநாதன் — தொண்

வாசியடங்கிடுவேணவழிகண்டால்
தேசிகவடிவுடன்தெரிசனந்தருவார் — தொண்

பாலகிருஷ்ணன்பணிந்தேற்றியபாதன்
கோலச்சிலமபணியுங்குண்டலநாதன் — தொண்

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

திருநாளைப்போவார் தெரிசனங்காணத்
தில்லைமூவாயிரமுனிவர்கள்வருகிறார — திரு

பத்திவெள்ளமதுகரைபுரண்டோடும்
பரமானந்தக்கடல்மூழ்க்காட்டும் — திரு

அரகரசங்கரசிவனென்றும்சொல்லும்
அதிதயசடத்துக்கபாயததைவெல்லும் — திரு

அடியவபரமெத்தப்பெரியவரென்று
அம்பலவாணாருள்விடைகொண்டு — திரு

இதுவுமதுசிந்து,

பதம-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி.

தேடித்திரிந்தார் பாரும்நந்தனார்தம்மைத்
தில்லை மூவாயிரவர்

அநுபல்லவி

கஞ்சதுர்வேதப்பிர தாசனே
நடுங்கைசிவகாமிப்பிரா ணேசனே
ஆடும்பதநடன சபேசனே
ஆவலாகத்தொழுதேவரும் நேசனேத் தே

சரணங்கள்.

தண்டாமரைமலர் தடமும்-மாதர்களாடிக்
கொண்டாரனடித்திடு மிடமும்-அன்னமளிக்க
உண்டானந்தக்கூறு மடமும்-சோரர்பாவுஞ்
சண்டாளர்வாழும்வா ருடமும்-அன்றிச்சூத்திர
சாதிமுதலானபல வாடையும்-பல்லாண்டு
ஓதியுலாவிவரு மேடை-மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்கள் மாடமின்னமும்பல
மாதிரிகளாருந்திண்ணை மேடை-உன்னதமாகக்
கொங்குமிகுத்தருவெங்குமணத்திடுஞ் சோலைகருப்பஞ்சோலை
தங்குமுயர்ந்துகதித்திடுமெவாழையின் சோலை-தாழையின்சோலை
தெங்குமிலுப்பையுமொன்றுபொருந்திய சோலை-காவினிற்சோலை
துங்கமதானபலாக்கமுசோங்கிய சோலை-மற்றுள்சோலை
எங்குஞ்சுற்றிப்பார்த்துமறையோர்கள் தங்கள்தங்களங்கமேங்க
நதியிதழும்
பொங்கரவணிந்தசிவசங்கரன்கிருபை யிதன்மேற் யோங்க
கூக்குரலிட்டுங்
சங்கையறச்சென்னியிற்கரங்களைக் குவித்தெங்களைத் தாங்க
மனமுவந்து
அங்கேயெங்கள்பங்கினிலிருந்து மேழைவருத்தம் நீங்க
கிருபைசெய்வதற்கு
உன்னதேகடனென்று உவந்துக்கொண் டாடி
உரிடவேதமந்திராதிகள் பாடி
முன்னஞ்சொன்நந்தனார்வர நாடி
மூனுங்கொடைக்காரனைவிரைந் தேடி

தேடித்தேடித்திரிந்தார் பாரும் நந்தனார்தம்மைத்

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லைமூவாயிரவர்களுந் தேடி அலுத்து ஓரிடத்தில் யாவருங்கூடி சுவாமியைதி துதிசெய்கிறதென் நிச்சயஞ்செய்து தோத்திரஞ்செய்கின்றார்கள்.

தரு-இ-ம-கல்யாணி-அட தாளம்,

பல்லவி.

உனதுமகிமையை யொருவரறிவார்களோ
உலகிலுள்ளோரையனே

சரணங்கள்,

கனவிலேவந்தெங்களுக்குச்சொன்ன அந்த
காரணமறிந்ததிகாலையிலே யெழுந்த
இனத்தார்சனங்கள்யாருமிசைந்தொருமித் திந்த
எல்லைமுழுதுந்தேடியிளைத்தோமெங்களுக் கந்த
இணையில்லாதநந்தனொருவனு மகப்பட
வில்லையென்னசெய்வோம! ஸ்திரப்பட-உள்ள

அடையவர்திரிபுரமனலாகவே முடித்து
வன்பாகமானமழுவுங்கையிலே பிடித்த
விட்ப்பாகனேகாளிவெட்கும்படி நடித்த
மெய்யாதுயக்கவிர்த்தாளையாதென்றே படித்த
வாறுநீயறிந்தருள்செய் ஐயனே
வனசநிகர்புதசாணத் துய்யனே-உன்ன

அன்னை சிவகாமியனுதினமவளர் தில்லை
யம்பொன்னகர்வருவோர்க்காதொருதூய தில்லை
உன்னையன்றியிலகத்துக்குப்பொருளு மில்லை
யுத்தமனேயெங்கட்குரியதுணையு மில்லை
ஓதுநந்தனார்தம்மைவரச் செய்யும்
ஊழ்வினைதவிர்த்தவர்க்கு அருட் செய்யும்-உன்ன

வசனம்,

இவ்விதமாகச் சுவாமியைத்தோத்திரித்துத் தில்லைமூவாயிரவர்களனைவரும் நந்தனாரைத்தேடி யலுத்துவருமார்க்கத்தில் ஒதுப்புறமாக நின்றுக்கொண்டிருந்த நந்தனார் வேதியரைக்கண்டு தூரவிலகிநின்று தலைவணங்கிச்சொல்லுவார்.

விருத்தம்,

திட்டமுடன்டிபணிந்துமனமொடுங்கித் தவம்புரியுந்தில்லைமன்று,
ளட்டமிட நடராசன் கனவின்கண் சொன்னமொழி நம்பிக்கொண்டு,

இட்டமுடன்திருநாளைப்போவாரிடம் வேதியர்களேசம்போது-கிட்டி
நெருங்காதையுமென்றே விலகியோர்வார்த்தைகேளீரென்றார்

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

கிட்டநெருங்கிவருகாதே சுவாமி-காதில்
கேட்டபேர்க்குபாவம்வரு மெனதுசென்மபூமி-கிட்

சிட்டர்புகழுந்தில்லைகளில் செழித்துவாழும்வேதியர்கள்
இஷ்டமிதுவல்லவே யென்றுசொல்லவேணும்மாபுலையன்-கிட்

உலகினில்கடைச்சாதியெந்தனுக் குவமையாருமில்லையே
ப்லவிததுஷ்டகருமஞ்செய்து பாரில்வந்தபுலையன்-கிட்

வேலைசெய்துவுடம்புவளர்க்க வேணுமந்தநாயேன்
தோலுமெலும்புமுதுகினில்சுமந்து அலையும்புலையனையே-கிட்
செத்தமாடிழுப்பதெனது சேவகமபடித்துமியல்லை

வசனம்,

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாரைப்பார்த்தது வேதியர்கள் சொல்லுவார்கள்,

கீர்த்தனம் இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி,

சாதியிலுயர்ந்தாலென்ன இந்தப்பேரும்பெருமையுமில்லையே
சாதிப்பேருகொண்டதாலே சங்கரனுருலகில்வந்து
ஆதரவுடன்வரங்களீந்து அழைப்பாரோசேர்ப்பாரோ
அளிபெருகவேயீசன்கழலை யறிவினுன்னியடிபணிந்து
தெளிந்திடாதபேனாமுத்திதேடுமோ காடுமோகூடுமோசாதியில்

வசனம.

இப்படிச்சொல்லியபின தாங்கள்வந்தகாரியம்பேசுவார்,

திருநாளைப்போவார்புராணம்,

விருத்தம்,

ஐயரேயம்பவாருடா ரவியப்பொழுதணைந்தோம்
வெய்யவழனமைத்துமக்குந் தரவேண்டியெனவிளம்ப
னையுமெனத்திருத்தொண்டா ரனுய்க்கேதெனனத்தொழுதார்
தெய்வமந்றமுனிவர்களுந் தீயமைத்தோமெனமொழிந்தார்,

வசனம்,

ஐயரோ நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்விதமாகிய அக்கினியைமூட்டி உமக்கு அதில் மூழுகும்படி கொடுக்கவந்தோமென்று சொல்ல இளகியமனசையுடைய திருநாளைப்போவார் அடியேன்கட்டை கடைத்தேறினேனென்று அவர்களைத்தொழுவார் தெய்வீகமாகிய வேதத்தையுணர்ந்த பிராமணர்களுந் தீவளர்த்திரேனுமென்று சொல்ல நந்தனார்கேட்டுச் சந்தோஷமடைந்து நான் இன்றைக்குத்தான் முத்தனானேனென்று வேதியர்களைப்பார்த்துச்சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன் பவக்கடல்கரையேறிவந்தேன்
சோதிமறைமுடிவாஞ் சொல்லிறந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய பாக்கியவானுமைக் கண்
எல்லையைக்காணுமுன்னே யிருள்விலகுமுங்கள்
சொல்லலைக்காணுமுன்னே துன்பங்கள்தீர்ந்திடக் கண்
கள்ளங்கருதச்செய்யுங் கவலையுந்தலையுங்கள்
உள்ளங்குடியாய்க் கொண்டாருங்கள்தெரிசனம் கண்

வசனம்,

நந்தனார் நான் சின்னசாதியாயிருந்தபோதிலும தெய்வமிரங்கிற்றென்று சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம்-கனுசாரி-ஆதிதாளம்

எனக்குமிரங்கினறே நான்மெத்தப்பறைஜாதியல்லோ
தனக்குளதாயிருந் தகிலப்பிரபஞ்சமுந
தன்னுளடக்குப் பொன்னம்பலவன்கிருபை என்
அல்லும்பகலு மருந்தவஞ்செய்யினு
மறியாரொருவரும பகலத்தெய்வம் என்
நான்குமறைமுடிவும் நானறியேன்
றோதியவுண்மைவுலகமரிய என்

வசனம்,

நந்தனார் என்னதவஞ்செய்தேனோ இவ்வுலகின்கண் யாவருக்குங்கிடைக்காதபாக்கியம் கிடைத்ததென்று சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம-ஆகிரி-ரூபகதாளம்,

அம்பலவாணனைத்தெனபுலியூரானை நம்பிப்பணிந்தேனே
அர்ச்சனைசெய்து கும்பிட்டிருந்தேனே
தில்லைப்பதியிலவந்து எல்லைகடந்தேனென்று
அல்லையறுத்தேனே சஞ்சித வினையெல்லாமவறுத்தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித்தேனே முக்குணங்களைத் தாண்டிக்களித்தேனே

எந்தனெனதென்றெந்தைவேளையுமாயுஞ்
சிந்தைநழுவிற்றே சேர்தவனென்று தந்தைதழுவிற்றே
தெள்ளுதமிழ்ப்பாடியுள்ளமுருகியுள்ளில்
கள்ளங்கருகிற்றே கருத்திலெட்டா வெள்ளம்பெருகிற்றே
ஆசைவலையைப்போட்டு மோசப்படுத்துஞ்சில
பாசங்குலைந்தாரோ அளவிடா கிலேசந்தொலைந்தாரோ
பெண்ணாரிடமாலுக்கொண்ணாதெனச்சடைத்
தண்ணுத்தணைந்தாரோசநனைபொங்கு கண்ணாலணைத்தாரோ
அடுத்துவந்தவனென்று பிடித்தபேய்களையோட்டி
தடுத்தாளக்கொண்டாரோ பரமபதங் கொடுத்தாளக்கண்டாரோ

## திருநாளைப்போவாபுராணம்

### விருத்தம்,

மறையவர்கள்மொழிந்ததற்பின் றென்றிசையின்மதிபுறத்துப்
பிறையுரிஞ்சுந்திருவாயின் முன்னாகப்பிஞ்ஞகன்றன்
நிறையருளால்மறையவர்க ணெருப்பமைத்தகுழியெய்தி
இறையவர்தாண்மனங்கொண்டே பெரிசூழல்வலங்கொண்டார்,

### வசனம்,

அப்படி பிராமணர் சொல்லினபின்பு தென்றிசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைத் தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்கும் திருக்கோபுரவாசலுக்குமுன்னே சுவாமியின் நிறைந்தகிருபையோடுங் கூடிய கட்டளையால் பகர்ந்திருக்கின்ற நெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில தியானித்து அக்கினியைச சுற்றி வலமாகவந்தார்,

### இதுவுமது-விருத்தம்,

கைதொழுதுநடமாடுங் கழலுன்னியழல்புக்கார்
எய்தியவப்பொழுதின்க ணெரியின்கணிம்மலமாய்ப்
பொய்தகையுருவொழிந்துப் புண்ணியராய்முனிவடிவாய்
மெய்திகழ்முன்னூல்விளங்க வேணியனூர்முடிகொண்டார்

### வசனம்,

கையாற்கும்பிட்டுநடனஞ்செய்கின்றநடேசரது திருப்பாதங்களை மனதில் உறுதியாய்நினைத்து அக்கினியிலேபுகுந்தார் அப்படிச்செய்த போது அந்த நெருப்பில் இந்த உலகம் பந்தமாகிய நிலையில்லாத உடலத்தை ஒழித்துப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின் வடிவாய்த் தேகத்தில் பூநூல்விளங்கச் சடைமுடியோடும் எழுந்தார்,



கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

யாகோற்பவமானார் நந்தனார்-அரனருளால்
யாகோற்பவமானார்

அநுபல்லவி.

சிலனாருரைத்த வாக்கியம்-சித்தத்திலெண்ணி
சிறந்ததேமிக சிலாக்கியம்
தவறுவனேக பாக்கியம்
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தபனனோடுவுயர் கவனமேவிவரு
மேவருங்காந்தருவ ரெவருங்கண்டுதொழ-யாகோ

கையைச்சிரமேற் பதித்து-சிவனேயென்று
கனகசபையைத் துதித்து
செய்யகுண்டத்திற் குதித்து-கதிரவன்போல்
செனித்துதேவர்புகழ் நடித்து
சித்தியாகியபதம் முற்றும்பாம்புபுலி
பத்தியாய்த்தொழும் பதத்தைக்கண்டுதொழ-யாகோ

காதிற்குண்டல மிலங்க-முப்புரிநூலுங்
கதித்தமார்பிட மிலங்க
ஓதுஞ்சடைகள் துலங்க-அவரைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றசதுர் வேதமோதிவரும்
நீதவேதியர்கள் போதுமென்றுதொழ-யாகோ

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செந்தீமேலெழும்போது செம்மலர்மேல்வந்தெழுந்த
அந்தணன்போற்றோன்றினா ரந்தரதுந்துமிநாதம்
வந்தெழுந்ததிருவிசும்பில் வானவர்மகிழ்ந்தேபார்த்துப்
பைந்துணர்மந்தாரத்தின் பனிமலர்மாரிகள்பொழிந்தார்.

வசனம்.

சிவந்தநெருப்பில்நின்றும் எழுந்தபொழுது செந்தாமரைப்புட்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளிய பிர்மாவைப்போல பிரகாசித்தார் பெருமைபொருந்திய ஆகாசத்தில் அந்தரதுந்துமியின் கோஷ்டமான

னதுஉண்டாயிற்று தேவர்கள்சந்தோஷமாய்ஆரவாரித்துஅழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சிபொருந்தியமலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள்.

இதுவுமது-விருத்தம்.

திருவுடையதில்லைவாழந்தணர்களுநதொழுதார்
பரவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிப்பயின்றார்
அருமறைசூழ்திருமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர்.

வசனம்.

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள்கைகூப்பினார்கள் பரவுதற்கரிய மற்றைச்சிவபத்தர்களுந்தொழுது மனதில் களிப்படைந்தார்கள் வேதங்கள்முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்றபாதத்தை வணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒரு வேதமுனிவர்வருகையில் ஆனந்தத்தாண்டவத்தை வருணித்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதெய்தெய்யென்றாடுவார்-அவர்
தத்தித்தெய்தத்தித்தெய்யென்றாடுவார்

ஆதிபராபரமாகியசித்து
ஆனந்தங்கொண்டொருகாலையெடுத்துத் — தாதெய்

அண்டசராசரமெங்கும்நடுங்க
ஆதிசேடனார்முதுகுநெருங்க — தாதெய்

சிலம்பொருந்தியமுனிவர்கொண்டாட
திங்களைச்சூடியசெஞ்சடையாட — தாதெய்

பார்புகழுந்தில்லைச்சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேற்றியபாதன் — தாதெய்

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

குஞ்சியபதத்தைத்தாரும்மனசஞ்சலப்பாவத்தைத்தீரும்

அநுபல்லவி.

செஞ்சிலம்பசையக் கனகசபைதனில்
ஜெனுதக்கதஜெனுதத்திமி திமிதத்தோமென்றாடிய-குஞ்

சரணங்கள்.

நெஞ்சிற்கலையை யாற்றும்-இந்த்
வஞ்சப்பிறவியை மாற்றும்-காலும்
அஞ்சிசிவகாம வல்லிமகிழ்ந்திடும்
தஜ்ஜெம்தகஜெஜந்தரிகிடதக்கிடதோ மென்றாடிய-குஞ்

சரணமென்றிங்கோரான் வந்தேன்-ஜன
மரணத்தில்மிக நொந்தேன்-அந்தக்
கரணக்கல்மிஷங்கள் போக்கியேகாத்திடும்
இந்திரர்வானவர்மாமுனி வந்துவிதந்துதிசெய்திடும்-குஞ்

பாலகிருஷ்ணன்தொழும் பாதா-முத்தி
நால்வர்க்குதவிய நாதா-மெய்ந்தன்
மேலேகிருபைசெய்து வெற்றியளித்திடும்
அத்தனேகர்த்தனேசுத்தனேயித்தனை கீர்த்தனஞ்செய்திடும்-குஞ்

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்அம்பலந்தனிலேபொன்னம்பலந்தனிலே

அநுபல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் அயனும்மாலும்பாடினார்
அந்தரங்கமாகச் சிந்தித்தபேர்க்கருள்
தந்தோந்தந்தோமென்று தொந்தோந்தோமென்று

சரணங்கள்.

பதஞ்சலிமா முனியைநோக்கிப்
பார்த்தபேர்கள் குறையைப்போக்கி
இதமகிதமென் றறிவைநீக்கி
ஏகமாக காலைதூக்கி-ஆன

மத்தளதாள மதிரமுழங்க
வளரும்பிறமதி கணங்களிலங்க
தத்தமிதக்கிட தோமென்றிலங்க
சபையுந்துலங்க சதங்கைகுலுங்க-ஆன

பாலகிருஷ்ணன் பணியும்பாதன்
பார்த்தபேர்கள வரப்பிரசாதன்
ஞாலமபுகழுஞ் சீலபோதன்
சுந்தரானதன் அம்பிகைபாதன்-ஆன

வசனம்.

இப்படியாடிய தாண்டவதரிசனங்கொடுக்க இன்றைக்குத்தான் சித்தமிரங்கிற்றோ வென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

சித்தமிரங்கிற்றோ யான்முன்செய்ததவமுற்றிற்றோ
அத்தாபரிசுத்தா வுன்னுடல்காணவந்தேன்

என்னையாண்டுகொள் இதுவேசமயம் முன்னுடல்காணவந்தேன்

சாதிமுறைபோக்கும் என்னைச் சதுர்மறையோனுக்கும்
போதாநாதாவுன் னுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள் இதுவேசமயமுன் னுடல்காணவந்தேன்

பாலகிருஷ்ணன்போற்றும்பாதா பதஞ்சலியாரேற்றும்
சீலாதிரிசூலாவுன் னுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள் இதுவேசமயமுன் னுடல்காணவந்தேன்

சிந்து.

கனவிலுருவாகி வந்து காட்சிகொடுத்துக்கடாட்சித்தபின் எரியினிடைமூழ்கி வெகு யின்பம்பெருகியவன்பருடன் வேதமுனிவடிவாய்த் தில்லை வேதியர்கைதொழுதாதாவாய் அங்கம்புளகிதமாய்ச் செம்பொன்.

வசனம்.

திருநாளைப்போவாராகியமுனிவர் அக்கினியில் குளித்தெழுந்து கனகசபையில்வந்துமனமுருகி ஆனந்தம்பெருகி எம்மாண்டவராகிய நடேசமூர்த்தியைத் தோத்திரஞ்செய்கின்றது.

தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறி வாழ்வயற்றில்லைதன்னு
ளாடையுடையுடைக்கழச்சிற் றம்பலவனுடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற் பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே.

பொருவிடையொன் றுடைப் புண்ணியமூர்த்திதன்
னுருவியவடையன்மலை மங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
றிருவுடையைக்கண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே.

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாத்திக்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடு மாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னாகியதில்லைச்சிற்றம்பல
னுடைத்துகில்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே.

வெச்சபொருணமக் காகுமென்றெண்ணிநமச்சிவய
பச்சமொழிந்தேனணி தில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலி பேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாயுன்னைக் கண்கொண்டுகாண்பதென்னே.

நெஞ்சின்றநீலமலர்நின்ற தில்லைச்சிற்றம்பலவன்
மஞ்சின்றவொண்கண் மலைகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெஞ்சின்றெறியும்விளக்கொற்ற நீலமணிமிடற்றான்
நெஞ்சின்றவாடல்கண்டாற் பின்னைக்கண்கொண்டுபார்ப்பதென்னே

ஊனத்தைநீக்கியுலகறிய வென்னையாட்கொண்டவன்
தேனைத்தெனக்கினியான் றில்லைச்சிற்றம்பலவனை
வானத்தைவருய்யவன் னஞ்சையுண்டசண்டந்துலங்க
மேனத்தெயிருகண்டாற் பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே

தெரித்தகணையாற்றிரிபுர மூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர் கோமானிணையடிக
டரித்தமனத்தவர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே

தருக்கமிசைத்தாத்தன் றோள்வலியுன்னித்தடவரைய
வரைக்கைகளாலெடுத்தார்ப்ப மலைமகள்கோன்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்து மணிதில்லையம்பலவ
னெருக்கமித்தவிரல்கண்ட கண்கொண்டுகாண்பதென்னே

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி, யூற்றாகியுள்ளே யொளித்தாய்போற்றி யேலாதசத்தத்தொலியேபோற்றி, யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி யாறங்கநால்வேதமானாய்போற்றி, காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சுற்றுமமராசுரர்பதி நின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றடைட்ப பாவையுணஞ்சையுண்டாய்
செற்றங்கனங்கனைத்தீவிழித் தான்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே

சித்தெழுந்த செழுங்கமலத்தன்சேவடிகள்
வைத்தமனத்தவர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வைரமும் மாணிக்கந்தன்னுளடங்கியதூவு
மத்தமலர்க்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே

பிச்சாடல்பேயோ டுகந்தாய் போற்றி பிறவியறுக்கும் பிரானே போற்றி, வைச்சாடலென்றுமுகந்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பைசாகபுரமூன்றுமெரித்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கச்சார்க்கைமசைந்தாய்போற்றி கைமலையானேபோற்றிபோற்றி

மருவார்புரமூன்றுமெரித்தாய்போற்றி மருவியென்சிந்தை புகுந்தாய்போற்றி, யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி, திருவாகிநின்றதிறமேபோற்றி தேசம்பரவப்படுவாய்போற்றிபோற்றி.

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்

ந்தாய்போற்றி, தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி தேவர்க்குத்தே வனாய்நின்றாய்போற்றி, கானத்திலாடலுகந்தாய்போற்றி கைலைமலை யானேபோற்றிபோற்றி

ஊராகிநின்றவுலகமேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி பேராகியெங்கும்பரந்தாய்போற்றிபேராதென்சிந்தைபுகுந்தாய்போற் றி நீராவியானநிழலேபோற்றி நேராவொருவரையுமில்லாய்போற்றி காராகிநின்றமுகிலேபோற்றி கைமலையானேபோற்றிபோற்றி

சில்லுருவாய்சென்று திரண்டாய்போற்றி தேவரறியாத தேவே போற்றி, புல்லுயிர்க்கும்பூட்சி புணர்ந்தாய்போற்றி போகாதென்சிந் தைபுகுந்தாய்போற்றி பல்லுயிராய்ப்பார்த்தோறு நின்றாய் போற்றி பற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுருவாய்நின்ற கனலேபோற்றி கைலைமலைநாயகனேபோற்றிபோற்றி

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி பாவிப்பாம்பாவ மறுப்பா ய்போற்றி, யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி யென்சிந்தை நீங்காவிறைவாபோற்றி, விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி மேலவர் க்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்மணியாகி நின்றாய் போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

இமையாதுயிராயிருந்தாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவா போற்றி, யுமைபாகமாகித்தணைந்தாய்போற்றி யூழியேழானவொரு வாபோற்றி, யமையாருநெஞ்சமமர்ந்தாய்போற்றி யந்திபுராணனாய்நி ன்றாய்போற்றி, கமையாகிநின்ற கனலேபோற்றி கைலைமலையானே போற்றிபோற்றி.

மூவாப்பிறைவாயிறைவாபோற்றி முன்னமேதோன்றி முளைத் தாபோற்றி, தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றி சென்றேறியெங் கும்பரந்தாய்போற்றி, யாவாயடியேனுக்கெல்லாமபோற்றி யல்லலந லியவலைந்தேனபோற்றி, காலாயசனத்திரனேபோற்றி கைலைமலையா னேபோற்றிபோற்றி

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி நீளவுலகமுடையாய் போ ற்றி, யடியுமுடியுமில்லாய்போற்றி யங்கென்றறியாமைநின்றாய்போ ற்றி, கொடியவன்கூட்டிமுறைந்தாய்போற்றி கோயிலாயென்சிந்தை கொண்டாய்போற்றி கடியவுருவமொடு மின்னேபோற்றி கைலைமலை யானேபோற்றிபோற்றி

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி யோதாதேவேத முணர்ந்தா ய்போற்றி, எண்ணாயிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலி வாய்வைத்துகந்தாய்போற்றி. பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போ ற்றி பண்டேயென்சிந்தை புகுந்தாய்போற்றி. கண்ணாயுலகுக்கு நின் றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

சிந்து.

அம்பலமேவிய சிதம்பரத்தைக் கண்டாரறிந்திலரால்

## திருநாளைப்போவார் புராணம்,

### விருத்தம்.

தில்லைவாழந்தணர்க ளுடன்செல்லச்சென்றெய்திச்
சொல்லைமான்மழுத்தார் கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுட்புக்கா ருலகுய்யநடமாடும்
எல்லையினைத்தலைப்பட்டார் யாவர்களுங்கண்டிலரால்.

### வசனம்.

சைவபுராணமாகிய பெரியபுராணத்தில் திருநாளைப்போவார்நாயனாரென்னும் இயற்பெயர் சேக்கிழார்சுவாமிகள் சொல்லியிருப்பதால் இடையில்நந்தமாமுனியென்று வழங்குகின்றநாளைப்போவார் தில்லைமூவாயிரவமுனிவர்களோடேகூடி பொன்னம்பலவந்தார் அதற்கப்பாலவரைக்கண்ட பேர்களில்லையென்று பெரியபுராணம்பாடியருளிய சேக்கிழார்சுவாமிகள்சொன்னது அந்தத்திருநாளைப் போவாரென்னுமுனிவரானவர் புரட்டாசிமாதம் உரோகணிநட்சத்திரத்தில் கனகசபையில்வந்து கற்பூரஜோதியைப்போல் தோன்றிய சிவசாரூப்பியத்தை யடைந்தாரென்று உபமன்னியமகாரிஷி புண்ணியபத்தர் விலாசத்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

### இதுவுமது விருத்தம்.

அந்தணர்களதிசயித்தார் குருமுனிவர்துதிசெய்தார்
வந்தனைத்திருத்தொண்டர் தம்மைவினைமாசறுத்து
சந்தரைத்தாமரையுந் துணையடித்தொழுதேத்த
வந்தமில்லாவானந்தப் பெருங்கூத்தருள்புரிந்தார்

### வசனம்.

மறையோர்கள்ஆச்சரியப்பட்டார்கள் அரியமுனியர்கள் தோத்திரஞ்செய்தார்கள் முடிவில்லாதத்தாண்டவஞ்செய்தருளுகிற சபாநாதனது கட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவாருக்கு தீவினையாகிய களங்கத்தைநீங்கிய அழகாகியமலரையொத்த தமதிரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருள்செய்தார்.

### விருத்தம்.

மாசுடம்புவிடத்தீயின் மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகி யம்பலவர்தாளடைந்தார்
தேசுடையோர்வாழ்த்தத் திருநாளைப்போவாரும்
மாசகலமுயன்றுதிரு நடங்கண்டுமகிழ்வுற்றார்

வசனம்.

தனக்குமுன்னிருந்த உடலமாகியமாசுதீரும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்றபிராமண முனிவராகிநடேசருடைய திருவடியையடைந்தவராகிய திருநாளைப் போவாருடைய பதத்தைப்புகழ்ந்து தீவினையாகிய கன்றுஅறும்படி தில்லை மூவாயிரவர்கள் போற்றிசெய்துக்கொண்டிருந்தார்கள்.

வாழிவிருத்தம்.

பங்கயமாதர்வாழி பார்மகளுமையாள்வாழி
செங்கண்மாலயனும்வாழி தேவர்கந்தருவர்வாழி
தங்குநான்மறைகள்வாழி தாரணியாசர்வாழி
பொங்குநல்வல்லோர்வாழி போதமெந்நாளும்வாழி.

மங்களம்.

ஓரடிதரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம்எங்கள்
தில்லைமூவாயிரவர்க்கு சுபமங்களம்

அநுபல்லவி.

இருடிகள்முனிவர்க ளித்தினசயமென
விருகரமுடிமிசை மருதத்துதிசெய்கண
பரவுமுப்பாசப் பிரமங்கள்துதிதிடும்
பரமனுடமம் பலத்தினில்கதித்திடும்-திரு

சரணங்கள்.

திருவாசமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்துச் சிறந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடந்தூதுக் குகந்துவிடுத்தவர்க்கும்
உருவமொப்பிலாத்திரு நாவுக்கரசருக்கும்
உரியமறைக்கு முயற்கலைகட்கும்
உரகபதிக்கும் உவணபதிக்கும்
ஓதுசந்திரசூரியர் முனிவர்களுக்கும்
தீதிலாதபா வலர்முதலானவர்க்கும்-திரு

காண்டிவ்விய சரிததிரக்கீர்த்தனை

முற்றிற்று.



உ

சிவமயம்.

# சிதம்பரக்கும்மி.

## விநாயகர்துதி.

சீர்மேவுதில்லையம்பலத்தி-அன்பு
சேரக்கும்மிதமிழ்பாட
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார்காப்பாமே. க

## முக்குருணிவிநாயகர்தோத்திரம்.

சர்க்கரைமோதகந்தேங்காயுங்-கொண்டு
சத்திமுன்பாகத்தான்படைத்து
முக்குருணிப்பிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி உ

## சுப்பிரமணியர்துணை.

கோலமயிலின்முதுகேறி-வந்து
கும்பமுனிக்குவருள்செய்யும்
பாலசுப்பிரமண்யன்பீஜாட்சரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி. ங

கங்காதேவிக்குக்கைகூப்பி-யாருங்
கையிலெடுத்துள்ளேபானம்பண்ணி
தங்காமற்சிவகாமிசந்நிதி
சேர்ந்துகும்மியடியுங்க ச

கருதுஞ்சுருதிக்கெட்டாத-சிவ
காமசவுந்தரிவாசலிலே
விருதுபேசியேசிறுகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி. ௪

நாலுபுறத்திலுங்கோபுரமா-மதி
நடுமுலெங்கணுமாளிகையாம்
காலோராயிரங்கொண்டொருமண்டபங்
கட்டியிருக்குதுபாருங்கடி. ௫

தூயமறைமுதலாராய்ந்து-இங்கே
துலங்கியமூவாராயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிகும்மியடியுங்கடி. ௬

சாந்துபொட்டுதளதளென-நல்ல
சந்தனவாடைகுமுகுமெனக்
கூந்தலழகிகளெல்லோருங்காலை
குவித்துகும்மியடியுங்கடி. ௭

அஸ்தகடகம்பளபளென்ன-சொல்லும்
அரைதோள்மாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுக்கொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி. ௮

கைதனில்விபூதிப்பையுங்கொண்டு-அவர்
கண்டத்தில்ருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைசெய்கின்றதீட்சதா
வாழக்கும்மியடியுங்கடி. ௯

கோவிலுக்குநாலுபேர்களுண்டாம்-அவர்
குறித்தமுறையாய்ப்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
படுத்துவரான்றேகும்மியடியுங்கடி. ௧௧

ஆண்டுக்குள்ளாறபிஷேகமுண்டாம்-பின்னும்
அதிலோரநடுத்திருநாளாம்
வேண்டிவந்தார்களிதீருமென்று
விரைந்துகும்மியடியுங்கடி. ௧௨

பூதுபுகழ்ந்திடுந்தில்லைப்பதி-அது
பூலோகக்கயிலாசமென்று
தாமரைப்பூவில்வாழ்கின்றலட்சுமித்
தாயார்சந்நிதிபாருங்கடி. ௧௩

மூலஸ்தானத்தைக் கண்டாயே-நல்ல
முத்தியிதுவெனக்கொண்டாயே
காலெடுத்தாடியநிர்த்தநடேசனைக்
கண்டுதெரிசிப்போம்வாருங்கடி. ௧௪

தில்லைமாகாளியோடிவர-அவள்
சித்தங்கலங்கிதலைகுனிந்தாள்
வெல்லுவதெப்படியென்றொருகாலை
விண்ணிலெடுத்தார்பாருங்கடி. ௧௫

நெற்றியில்வேர்வைமுத்துதிர்ந்து-மெத்த
நேத்தியதாய்ப்பரந்தோடிவர
பத்தியுடன்பொன்னம்பலவாணனைப்
பணிந்துகும்மியடியுங்கடி. ௧௬

தித்தியென்றீசநடம்புரிய-பெய்த்
தேவர்கள்பூமழைதான்சொரிய
மத்தளங்கொட்டியகோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி. ௧௭

சிதம்பரமென்றுசொல்லாமல்-விச்
சித்திரக்கூடமென்றுசொல்லி
கிதங்கொண்டுமறையோர்கள்வந்து
நின்றிருக்கிறார்பாருங்கடி. ௧௮

காணிக்கைகொண்டுவாருங்கடி-இந்தக்
கனகசபையைப்பாருங்கடி
மாணிக்கவாசகர்புகுந்தவாசலை
மகிழ்ந்துக்கும்மியடியுங்கடி. ௧௯

அன்னமின்பால்தேங்கனியும்-செய்யும்
அபிஷேகமுண்டென்றனும்
பொன்னம்பலந்தனுற்சந்திமௌலினைப்
போற்றிக்கும்மியடியுங்கடி. ௨௰

முத்தியளித்திடுஞ்சந்நிதிக்குச்-சொல்லு
மேளமுந்தாளமுமேதுக்கடி
சத்தம்பெருகியகண்டாமணியோசை
சந்நிதிக்கோவையகப்பாருங்கடி. ௨௧

புட்டுவடையுந்தேன்குழலும்-பணப்
புத்தூருக்குநெய்சம்பாவும்
சட்டப்படித்தவருமல்லியன்
சந்நிதிக்கோர்வையாம்பாருங்கடி. ௨௨

சுற்றிவந்துச்சிலையைப்பாருங்கடி-நல்ல
சோதிமயக்கம்பமொனபதடி
தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கூடிச்
சமைந்தசபையைப்பாருங்கடி ௨௩

பாவிகள்கண்ணுக்குக்கெப்போடு-உற்றுப்
பார்த்தால்பத்தரைமாற்றுத்தங்கம்
கோவைபாடியமாணிக்கவாசகர்
கோவிலகைப்பாருங்கடி ௨௪

அஞ்செழுத்தாலேமதிலுமுண்டாம்-பர
மானந்தக்கும்பமுமங்குண்டாம்
அஞ்செழுத்துப்படிக்கப்பாலேபிரம்
மானந்தத்தாண்டவம்பாருங்கடி ௨௫

கோடியுகந்தவஞ்செய்தாலுமிந்தக்
கோயிலைப்பார்க்கமுடியாது
ஆடியபாதத்தைக்கண்டாருக்கினி
யாரொன்றுசொல்லுவோம்பாருங்கடி ௨௬

நெற்றியிலேதிருநீரணிந்துஎன்றும்
நிஷகளமாகிசிற்சபையில்
தித்திக்கவேசிநாமத்தைப்பூசிக்குந்
தீட்சதாகூட்டத்தைப்பாருங்கடி ௨௭

வெட்டவெளியிற்றிரைதிறந்துயார்க்கும்
வேதியர்தீபமுங்காட்டிவர
சட்டமுள்ளசிவசிதம்பரமென்று
சாய்ந்துக்கும்மியடியுங்கடி ௨௮

தில்லைவெளியைக்கண்டேண்டி-அங்கே
தேகம்பரவசங்கொண்டேண்டி
அல்லறவாசல்நின்றேண்டிமிக்க
ஆனந்தத்தாண்டவம்பாருங்கடி ௨௯

ஆகாசலிங்கத்தைக்கண்டேண்டி-அங்கே
யாவருமறியாமல்நின்றேண்டி
ஏகாந்தமாகவிருந்தேண்டிமன
தேகந்துலைந்ததுபாருங்கடி ௩௰

சித்தஞ்சிதம்பரமாச்சுதடிமுன்
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிரம்மமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோபாருங்கடி ௩௧

சாதிபேதங்களற்றேண்டி-இந்தச்
சாஸ்திரமானதைவிட்டேண்டி
போதமயக்கந்தொலைத்தேண்டியின்று
புகுந்துகும்மியடியுங்கடி ௯௨

நாடுந்தைப்பூரணபூசத்திலே-ஏக
நாயகன்றன்குருவாரத்திலே
ஆடியநாடகம்பாம்புபுலிதனக்
காமென்றுகும்மியடியுங்கடி ௯௩

சஞ்சிதகர்மங்கள்விட்டேண்டி-பல
சாகரத்தையொழித்திட்டேண்டி
குஞ்சிதபாதத்தைத்தொட்டேண்டிமனங்
கூர்ந்துகும்மியடியுங்கடி ௯௪

சொல்லும்பொருளையுமற்றுமே-முன்
துன்பமனைத்துமொழித்தாயே
அல்லும்பகலையுமற்றுயேதில்லை
யானந்தத்தாண்டவம்பாருங்கடி ௯௫

விதியெழுத்தைக்கிழித்தாச்சு-முன்
விட்டகுறைவந்துதொட்டாச்சு
மதியமிர்தகுண்டாச்சுதென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி ௯௬

கோவிலுக்குள்ளேயனேகமுண்டு-அந்தக்
குறிப்பறிந்ததைச்சொல்லுவீரே
தேவரகசியம்பள்ளியறைவந்து
தெளிந்துக்கும்மியடியுங்கடி ௯௭

சண்டேஸ்வரர்தம்மைப்பாருங்கடி
சந்நிதிக்கேகைகொட்டுங்கடி
மண்டலம்புகழுமழகர்வாசலில்
வாழிபாடுவோம்வாருங்கடி ௯௮

விட்டுக்கவலைகள்விட்டொழியார்
வீம்புகள்பேசியேவீணலைப்பார்
பாட்டைப்படித்தாலுஞ்சிதம்பரம்வந்த
பலனதல்லவோபாருங்கடி ௯௯

புத்திரபாக்கியம்மெத்தவுண்டாம்-பசும்
பொன்னுதணிப்பூஷணமுமுண்டாம்
பத்தியுடன்கோபாலகிருஷ்ணன்
பணியக்கும்மியடியுங்கடி ௱

சிதம்பரக்கும்மி-முற்றிற்று.

உ

சிவமயம்.

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார்திவ்வியசரித்திரக்கீர்த்தனைகளின்

# அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடக்கிபாரு | ௪௮ | ஐயாவுன்னடைக் | ௭௪ | சிதம்பரம்போ | ௨௪ |
| அஷ்டமாசித்தி | ௨௮ | ஐயேமெத்தக்கடி | ௮௭ | சித்தமிரங்கிற் | ௧௮௪ |
| அடித்ததுபோது | ௭௯ | ஐயோதெய்வமே | ௭௫ | சிவலோகநாதனை | ௧௭ |
| அம்பலவாணு | ௱௯ | ஒருநாளும் | ௨௰ | சின்னசாதிய | ௮௯ |
| அம்பலவாண | ௱௨௯ | கட்டைகடைத் | ௱௮ | சுவாமிதெரிசன | ௯௪ |
| அரகராவெவன | ௯௩ | கண்டேன்கலி | ௱௨௯ | செய்யுமுபாயம் | ௭௫ |
| அரகராசங்கர | ௯௯ | கனவினில்கண | ௭௭ | ஜெயஜெகதீசா | ௧௧ |
| அரிந்தரிபாமலே | ௱௪ | நனவோநினை | ௱௮ | சேதிசொல்லவந் | ௪௭ |
| அநமங்கள்வேதி | ௱௫ | கனகசபாபதி | ௱௭ | சேரிமுற்றுஞ்சிவ | ௫௧ |
| ஆடியபாதா | ௱௯ | கிட்டநெருங்கி | ௱௨௫ | சொற்பனங் | ௧௧௮ |
| ஆடியபாதத்தைத் | ௪௯ | குஞ்சிதபாதத் | ௱௯௰ | ஞாயந்தானோநீர் | ௧௯ |
| ஆடுஞ்சிதம்பர | ௯ | குற்றமெத்தனை | ௮௨ | தள்ளுவாரோ | ௧௧௪ |
| ஆண்டைக்கடு | ௯௨ | கெண்டாமணி | ௯௯ | தாதாதாநீஆடிய | ௧௯ |
| ஆதனூரிலொரு | ௯௭ | கொண்டானடி | ௱ | தாதெய்தெய் | ௧௯௰ |
| ஆருக்குப்பொன் | ௮௯ | கொள்ளடக்கனை | ௯௧ | திருநாளைப் | ௧௨௨ |
| ஆனந்தக்கா | ௱௩௧ | கோபுரதெரிசன | ௯௨ | திருநாளைப்போ | ௧௯ |
| இதுநல்ல | ௱௩௪ | சங்கரனைத்துதி | ௱௪௨ | தில்லைவலஞ் | ௧௧௯ |
| இதுவேதில் | ௯௫ | சந்நிதிவரலா | ௧௧௭ | தில்லைத்தில் | ௯௪ |
| இதுதானோதில் | ௯௪ | சபாதரிசனங் | ௧௯ | தில்லைச்சிதம்ப | ௪௧ |
| இந்தச்சடலம்வந் | ௱௭ | சற்றேவிலகியிரு | ௨௰ | தில்லைவெளி | ௪௪ |
| இந்தஜென்மம் | ௱௧௨ | சாதியில்தாழ்ந் | ௧௨௫ | தில்லைத்தலமெ | ௪௫ |
| இரக்கம்வராம | ௧௯ | சாதியிலுயர்ந் | ௨௫ | தில்லையம்பலத்த | ௪௯ |
| இவ்வுநாத்தி | ௱௯ | சிங்காரமான | ௧௮ | தில்லைச்சிதம்பர | ௫௯ |
| இவர்சிங்கார | ௧௮ | சிதம்பரமேநினை | ௫௫ | தில்லைத்தலத்தை | ௪௯ |
| இன்னம்வரந் | ௱௩௯ | சிதம்பரம்வந்து | ௯௯ | தெரிசனஞ்செய் | ௨௧ |
| உத்தாரந்தாரு | ௫௰ | சிதம்பரதரி | ௮௯ | தெரிசனம்கண் | ௧௯ |
| எந்நேரமும்மக் | ௯௰ | சிதம்பரம்போய் | ௮௮ | தெரிசிக்கவேணு | ௫௭ |
| எப்படிக்கெட் | ௱௧௫ | சிதம்பரம்போகா | ௪௰ | தேகவந்ததாறு | ௧௮ |
| எப்போவருவா | ௱௰ | சிதம்பரதரிசன | ௫௮ | தொண்டனைக் | ௧௨௨ |
| எல்லோரும்வாரு | ௨௪ | சிதம்பரம்போ | ௫௯ | நட்டநடவிளை | ௫௯ |
| எனக்குமிரங்கி | ௱௨௯ | சிதம்பரதரிசனம் | ௨௫ | நந்தன்சரித்திரம் | ௧௨ |

| பெயர். | பக்கம். |
|---|---|
| நந்தன்சிதம்பரம் | ௯௰ |
| நந்தனனந்தபரி | ௮௧ |
| நந்தனரும்வந் | ௪௮ |
| நந்தாஒருசேதி | ௨ |
| நந்தாவுனக்கிந்த | ௭௮ |
| நந்தாவுன்கினவி | ௮௩ |
| நமக்கினிநம்பய | ௪௨ |
| நந்தாக்குருவு | ௮௭ |
| நாமென்னசெய் | ௩௭ |
| நாளைப்போகா | ௨௪ |
| நீசனய்ப்பிறந்தா | ௱௧ |
| பத்திசெய்குவீ | ௩௮ |
| பத்திகள்செய்தா | ௪௧ |
| பத்திபுண்ணி | ௫௩ |
| பறையாநீசிதம்பா | ௫௧ |
| படுவாய்மன | ௫௫ |
| பார்த்துப்பிழை | ௪௧ |
| பித்தர்தெளிய | ௬௰ |
| பித்தனய்ப்போன | ௬௰ |
| புண்ணாகியவிந்த | ௪௩ |
| பெரியகிழவன் | ௩௬ |
| பெரியோன்சினம் | ௭௩ |
| போதும்போது | ௱௨ |
| மற்றதெல்லாம் | ௨௧ |
| மாங்குயில்கூவுது | ௯௨ |
| மாடுதின்னும்புலை | ௬௮ |
| மார்கழிமாதந்திரு | ௬௭ |
| மார்கழிமாதத்தி | ௬௫ |
| மீசைநரைத்து | ௩௫ |
| வருநலாமோவா | ௱௪ |
| வருவாரோஅரு | ௱௰ |
| வருவார்வருவார் | ௱௧ |
| வருவாரோவரந் | ௱௧௬ |
| வழிமறைந்தி | ௧௬ |
| வாராமலிருப்பா | ௱௰ |
| வாரிருக்குதே | ௧௬ |
| வானோர்புகழ்தில் | ௯௭ |
| விருதாச்சென்ம | ௧௧௬ |
| வேதம்படித்தது | ௯௯ |
| வேதியாஏழை | ௩௮ |

| கடுக்காய். | |
|---|---|
| அரகராசிவசிவ | ௪௰ |
| குதித்தார் | ௨௧ |
| வீரன் | ௩௭ |
| **பெரியகடுக்கா** | |
| திருநாளைப்போ | ௩௯ |
| **தெண்டகம்** | |
| சுத்திப்புலிபோ | ௪௰ |
| **சுலோகம்** | |
| மெள்ளப்பேசி | ௧௫ |
| தேவாரங்கள் | ௱௩௨ |
| **தரு அகராதி.** | |
| அடடாநந்தா | ௬௬ |
| அதிசயமோன் | ௧௨௰ |
| அய்யாசொல்லு | ௮௫ |
| அரகரதிரிபு | ௱௯ |
| ஆனந்தக்கூத் | ௬௨ |
| இனிஉன்சுற்ற | ௭௰ |
| உன்னதுமகிமை | ௨௪ |
| எதுக்கென்மீது | ௬௨ |
| கணநாதாசரண | ௬ |
| கொண்டானடி | ௧ |
| சிந்தனைசெய்து | ௪௫ |
| தடாகமோன் | ௨௧ |
| திருட்டுத்தனமாத் | ௭௧ |
| நந்தனாரேஉறை | ௮௧ |
| பத்தியாகஆ | ௬௩ |
| யாகோற்பவமா | ௪௨௯ |
| **நொண்டிச்சிந்து.** | |
| ஐயேஒருசேதி | ௪௬ |
| பழனமருங்கணையு | ௬ |
| அடடாயிதென் | ௧௧௭ |
| அவர்காரு | ௧௫ |
| இதுதானோ | ௱௫ |
| இவர்வெகு | ௪௫ |
| கனவிலிலுருவாக | ௩௨ |
| கீழேபுரண்டழு | ௪௧௪ |
| கெண்டாபணி | ௯௩ |
| சிவன்வேடிக் | |
| செய்யும்பணிவி | ௧௯ |
| நாளைப்போவே | ௨ |

| பெயர். | பக்கம், |
|---|---|
| வ[illegible] | ௩௪ |
| [illegible]பார்ப்பா[illegible] | ௩௩ |
| பெரியோரிருக்கு | ௱௯ |
| சேணிச்சாரு | ௨௩ |
| கலையேடாமல் | ௭௩ |
| செந்தாமரைமலர் | ௧௫ |
| வாருங்கள் | ௨௯ |
| தேடித்தேடித் | ௪௨௨ |
| ஆசைநேசராகுந் | ௯௧ |
| திருவளர்தருமா | |
| திருநாளைப்போ | ௪௬ |
| ஆக்மத்தியாந்தனுஞ் | ௮ |
| சீர்மேவுந்தில் | ௧௩௭ |
| **ஆனந்தக்களிப்பு** | |
| காணுதகண்ணே | ௧௮ |
| காணுமலிருக் | ௨௫ |
| நந்தாநீசிவபத்த | ௮௪ |
| இருச்சொல்அ | ௯ |
| நந்தனார்சிவவே | ௮ |
| நந்தனார்சிவசிவ | ௫௪ |
| நந்தனார்தில்லைய | ௨௬ |
| நந்தனார்தில் | ௫௬ |
| **அகவல்.** | |
| புலையர்எல்லைப்பி | ௩௮ |
| பாக்கியமீ | ௨௯ |
| **ஏசல்.** | |
| புலையர்பார்ப்பா | ௨௯ |
| புலையர்ஆண்டிம | ௩௰ |
| **கலித்துறை.** | |
| அண்டமான | ௧௧௪ |
| மாவளாதி | ௭௬ |
| **துக்கடா.** | |
| அரஅர | ௫௬ |
| சட்டமா | ௨௧ |
| நந்திதூர | ௨௰ |
| மாளாப்பிறது | ௨௨ |
| **சவாயி** | |
| கல்ட்வந்து | ௪௮ |
| சிவலோ | ௧௯ |

# விருத்தங்கள் அகராதி.


| பெயர், | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடிமுடியொன் | எ௫ | காலனுடல் | ௨௪ | தில்லைவாழந்த | க௨௫ |
| அடியவர்கள் | அ௬ | காலமேவந்தானி | ௪அ | நாளைப்போவே | ௯௩ |
| அந்தணர்க | க௩௫ | கைதொழு | க௨௨ | நாற்பதுவேலி | ௬க |
| அப்பரோவாரும் | எஅ | கொள்ளையெனும் | ௪க | நின்றவாங் | ௱எ |
| அல்லெலனுங்குழ | ௬எ | சங்கரனற் | அ | பகர்ந்துலகு | க௯ |
| அலப்பொழுது | அஎ | சாதியின்முறை | ௪௩ | படிபுகழ்தில்லை | ௫௰ |
| அறிவுமிகு | எ௪ | சாதிகுலம் | ௪௯ | பண்ணையாவையு | அ௰ |
| இந்தகமைாச | ௨௩ | காதிபேதமுங் | க௨ | பித்தமது | ௬௰ |
| இத்தனைநாட் | ௩௬ | சாததிரக்குபடை | அ௬ | புத்திசொல்லி | ௱எ |
| இப்பரிசாயிருக் | ௯௯ | சிலையணிந்திடும் | ௬அ | பொய்ச்சடல் | ௬௪ |
| இப்பரிசாயிருக் | கக௩ | சீதத்தீமே | க௨௯ | மறைக்கிழவ | க௨க |
| இப்பிறவிபோய் | கக௬ | சிரோருமிசை | ௨௰ | மறையவர்கண் | க௨எ |
| இரவுபகல் | ௪௯ | செல்கின்றபொ | ௱௬ | மனங்கண்ட | ௫௯ |
| இவ்வண்ணமிர | கக௫ | சேரிவந்தார் | ௨௨ | மாசடம்பு | க௩௫ |
| இன்னந்தரு | ககஎ | தம்பெருமா | க௨க | வக்கணைக்கார் | ௨௯ |
| ஊரில்விடுபடை | க௫ | தவம்பெறு | ௩௨ | வணக்கமாய்ச் | ௬௩ |
| ஐபரோயம்பலவ | க௨௫ | தாரில்லாத | எ௫ | வாருட்ட | ௱௩ |
| ஓதியடிவீரா | ௫௨ | திட்டமுடனடி | க௨௪ | வானமேவிய | அஅ |
| ஓங்காரமென் | ௪௪ | திருமறையோ | அ | மானிருந்த | எ௨ |
| கடுவருந்தியு | எ௯ | திருப்புனகூர்ச் | ௪௫ | வேதமோடறஞ் | அஎ |
| கதிரொருமுக | ௫௯ | திருவுடைமதில் | க௩ | வேதியரிப்ப | எ௪ |
| கழனியைபத்தெய் | ௪௪ | தில்லையில்போ | ௪க | யேதியமோ | ௫க |
| கற்படுங்கண் | அ௨ | தில்லையைக் | ௯௫ | | |